பக்கங்கள்: முப்பத்திரண்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 06 வெள்ளிக்கிழமை (18.02.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 084



02 கோலாகலமாக ஆரம்பித்த கிண்ணப்போட்டி



05 யுத்த முழக்கத்தில் 87 - உலகக் கிண்ணம்



16 இறுக்கமாகும் பாதுகாப்பு நடைமுறைகள்



18 பறக்கும் வீடியோ கமரா



25 விடுதலைச் சிறுத்தைகள் ஆர்ப்பாட்டம்

## இந்திய மீனவரை இன்று விடுவிக்க வேண்டும்

சென்னை, பெப்.18

யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 138 இந்திய மீனவர்களையும் இன்று வெள்ளிக்கிழமை விடுதலை செய்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா கண்டிப்பாகக் கூறியுள்ளார்.

### இலங்கையை எச்சரிக்கிறார் கிருஸ்ணா

தமிழ்நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள இந்த விவகாரம் தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா, நேற்றுக் காலை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

இதன்போது இந்திய மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளது குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்ட எஸ்.எம்.கிருஸ்ணா, அவர்களை விடுதலை செய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்த நடவடிக்கை குறித்து இந்தியாவின் ஆழ்ந்த கவலையை அமைச்சர் பீரிஸிடம் வெளியிட்டுள்ளதாகவும், இந்திய மீனவர்களுக்கு எதிராக இலங்கை மீனவர்கள் சட்டத்தை தமது கையில் எடுத்து கொண்டுள்ளது குறித்தும் அவரிடம் கூறியதாகவும் (32 ஆம் பக்கம் பார்க்க)

### நீதிமன்றம் ஊடாகவே விடுதலை

இலங்கை அதிகாரிகளால் கைதுசெய்து தடுத்துவைக் கப் பட்டுள்ள இந்திய மீனவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளின் ஊடாகவே விடுவிக்கப்படுவார்கள் என இலங்கையின் மீன் பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகளை (32 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை பிரிட்டன் அரசு ஆதரவளிக்க வேண்டும்

### 41 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் கமரூனுக்குக் கடிதம்

பிரிட்டன், பெப்ரவரி 18

**இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான சுதந்திரமான சர்வதேச விசாரணைக்குப் பிரிட்டன் ஆதரவளிப்பதாகத் தெரிவிக்க வேண்டும் என பிரிட்டனின் முக்கிய மூன்று கட்சிகளைச் சேர்ந்த 41 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டுக் கடிதம் ஒன்றை பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூனிடம் கையளித்துள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.** (29 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்கள் விவகாரம் கருணாநிதிக்கு டக்ளஸ் கடிதம்

யாழ்ப்பாணம், பெப்.18

இந்திய மீனவர்கள் இலங்கையில் சிறைப் பிடிக்கப்பட்டிருக்கும் நிலையில், தமிழக முதல்வர் மு.கருணாநிதிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இந்திய மீனவ மக்களுக்கும் ஈழத் தமிழ் மீனவர்களுக்கும் இடையில் கடற்பரப்பில் தற்போது ஏற்பட்டுவரும் தகராறுகள், முறுகல் நிலைகள் எமக்கு துயரங்களை தந்துகொண்டிருக்கின்றன என்று அந்தக் கடிதத்தில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நீண்ட கடிதத்தில் கூறப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

* தமிழக மீனவ உறவுகளோடு நான் பேசி அவர்களது நிலைமைகள் குறித்து அக்கறையோடு அறிந்து கொண்டேன். அப்போது தாம் இலங்கைக் கடல் எல்லை தாண்டி வந்ததன் தவறுகளுக் (32 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர் கைதைக் கண்டித்து தமிழகத்தில் தொடர் போராட்டம்

கொழும்பு, பெப். 18

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்த குற்றச்சாட்டின் பேரில் 138 இந்திய மீனவர்கள் சிறைப் பிடிக்கப்பட்டு இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றும் தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டங்களும், கண்டன ஊர்வலங்களும், வேலை நிறுத்தப் போராட்டங்களும் இடம்பெற்றன என அங்கிருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கடந்த 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 18 இழுவைப் படகுகளுடன் 112 மீனவர்கள் பருத்தித்துறை முனைக்கடல் தொழிலாளர்களால் சிறைபிடிக்கப்பட்டு பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் (32 ஆம் பக்கம் பார்க்க)

SMS ஊடான கிரிக்கட் தகவல்கள்

செயற்படுத்த CRICKET என டைப் செய்து 678 ற்கு SMS செய்யுங்கள்

மாதாந்தக் கட்டணம் ரூ. 30 மற்றும் பொருத்தமான வரிகள்

Dialog

## இலங்கை சுயாதிபத்தியத்தில் மன்மோகன் சிங் தலையீடு

### ஜே.வி.பி. கடும் கண்டனம்

கொழும்பு, பெப்.18

மீனவர் அத்துமீறல் விவகாரத்தில் இலங்கையின் சுயாதிபத்தியத்தைப் பாதிக்கும் வகையில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கைக்கு எச் சரிக்கை விடுத்திருப்பதை ஜே.வி.பி. வன்மையாகக் கண்டிக்கிறது என அக்கட் சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் எம்.பி.நேற்று தெரிவித்தார்.

ஜே.வி.பியின் செய்தியாளர் (32 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிப்போரில் பாலியல் வன்முறை விசாரணைக்கு சர்வதேச கட்டமைப்பு

கொழும்பு, பெப். 18

போரின் இறுதி நாள்களில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட அனைத்துக் குற்றச்செயல்கள் தொடர்பான முழு விசாரணைகளை மேற்கொண்டு குற்றமிழைத்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நீதியின் முன் நிறுத்த (29 ஆம் பக்கம் பார்க்க)

25 ஆவது உதயன் ஆண்டு நிறைவு விழா

இடம்: வீரசிங்கம் மண்டபம்

திகதி : ஞாயிறு 20.02.2011

நேரம் : மாலை 4 மணி

யாழ்.மண்ணில் முன்னணி தயாரிப்பாளர்களின் கலை நிகழ்வுகள், மெல்லிசை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறும்.

அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

# உலகக்கிண்ணக் களியாட்டத்தில்....
















**உதயனின்
உலகக் கிண்ண
கொண்டாட்டம்
2011**

# உலகக் கிண்ணப் போட்டியில் டோனி விளையாடத் தடை: ஐசிசி

உலகக் கிண்ணப் போட்டியை முன்னிட்டு ஐ.சி.சி. சம்பந்தப்பட்ட விளம்பரங்களில் மட்டுமே வீரர்கள் நடிக்க அனுமதி கொடுக்கப்பட்டது. இதனை மீறும் வீரர்கள் மீது விளையாடத் தடை விதிக்கப்படும் என ஐ.சி.சி. அறிவித்திருந்தது.

ஆனால் ஐ.சி.சியின் அறிவிப்புக்கு முன்னரே இந்திய வீரர்கள், பல விளம்பரங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தனர். இந்த பிரச்சினை தொடர்பாக டெண்டுல்கர் உள்ளிட்ட வீரர்கள் பி.சி.சி.ஐ.யிடம் தங்களது கருத்துகளை தெரிவித்தனர்.

தற்போது டோனிக்கு இதில் பிரச்சினை எழுந்துள்ளது. அவர் நடித்த விளம்பரம் ஐ.சி.சி. வரைமுறைக்குட்பட்ட விளம்பர நிறுவனமில்லை என தெரியவந்துள்ளது. இதனால் அவர் மீது ஐ.சி.சி. நடவடிக்கை எடுக்கலாம் என தெரியவருகின்றது.

பி.சி.சி.ஐ க்கும் இது தொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த பிரச்சினையில் நடவடிக்கை எடுக்கும் சூழல் ஏற்பட்டால் டோனி உலக கிண்ணத் தொடரில் விளையாட தடை விதிக்கப்படும் என தெரிகிறது. இதற்கிடையே விளம்பர நிறுவனம் தெரிவித்துள்ள விளக்கத்தில்



ஐ.சி.சி. நடைமுறைகள் எதுவும் மீறப்படவில்லை என கூறப்பட்டுள்ளது. (15)




# இலங்கை கிரிக்கெட் மைதானத்துக்கு ஐ.சி.சி.யின் புதிய உத்தரவு

பயிற்சி ஆட்டத்தின் போது ஏற்பட்ட குழப்பங்கள், உலகக் கோப்பை கிரிக்கெட் ஆட்டங்களின் போது ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இலங்கை. ஆர். பிரேமதாச மைதான நிர்வாகிகளுக்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை தலைநகர் கொழும்பில் உள்ள இந்த மைதானத்தில் இலங்கை - மேற்கிந்தியத்தீவுகள் இடையிலான பயிற்சி ஆட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அப்போது ரசிகர்கள் உள்ளே வரும் நடைமுறையில், அதிக கெடுபிடிகள் இருந்ததால் சிக்கல் ஏற்பட்டது.

மைதானத்துக்கு சுமார் அரை கி.மீ. தூரத்துக்கு முன்னால் உள்ள இடத்தில் டிக்கெட்டுகள் வழங்கப்பட்டன.

இதைத்தவிர கிரிக்கெட் நிர்வாக அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்டோர் உள்ளே வருவதிலும் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகம் இருந்தது.

ஐ.சி.சி. பத்திரிகை தொடர்பு அதிகாரி ஒருவருக்கு மைதானத்துக்கு வர முதலில் அனுமதி மறுக்கப்பட்டது. இது போன்ற பல தேவையற்ற குழப்பங்கள் போட்டியின் போது ஏற்பட்டன.

போட்டி ஏற்பாடுகளிலும் பல குழப்பங்கள் இருந்ததாக உள்ளூர் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில் உலகக் கோப்பை போட்டிகள் நடைபெறும் போது இது போன்ற தேவையற்ற குழப்பங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மைதான நிர்வாகிகளுக்கு ஐ.சி.சி. புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இந்த விஷயத்தில் இலங்கை கிரிக்கெட் ஏற்பாட்டாளர்கள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். இனி வரும் ஆட்டங்களில் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படாது என்பது உறுதி செய்யப்பட வேண்டுமென்றும் ஐ.சி.சி. கூறியுள்ளது.

இந்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்காக புதுப்பொலிவு பெற்றுள்ள கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் ஒரு காலிறுதி, ஓர் அரையிறுதி ஆட்டம் உட்பட மொத்தம் 7 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. (15)



# வண்ணமயமான கலை நிகழ்ச்சிகளுடன் கோலாகலமாக ஆரம்பித்தது உலகக் கிண்ணம்

பத்தாவது உலகக்கிண்ண போட்டித்தொடர் நேற்றைய தினம் சம்பிரதாயபூர்வமாக பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினாவினால், பங்களாதேஷின் தலைநகர் டாக்காவிலுள்ள பங்கபந்து தேசிய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மாலை 5.30 மணிக்கு இசை நிக்ழ்ச்சிகள், பாரம்பரிய ஊர்வலங்கள், அணிகளின் அறிமுகங்கள் என்பவற்றுடன் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பத்தாவது உலகக் கிண்ணத்தின் 'தீம்' இசைத் தொகுப்பு இந்திய முன்னணி இசையமைப்பாளர்களான சங்கர் மகாதேவன், ஈசான், லாய் ஆகியோரால் இந்திய, பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளின் தேசிய மொழியில் அறிமுகம் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 14 நாடுகள் பங்குபற்றும் பத்தாவது உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் பங்களாதேஷின் பிரதமர் ஷேக் ஹசினாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பங்களாதேஷ் நிதியமைச்சர் முகித், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஆசாத் அலிசர்கார், சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் சரத் பவார், பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவர் ஆகியோர் உலகக் கிண்ணப் போட்டி சிறப்புற நடப்பதற்காக வாழ்த்துச் செய்திகளை வழங்கினர்.

14 நாடுகளினதும் அணித் தலைவர்கள் அலங்கரிக்கப்பட்ட ரிக்ஷோக்களில் ஊர்வலமாக மைதானம் முழுவதும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பங்களாதேஷின் தந்தை என வர்ணிக்கப்படும் முஜிபுர் ரஹ்மானின் இராட்சத உருவப் படத்தை பங்களாதேஷின் பிரதமர் ஷேக் ஹசினா திறந்து வைத்தார்.

பின்னர் போட்டியில் பங்குபற்றும் 14 நாடுகளினதும் அவர்தம் கலாசாரங்களை வெளிப்படுத்தும் விதமான ஊர்திகள், கலாசார நடனங்கள், இசை நிகழ்ச்சிகள் என்பன கண்களுக்கும் செவிகளுக்கும் விருந்தளித்தன.

மாலை மங்கிய பின்னர் வாண வேடிக்கைகள் வர்ண ஜாலங்கள் காட்டி நின்றன.

இவற்றையும் விஞ்சும் விதமாக லேசர் மூலமான வர்ணங்கள் வானில் ஜொலித்தன. இந்த ஆரம்ப விழாவில் பங்களாதேஷின் கல்லூரிகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 500 மாணவ, மாணவியர் கலந்துகொண்டு தமது நடன நிகழ்ச்சிகளால் பார்ப்போரை பரவசப்படுத்தினர்.

மேலும் 3 ஆயிரத்து 500 இராணுவ வீரர்களும் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளை வழங்கினர்.

இந்த கண்கவர் நிகழ்ச்சிகள் மக்களுக்கு வெறும் இரண்டே கால் மணிநேரமே கண்களுக்கு விருந்தளித்தன.

உலகக் கிண்ண நிகழ்ச்சிகளுக்கான விசேட ஏற்பாடுகள் பங்களாதேஷினால் சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தன.

தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக தலைநகர் டாக்காவில் பல பகுதிகளிலும் குறிப்பாக வீரர்கள் தங்கியிருந்த ஹோட்டல்கள், ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்ற பங்கபந்து தேசிய விளையாட்டு மைதானம் என்பவற்றைச் சுற்றி இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டிருந்தனர்.

கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் வெகு சிறப்பாக ஆரம்ப வைபவம் நேற்று இடம் பெற்று முடிந்தது.

(15)

**ஒற்றைக்கிண்ணத்துக்காய் பங்கேற்கும் அணித் தலைமைகள்...**




**தினமொரு பரிசுப் போட்டி**

இந்தியா - பங்களாதேஷ் இடையிலான நாளைய (19.02.2011) ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி எது?

........................................

பெயர் : ........................................

தே.அ.இல. : ........................................

முகவரி : ........................................

........................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (19.02.2011) நண்பகல் 2 மணிக்கு முன் தினமொரு பரிசு உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கவும்.

வெல்வதற்குத் தயாராகுங்கள்

மாபெரும் காலிறுதிப் போட்டி இதற்கும் பரிசு உண்டு

**மாபெரும் காலிறுதிப் போட்டி**

காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெறும் அணிகள் எவை?

1. ........................ 5. ........................
2. ........................ 6. ........................
3. ........................ 7. ........................
4. ........................ 8. ........................

பெயர் : ........................................

தே.அ.இல. : ........................................

முகவரி : ........................................

........................................

போட்டி முடிவுத் திகதி
10.03.2011

தினமொரு பரிசுப் போட்டி

**கேற்வே வழங்கும்**

**4** லட்சம் வரையான மொத்தக் கூப்பன்கள் ஒருவருக்குத் தலா 9 ஆயிரம் வீதம்

**கம்பியூட்டர் ருடே வழங்கும்**

தினமும் வெல்லும் ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான கம்பியூட்டர் ருடே இலவச சந்தா

**மாபெரும் இறுதிப் போட்டி**

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

........................................

போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?

........................................

பெயர் : ........................................

தே.அ.இல. : ........................................

முகவரி : ........................................

........................................

போட்டி முடிவுத் திகதி
15.03.2011

1ஆம் பரிசு
தொகையை முடிந்தால் கற்பனை செய்துபாருங்கள்

2ஆம் பரிசு
காத்திருங்கள்

3ஆம் பரிசு
விரைவில் உங்கள் கைகளில் லட்சங்கள்

மாபெரும் இறுதிப் போட்டி

மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்

**போட்டி விதிகள்**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானலும் அனுப்பலாம். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தே.அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் தே.அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தவர்களோ போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி உதயனில் அறிவிக்கப்படும். சகல போட்டியாளர்களுக்குமான பெயர்களை இடது மேல் மூலையில் குறிப்பிட்டு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

# ஏழாவது உலகக் கிண்ணத்தில் ஆடித்தீர்த்த 'திரில்' ஆட்டங்கள்



-டிலீப்-

சுற்றிச் சுழன்று மீண்டும் சென்றது இங்கிலாந்துக்குப் போட்டிகள். 1999 ஆம் ஆண்டுமே ஏழாவது கிண்ணப் போட்டிகள். பங்களாதேஷ், கென்யா, ஸ்கொட்லண்ட் கத்துக்குட்டிகளாய் கிண்ணத்துக்கு பிரவேசம். இங்கிலாந்து, இலங்கை, இந்தியா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், நியூஸிலாந்து, மேற்கிந்தியதீவுகள், கென்யா மோத ஐ.சி.சி அனுமதி.

இவர்கள் இரண்டாக பிரிந்தனர் குழுக்களாக. குழு மோதலில் முதல் மூவர் தகுதி சுப்பர் சிக்ஸுக்கு. அரையிறுதிக்கு அதிலிருந்து இருவர்.

கிண்ணம் யார் வெல்வார்கள்? பலமான கேள்வி. நடப்புச் சம்பியன் இலங்கையின் நிலையும் மோசம். சொந்த மண் இங்கிலாந்துக்கு, சொன்னார்கள் வெல்வோம். வென்று காட்டினார்கள் இலங்கையை முதல் போட்டியில். பின்னர் கத்துக்குட்டிகளைத் தவிர வெல்லவில்லை யாரையும். கிண்ணம் வென்ற ஆஸியும் லீக்கில் வாங்கிக் கட்டியது அடி. முன்னணி அணிகள் ஆஸியின் வெற்றிக்கு முட்டுக்கட்டை. பாகிஸ்தான் , நியூஸிலாந்து ஆஸிக்கு குடுத்தது பலமான அடிகள். வாங்கிய அடிகளை தீர்த்துக்கட்டியது, புதுமுகங்களிடம்.

இந்தியாவும் இங்கே வாங்கியது அதிர்ச்சி அடிகள். சிம்பாவே சீறியது இந்தியாவிடம் மட்டுமே. அதிஷ்டம் சிம்பாவே பக்கம் திரும்பல். இதனால் வந்தது தோல்வி இந்தியாவுக்கு. ஐம்பது ஓவர்கள் ஆட்டம் ஆறுதலாய் ஆடியது சிம்பாவே. 252/9 முடிவுக்கு வந்தது ஆட்டம். அன்டி பிளவர் அசத்தல். 68 ஓட்டங்கள் அவரின் பங்களிப்பு. அரைச் சதம் கடந்தது இந்தியா அள்ளிக் கொடுத்த உதிரி. தாமதமாகியது நேரம், குறைக்கப்பட்டது நான்கு ஓவர்கள். 46 ஓவரில் இந்தியா கடக்கவேண்டும் 253 ஓட்டத்தை. இந்தியர்களின் அதிரடிக்கு முட்டுக்கட்டை போட்டது ஒலங்கா, ஸ்ரீக் பந்து வீச்சு. மீதமிருந்தது ஒரு ஓவர், வெற்றிக்குத் தேவை மூன்று ஓட்டம். ஒலங்கா முடித்து வைத்தார் இந்தியர்களின் இன்னிங்ஸை.

பாகிஸ்தான் தகுதி சுப்பர் சிக்ஸுக்கு. ஆடியது ஆறுதல் ஆட்டம் பங்களாதேஷுடன். வெற்றித் தாகம் பங்களாதேஷுக்கு. அதற்கு விட்டுக்கொடுத்தது, பாக். உதிரியாய் 40 ஓட்டங்களை உதிர்ந்தது. 233/9 ஓட்டங்களை பெற்றதுடன் நிறைவுக்கு வந்தது ஐம்பது ஓவர். பங்களாதேஷ் விடவில்லை பாகிஸ்தானை. விரைவில் முடித்துக் கட்டியது. 161 ஓட்டங்களுடன் ஆட்டம் நிறைவு.

போட்டிக்கு சென்றதற்காய் இலங்கை வென்று வந்தது இருவரை. சிம்பாவே, கென்யா இலங்கையிடம் அடிவாங்கப் பிறந்தவை. பொறுப்பில்லா ஆட்டம் இலங்கை. நடப்புச் சம்பியன் பட்டம் வேறு இவர்களுக்கு.

ஆஸி தொடங்கியது அதிரடியை. சுப்பர் சிக்ஸ் ஆஸியின் ஆதிக்கம். அன்று தொடங்கிய ஆஸியின் வெற்றிப் பயணம் இதுவரை முடியவில்லை. இந்தியா, தென்னாபிரிக்கா ஆஸியிடம் அடிவாங்கியவை. பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, ஆஸி நுழைந்தது அரையிறுதிக்கு.

பாகிஸ்தான்-நியூஸிலாந்து முதல் அரையிறுதி. அபார வெற்றியுடன் இறுதிக்குள் புகுந்தது பாக். மற்றைய அரையிறுதி, மறக்கமாட்டார்கள் வாழ் நாளில் பார்த்தவர்கள் யாரும். துரதிஷ்டத்தின் குழந்தை பெயரை மீண்டும் உறுதிப்படுத்தியது ஆபிரிக்கா. ஆஸி -ஆபிரிக்கா இரண்டாவது அரையிறுதி ஆட்டம்.

முதலில் ஆடியது ஆஸி. ஆபிரிக்காவின் பந்து வீச்சு ஆஸியை அதிரடியாய் ஆடவிடவில்லை. பொலக்கின் பந்து வீச்சு விட்டுவைக்கவில்லை ஆஸி வீரர்கள் எவரையும். தத்தளித்தது ஆஸி. தலைவர் ஸ்ரீவோ, பெவனுடன் இணைந்து மீட்டார். இறுதி யில் 213/10 (49.2), ஆஸியும் சளைத்தது அல்ல பந்து வீச்சில். இறுதிக்கணம் வரை முடிவில்லை வெற்றி. இறுதி ஓவரில் ஆபிரிக்காவுக்குத் தேவை ஒன்பது ஓட்டங்கள். கைவசம் இருப்பதோ ஒரு விக்கெட். வீசப்பட்டது பிளமிங்கால் முதல் பந்து. அடிக்கப்பட்டது குளூஸ்னரால். அனுப்பப்பட்டது பவுண்டரிக்கு. ஐந்து பந்துகள் இருக்கின்றன. தேவைப்பட்டன ஐந்து ஓட்டங்கள். வீசப்பட்டது இரண்டாவது பந்து. எதிர்பார்க்கவில்லை ஆஸி, தடுக்கவில்லை பந்தை. ஆபிரிக்காவுக்கு வந்து சேர்ந்தது மீண்டுமொரு பவுண்டரி. சமநிலைக்கு வந்தது 'ஸ்கோர்'. வெற்றியின் விளிம்பில் ஆபிரிக்கா. வந்தது வினை நான்காவது பந்தில். டொனால்டின் அவசரம். பறித்து விட்டது தென்னாபிரிக்கர்களின் வெற்றியை.

பாக். - ஆஸி இறுதியில் மோதல். ஆஸியின் ஹட்ரிக் கிண்ணம் தொடங்கியது அன்று.



# 1999 தொடர்ந்தது கிண்ண வேட்டை

## ஆஸியின் அசத்தல் பந்து வீச்சு ஆடிப்போனது பாகிஸ்தான்

மயிரிழையில் உயிர் தப்பி உட்புகுந்தது ஆஸி. இமாலய வெற்றிபடைத்து இறுதிக்கு வந்தது பாகிஸ்தான். இரண்டும் இறுதிப்போட்டியில் மோதல். எல்லோருக்கும் எதிர்பார்ப்பு. பாக்கின் கைக்கு செல்லப் போகின்றது இரண்டாவது கிண்ணம். காரணம் உண்டு கருதியதற்கு. லீக் ஆட்டத்தில் ஆஸியின் ஆட்டம் அடங்கிப்போனது பாக்கிடம்.

பரபரப்புடன் தொடங்கியது போட்டி. துடுப்பெடுத்தாட பாகிஸ்தான் தீர்மானம். அந்தத் தீர்மானத்தை இன்றும் நினைத்துக் கண்ணீர் விடுகின்றது பாக். சயீட் அன்வர்- வகவதுல்லா வாஸ்ரி பாக்கின் ஆட்டத்தை தொடக்க வந்தவர்கள். வந்தவர்களுக்கு விருந்து கொடுத்தார் மெக்ரா. ஒரு ஓட்டத்துடன் வாஸ்ரின் ஆட்டம் 'வேஸ்ரானது'. பாக். வீரர்களுக்கு இரட்டை இலக்கம் எட்டுவதே எட்டாக் கனி. அப்துல் ரஷாக் -இஜாஸ் அஹமட் சிறியதொரு இணைப்பு. போதாது பாக்கிற்கு, இருந்தும் விடாது சரித்தது விக்கெட்டுக்களை ஆஸி. அரையிறுதியில் நியூஸியை அரைத்துமென்ற பாக் வீரர்களின் விக்கெட்டுக்கள் ஆஸி யால் அள்ளப்பட்டது. வரிசையாய் வரிந்துகட்டி வோர்ன், றயிப்வெல், மூடி, மெக்ராத் தாக்கித் தகர்த் தனர் பாக்கின் கோட்டையை. 132/10 (39)

கூடவே அள்ளியும் கொடுத்தனர் உதிரிகளை. அதிகூடிய ஓட்டம் உதிரியால்தான். புரிந்து கொள்ளுங்கள் பாக். வீரர்களின் திறமையை. வோர்னின் சுழற்றலில் சிக்கியது நான்கு விக்கெட்டுக்கள்.

ஆஸியின் திறமைக்கு இதுவொன்றும் இலக்கல்ல. வந்தார் கில்கிறிஷ்ட். அடித்தெடுத்தார் ஓட்டங்களை. மார்க்வோ மறு முனையில் தடுத்தாடினார். 36 பந்துகளில் எட்டியது கில்கிறிஷ்டின் அரைச் சதம். சக்லீன் முஷ்டாக் பந்து அவரை அனுப்பிவிட்டது பவிலியனுக்கு. பொன்டிங் நேரம் சரியில்லை அன்று. 24 ஓட்டங்களுடன் பக்குவமாய் அனுப்பி வைத்தார் அக்ரம். எட்டியது இருபதாவது ஓவரில் வெற்றி. எஞ்சியிருந்தது எட்டு விக்கெட்டுக்கள். ஆஸியின் கையில் வீழ்ந்தது இரண்டாவது கிண்ணம்.

சிக்கனமாய் சுழற்றி விக்கெட்டுக்களை பறித்ததால் வோர்ன் ஆட்டநாயகன். லான்ஸ் குளூஸ்னர் போட்டியின் நாயகன்.

-டிலீப்-

Picture of the match



ஆரவாரம்: 1999 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிப்போட்டிக்கு ஆஸ்திரேலியா அணி நுழைந்த பூரிப்பில்....

### 1999 ஏழாவது உலகக் கிண்ணம்

ஆட்டம்: பாகிஸ்தான் Vs ஆஸ்திரேலியா நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

முடிவு: ஆஸ்திரேலியா 8 விக்கெட்டுக்களால் வெற்றி ஆட்டநாயகன்: ஷேன்வோர்ன்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சயீட் அன்வர் | b பிளமிங் | 15 | 17 | 3 | 0 |
| வகவதுல்லா வாஸ்ரி | c மார்க்வோவ் b மெக்ராத் | 01 | 14 | 0 | 0 |
| அப்துல் ரஷாக் | c ஸ்ரீ வோவ் b மூடி | 17 | 51 | 2 | 0 |
| இஜாஸ் அஹமட் | b வோர்ன் | 22 | 46 | 1 | 0 |
| இன்ஷமாம் உல் ஹக் | c கில்கிறிஷ்ட் b றயிப்வெல் | 15 | 33 | 0 | 0 |
| மொயின் கான் | c கில்கிறிஷ்ட் b வோர்ன் | 06 | 12 | 0 | 0 |
| சயீட் அப்பிரிடி | lbw b வோர்ன் | 13 | 16 | 2 | 0 |
| அஷார் மகமூட் | c & b மூடி | 08 | 17 | 1 | 0 |
| வாஸிம் அக்ரம் | c ஸ்ரீ வோவ் b வோர்ன் | 08 | 20 | 0 | 1 |
| சக்லீன் முஷ்டாக் | c பொன்டிங் b மெக்ராத் | 00 | 4 | 0 | 0 |
| சொலைப் அக்தர் | ஆட்டமிழப்பில்லை | 02 | 6 | 0 | 0 |
| உதிரிகள் | (lb10, w 13, nb 2) | 25 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| மெகராத் | 09 | 13 | 2 | 3 |
| பிளமிங் | 06 | 30 | 1 | 0 |
| றயிப்வெல் | 10 | 29 | 1 | 1 |
| மூடி | 05 | 17 | 2 | 0 |
| வோர்ன் | 09 | 33 | 4 | 1 |

TOTAL - 132/10 (39)

விக்கெட் இழப்பு:
1-21 (வாஸ்ரி) , 2-21 (அன்வர்), 3-68 (ரஸாக்), 4-77 (இஜாஸ்), 5-91 (மொயின்கான்), 6-104 (இம்சமாம்), 7-113 (அப்ரிடி),8-129 (மஹமுத்), 9-129 (வசிம் அக்ரம்), 10-132 (முஸ்ராக்)


| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| மார்க் வோவ் | ஆட்டமிழப்பில்லை | 37 | 52 | 4 | 0 |
| கில்கிறிஷ்ட் | C இன்சமாம் b சக்லீன் | 54 | 36 | 8 | 1 |
| பொன்டிங் | C மொயின்கான் b அக்ரம் | 24 | 27 | 3 | 0 |
| லேமன் | ஆட்டமிழப்பில்லை | 13 | 9 | 2 | 0 |
| ஸ்ரீ வோவ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மைக்கல் பெவன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ரொம் மூடி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| வோர்ன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| றயிப்வெல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பிளமிங் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மெக்ராத் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (lb1, w 1, nb 3) | 05 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| வாஸிம் அக்ரம் | 08 | 41 | 1 | 1 |
| சொலைப் அக்தர் | 04 | 37 | 0 | 0 |
| அப்துல் ரஷாக் | 02 | 13 | 0 | 0 |
| அஷார் மகமூட் | 02 | 20 | 0 | 0 |
| சக்லீன் முஷ்டாக் | 4.1 | 21 | 1 | 0 |

TOTAL - 133/2 (20.1)

விக்கெட் இழப்பு:
1-75 (கில்க்றிஸ்ட்) , 2- 112 (பொன்டிங்).

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர்




## உலகக் கிண்ண வாசகர் கணை

## உதயனின் உலகக் கிண்ண கொண்டாட்டம் 2011

# யுத்தத்தின் முழக்கங்களுக்கிடையே ரசித்த 1987ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள்



வே.தபேந்திரன்
கைதடி வடக்கு, கைதடி.



ஆசிய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் 1987 இல் 4ஆவது உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெற்றன. அருகில் இருக்கும் நாடு தான் எம் நாடு. ஆயினும் யுத்தத்தின் கோரத்தால் அதனை நாம் யாழ்ப்பாணத்தில் இருந்து தொலைக்காட்சியில் பார்த்து மகிழ முடியவில்லை.

1987 ஒக்ரோபர் 10ஆம் நாளன்று பிற்பகல் வேளையில் யாழ். கோட்டை முன் வீதியில் இந்திய அமைதிப் படைக்கு எதிராக தமிழீழ விடுதலைப்புலிகளின் துப்பாக்கி முதல் ரவையைத் துப்பியது. இந்திய- புலிகள் யுத்தம் தீவிரம் பெற்றது. அதற்கு ஓரிரு தினங்கள் முன்னர் தான் 4ஆவது உலகக் கிண்ணப் போட்டிகள் ஆசிய மண்ணில் அரங்கேறத் தொடங்கின. 1983 இல் 3ஆவது உலகக் கிண்ணப் போட்டிகள் இங்கிலாந்தில் நடைபெற்றபோது அதனை தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு மூலம் முதன் முதலாகப் பார்த்து மகிழ்ந்தோம், இந்தியா வெற்றிக் கிண்ணத்தை முத்தமிட்டபோது ஆசியர்களான நாமும் ஆனந்தத்தில் மூழ்கிப் போனோம்.

1987ஆம் ஆண்டின் போட்டிகள் ஆசிய நாடுகளில் நடைபெறும் நாளை ஆவலுடன் பார்த்திருந்தோம்.

கோலாகல விழாக்கோலத்துடன் உலகக் கிண்ணப் போட்டிகள் தொடங்கின. அவற்றைப் பார்த்து மகிழ்ந்தோம். ஆனால் மகிழ்வு தொடர்ந்து நீடிக்கவில்லை. ஓரிரு தினங்களில் இந்திய - புலிகள் யுத்தம் தொடங்கியது. அது தொடங்கிய சில மணிநேரங்களிலேயே மின்சாரமும் நின்று போனது.

அத்துடன் யுத்தமும், போட்டியைப் போன்று தீவிரமாகிச் சென்றது. மக்கள் கையில் அகப்பட்ட பொருள்களுடன் தமது பாதுகாப்பு கருதி இடம் பெயரத் தொடங்கினர். எமது குடும்பமும் இடம் பெயர்வுச் சூழலில் சிக்கியது.

மின்சாரம் இல்லை. தொலைக்காட்சி பார்க்க வசதி இல்லை. 'ரோச் பற்றரி'யை வாங்கி வானொலிக்குப் போட்டேன். வானொலியில் வந்த நேர்முக' வர்ணனையை செவிமடுப்பதில் கவனம் செலுத்தினேன். ஷெல் தாக்குதல்கள், அடிக்கடி கேட்கும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் இவற்றிலிருந்து தப்ப இடைக்கிடை பதுங்குகுழி வாழ்க்கை.

யுத்தம் தந்த பயங்கரமும் மன உளைச்சலும் நீங்க கிடைத்த ஒரேயொரு மருந்து வானொலியில் நேர்முக வர்ணனை கேட்பதாக இருந்தது.

ஆசிய நாடுகளின் ரசிகர்கள் எல்லோரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் திருவிழாவில் மூழ்கியிருக்க நாமோ பிணங்களுக்கு மத்தியில் நின்று, உயிர்வாழ உத்தரவாதம் அற்ற சூழலில் இருந்து வானொலி என்ற ஊடகம் ஒன்றின் மூலமாக மட்டும் அறிந்து கொண்டிருந்தோம். இறுதிப்போட்டி இந்திய, கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றது. இரு ஆங்கிலக் கனவான்களின் போட்டியாக அது அமைந்திருந்தது.

ஆம் கிரிக்கெட்டின் தாயகம் இங்கிலாந்தும், சேயகம் ஆஸ்திரேலியாவும் மோதியதாக, அப்போட்டி அமைந்தது. கிரிக்கெட்டின் தாயகத்தவர் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரிக்க வேண்டுமென்பது எனது விருப்பமாக இருந்தது. இருந்தும் என்ன பயன்? நினைப்பதெல்லாம் நடப்பதில்லைத்தானே!

கிரிக்கெட்டை உருவாக்கியவர்கள் இன்று வரையும் சம்பியனாகி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரிக்காதது பின்னைய வரலாறு.

அந்தமுறைப் போட்டியை யுத்தச் சன்னங்களின் ஒலிகளுக்கு மத்தியில் செவிப்புலனின் துணைகொண்டு கேட்டேன்.

இறுதிப் போட்டியன்று எனது வானொலிக்கு அண்மையாக கிரிக்கெட் ரசிகர்கள் கூடி நின்றனர்.

அப்போதைய சூழ்நிலையில் 'டோச் பற்றரி' வாங்கவேண்டுமென்றால், குதிரைக் கொம்பு அதிக விலைகொடுத்து வாங்க வேண்டும். அன்றைய சூழ்நிலையில் தொழில் இல்லாது வெட்டியாக இருந்த எமக்கு, பற்றரி வாங்கவோ முடியாது. இறுதியில் எல்லோரும் பகிர்ந்து பற்றரி வாங்கினோம். அதுவும் பாவித்த பற்றரி. கேட்கத் தொடங்கினோம் வர்ணனையை, நெருங்கியது போட்டியின் இறுதிக் கட்டம். அப்போது முடிவுக்கு வந்தது, எமது பற்றறி. மூளையின் வேகத்தில் செயற்பட்டோம் நாம். கவிழ்த்தோம் சைக்கிளை. சுற்றினோம் டைனமோவை.

ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடியது. அது நிர்ணயித்த இலக்கை இங்கிலாந்து அடையும். அடைய வேண்டுமென்பது எமது கனவாக இருந்தது. அது நிர்ணயித்த இலக்கை இங்கிலாந்தால் நெருங்கக் கூட முடியவில்லை.


ஆஸ்ரேலியா முதன் முறையாக வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது. இங்கிலாந்து தோற்றது, அதன் தீவிர ரசிகர்களாகிய எமக்கு பெருத்த ஏமாற்றத்தையே தந்தது.

கிரிக்கெற்றின் தாயகமான இங்கிலாந்து 1979, 1987, 1992 ஆகிய ஆண்டுகளில் இறுதிப் போட்டிக்கு வந்து சமராடிய போதும் கிண்ணத்தைக் கைப்பற்றும் பாக்கியம் கிடைக்கவில்லை.

உலகக் கிண்ண கிரிக்கெட் பற்றிய பசுமைம நினைவுகளை இங்கே பலரும் பதிவு செய்துள்ளனர்.

சற்று வித்தியாசமாக இருக்கட்டுமே என்று யுத்த அபாய வாழ்வினுள் செவி மடுத்தவற்றை ஞாபகத் திரையை தூசி தட்டி இங்கே பதிவேற்றம் செய்துள்ளேன்.





# பாசத்தளை அறுக்கும் மாசிமகம்

சைவ சமயிகளின் சிறப்பு மிகு சிவ விரதங்களில் இன்றைய மாசிமக விரதமும் ஒன்றாகும். இன்று அனுட்டிக்கப்படுகின்ற இந்த மாசிமக விரதம் வெள்ளிக்கிழமை நாளிலும் பௌர்ணமி நாளிலும் அமைந்திருப்பது அதிவிசேஷமாகும்.

இந்த விரதம் அனுட்டிப்பவர்கள் காலை எழுந்து புனித தீர்த்தத்திலே நீராடி சிவ சிந்தனையுடன் சந்தியாவந்தனம் முடித்து சிவாலய தரிசனம் செய்ய வேண்டும். மதியம் ஒரு பொழுதுண்டு இரவு பால்பழம் அருந்தலாம்.

இம்மாசி மக விரதம் அனுட்டித்தால் புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்குப் புத்திர பாக்கியம் கிடைக்கும் என்று கருதப்படுகின்றது.

மாசிமகம் என்பது மாமாங்கம் என மருவிற்று என்று கூறுவாருமுளர். எமது ஈழவள நாட்டிலேயுள்ள மட்டக்களப்பிலே இம் மாமாங்கத் தீர்த்தம் உண்டு. இதில் நீராடி ஈர ஆடையுடன் எம் பெருமானை வணங்கி வேண்டுதல் செய்தால் நினைத்த காரியம் கைகூடும் என்னும் நம்பிக்கை இப்பொழுதும் வழக்கிலிருக்கிறது.

இந்த மாசி மகப்பெருமை பற்றி ஒரு வரலாறும் உண்டு. முன்னொரு சமயம் வருணபகவான் பிரமகத்தி தோஷத்தினால் அவலப்பட்டாராம். இது அவரைச் சமுத்திரத்திலே கட்டுக்குள் அடக்கி வைத்திருந்ததாம். இதையறிந்த தேவர்கள் சிவபெருமானிடம் விஷயத்தைக் கூறி முறையிட்டனர். அதனால் மனமிரங்கிய பரமசிவன் தானே எழுந்தருளி வந்து வருணனின் பாசக்கட்டை அறுத்தருளினார். அந்த நாள்தான் இந்த மாசி மகம்.

பிரமகத்தி தோஷத்தினின்றும் விடுபட்ட வருணபகவான் கூனிக் குறுகிப் பயபக்தியுடன் சிவனை வந்தித்துச் சிந்தித்துச் சேவித்து ''எல்லாம் வல்ல பரம் பொருளே! சிறியேன் விடும் ஒரு சிறு விண்ணப்பம்''என்று சிவனடி பணிந்தார். அதனால் மகிழ்ந்த சிவன் ''வருணனே! உன் விருப்பம் என்னவோ கூறுவாயாக?'' என்று திருவாய் மலர்ந்தருளினார். உடனே வருணபகவான் சிவனை மும்முறை வலம் வந்து வணங்கி ''பிரபு! எனக்கு விடுதலை கிடைத்த இந்த மாசிமக நன்னாளில் கடல், சமுத்திரம், நீரேரி, குளம், ஆறு, நதி முதலானவற்றில் பக்தியுடன் புண்ணிய புனித நீராடி வணங்குபவர்களின் பாசத்தளைகளை அறுத்து அவர்களுக்கு முத்தியின்பத்தையருளிச் செய்ய வேண்டும். இதுவே என் விண்ணப்பம்'' என்று கூறிப் பணிந்து நின்றார். அதற்குப் பரமசிவனும் ''அவ்வாறேயாகட்டும்'' என்று வரம் நல்கியதாகக் கூறப்படுகின்றது.

அந்த நாள் முதலாக இந்த மாசிமகம் புனித நாளாகக் கருதப்பட்டது. மேலும், சிவனை மதிக்காமல் அவரை அவமதித்த தக்கன் வேள்வி செய்த போது அவிர்பாகத்தைக் கொடுக்க மறுத்தான். அதனால் அவனைத் தண்டிக்க உமையவள் அவனுக்கு மகளாகப் பிறந்த தினமும் இந்த மாசிமகம் என்று கூறப்படுகிறது.

பிரஹஸ்பதி எனப்படுகின்ற வியாழபகவான் மக நட்சத்திரத்துடன் கூடி கும்பராசிக்குச் செல்லும் போது மகாமகம் எனும் புண்ணிய காலம் உருவாகிறது. இந்த நாள் இந்தியாவிலே கும்பகோணத்திலே மிகவும் குதூகலத்துடன் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. 'கும்பமேளா' என்று இன்றைய மாசி மகம் பெருவிழாவாக நிகழ்த்தப்பெறும்.

இன்றைய மாசிமகம் புனித புண்ணியப் பெருநாளில் நல்ல காரியங்கள் செய்ய நிச்சயம் செய்து புதுக்கணக்கு எழுதி வணிகத்தைப் பெருக்கும் நிகழ்வும் இடம்பெறுவதுண்டு.

அதுவும் இந்த நல்ல நாள் வெள்ளிக்கிழமை பௌர்ணமியில் அமைந்தபடியால் சைவப் பெரு மக்கள் திருமண நிச்சய தார்த்தமும் புதிய வேலைகள் ஆரம்பித்தலும் முதலானவற்றைச் செய்யவும் சுற்றஞ் சூழ விருந்தோம்பி மகிழவும் செய்வார்கள்.

**திருவரன்**

ஆகவே, சிவபெருமானுடைய திவ்ய திருவடிகளை அடைந்து நற்கதிபெற்றுச் சிறப்புற நாமும் மாசிமக விரதமிருந்து பயன்பெறுவோமாக.

## பரிசில்கள் வழங்கும் நிகழ்வு மொரட்டுவவில் ஞாயிறன்று

இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் சிக்கன நட்புறவு சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளில் கடந்த வருடத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மற்றும் உயர்தரத்தில் விசேட சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றவர்கள் ஆகியோரைக் கௌரவித்து பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மொரட்டுவவில் உள்ள கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். இந்தப் பரீட்சைகளில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுக்கு இது தொடர்பாக தனித்தனியே ஏற்கனவே கடிதங்கள் அனுப்பி வைத்துள்ளதாகவும் குறித்த நேரத்துக்குப் பிள்ளைகள் சமுகம் தந்து பரிசில்களைப் பெற்றுச் செல்லுமாறும் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (501)


ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 100
திகதி - 16.02.2011

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: Q | அதிர்ஷ்ட இலக்கம்: 03 | வெற்றி இலக்கம்: 2 5 9 7 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Q 03 2 5 9 7 2 | ரூ. 10,116,314.00 | - |
| 1 பரிசு | 03 2 5 9 7 2 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 2 5 9 7 2 | ரூ. 100,000.00 | 01 |
| 3 பரிசு | 5 9 7 2 | ரூ. 10,000.00 | 23 |
| 4 பரிசு | 9 7 2 | ரூ. 1,000.00 | 253 |
| 5 பரிசு | 7 2 | ரூ. 50.00 | 2514 |
| 6 பரிசு | 2 | ரூ. 20.00 | 24000 |
| இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு | | | |
| 7 பரிசு | 2 5 9 7 | ரூ. 1,000.00 | 24 |
| 8 பரிசு | 2 5 9 | ரூ. 100.00 | 252 |
| 9 பரிசு | 2 5 | ரூ. 50.00 | 2514 |
| 10 பரிசு | Q | ரூ. 20.00 | 9909 |
| 11 பரிசு | Q 03 | ரூ. 100.00 | 1165 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,678,280.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ.10,116,314.00


## முதியோர் இல்ல புனரமைப்பு பணி தாமதம்

கைதடி முதியோர் இல்லத்தில் விடுதிகளின் புனரமைப்பு வேலைகள் இழுபறி நிலையில் காணப்படுவதனால் அங்குள்ள முதியவர்களைப் பராமரிப்பதில் சிரம மேற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதிகளின் புனரமைப்பு வேலைகளைப் பொறுப்பேற்றுள்ளவர்களின் செயற்பாடுகள் தாமதமாவதால் புனரமைப்பு வேலைகளை நிறைவுசெய்யத் திட்டமிட்டிருந்த காலப்பகுதியை விட மேலும் பல நாள்கள் தாமதமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதியோர் இல்லத்தில் 94 ஆண்களும் 68 பெண்களும் தற்போது பராமரிக்கப்பட்டுவருகின்றனர். ஆண்கள் மூன்று விடுதிகளிலும் பெண்கள் மூன்று விடுதிகளிலும் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தனர். விடுதிகளின் திருத்த வேலை காரணமாக மூன்று விடுதிகளிலும் இருந்த ஆண்கள் அனைவரும் ஒரு விடுதிக்கு மாற்றப்பட்டதோடு மூன்று விடுதிகளில் இருந்த பெண்களும் இன்னொரு விடுதிக்கு மாற்றப்பட்டனர்.

இதனால் இரண்டு விடுதிகளுக்குள்ளும் அனைவரையும் தங்க வைத்து பராமரிக்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதியோர் நெருக்கமாக தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றமையால் காற்றோட்ட வசதியின்மையால் பெரும் இடையூறுகளை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றைக் கருத்தில் கொண்டு உரிய காலப்பகுதியினுள் புனரமைப்பு வேலைகளை நிறைவு செய்யும்படி சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கப்படுகிறது.(ம-ரி)




CSC®
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION

Quality Education @ affordable cost

O/L மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் 29 30 31 January

75% நேரடி ஸ்கொலர்சிப் விசேட சிறப்புச் சலுகை

- Office Application
- Web Design & development
- Adv. Digital Pre-Press
- Digital Video Production
- Adv. Java Programming
- Tally Accounting Training
- Hardware & Networking
- Computer Graphic Design

ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
230,1ம் மாடி கண்டி வீதி, சாவகச்சேரி, T.P : 021-2270267
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399



கண்ணீர் அஞ்சலி



கலாபூஷணம்
எஸ்.ஆர்.ஞானசுந்தரம் (J.P)
அவர்கள் இறைபதமெய்தியமைக்கு எமது சங்கத்தின் சார்பில் அன்னாரின் குடும்பத்துக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர் சங்கம், யாழ்ப்பாணம்.



அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



வையத்துள் 19.05.1919
தெய்வத்துள் 20.01.2011

அமரர் பரமநாதர் குகதாசன்
(முன்னாள் பொது முகாமையாளர், அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம்)

எமது குடும்பத்துக்கு வழிகாட்டியாய் வாழ்ந்து கடந்த 20.01.2011 தைப்பூசம் அன்று குமரன் கழலடியைச் சேர்ந்த எமது தந்தையின் பிரிவுத்துயரில் பங்கு கொண்டும், இறுதிக்கிரியைகளில் உதவிகள் புரிந்தும் தொலைபேசி, கடிதம் மூலமாக ஆறுதல் கூறியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (18.02.2011) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் 20.02.2011 ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெறும் சபிண்டீகரணப் பூஜையைத் தொடர்ந்து வரும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இலுப்பையடி, வல்லை வீதி,
அச்சுவேலி நகரம்.

குடும்பத்தினர்.
தொ.பே. 021 3214156

உதயன்

# மனிதாபிமான நடவடிக்கையும் மனித உரிமை மீறல்களும்

கிழக்கிலிருந்து வடக்கு நோக்கிய போரினை தொடங்கியபோது அப்பிரதேசங்களில் புலிகளின் கட்டுப்பாட்டில் சிக்கியுள்ள பொது மக்களை விடுவிப்பதற்கான மனிதாபிமான நடவடிக்கை என்றே அரசு கூறிக் கொண்டது.

அந்தப்போரில் எந்தவித ஈவிரக்கமும் இன்றி ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை அரசு இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை. போர் இடம்பெற்ற பகுதிகளில் மக்கள் இருந்துள்ளார்கள், அவர்களை விடுவிக்கவே மனிதாபிமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றால் அங்கே மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும் அல்லவா? அவர்கள் யாரால் பாதிக்கப்பட்டார்கள்? எவ்வாறு பாதிக்கப்பட்டார்கள்? என்பவை விவாதத்துக்குரியவையாக இருக்கலாம்.

இது குறித்து அரசும் அரசுத் தலைவர்களும் ஆழமாக சிந்திக்க வேண்டிய சில முக்கிய கருத்துக்களைக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உறுப்பினரும் ஐ.நா வுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர்களில் ஒருவருமான எச்.எம்.ஜி.எஸ் பலிஹக்கார வெளியிட்டிருக்கிறார்.

போர்க்காலச் சம்பவங்கள் தொடர்பில் பொறுப்பேற்க வேண்டிய நிலைமைகள் குறித்து தமது கவலைகளை வெளிப்படுத்துவோரை அரசு தூற்றுவதை விட்டுவிட்டு இந்த விடயங்கள் குறித்து மிகுந்த அக்கறையுடன் செயற்படுகிறது என்பதை வெளிப்படுத்தவேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பலிஹக்கார போருக்குப் பின்னரான நாட்டின் வெளிநாட்டு கொள்கைகள் தொடர்பாக நிகழ்த்தியுள்ள சொற்பொழிவொன்றில் அரசும் அரசியல் கட்சிகளும் தோல்வியடைந்த தலைமைத்து வத்தையே வெளிக்காட்டியுள்ளன. நாடு கடுமையான சர்வதேச கவனத்துக்குள்ளாகியுள்ள நிலையில் வெளிநாட்டு யோசனைகள் தவிர்க்க முடியாதவையென்று குறிப்பிட்டுள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்டு நொந்து போயுள்ள வடக்குக் கிழக்கு மக்கள் குறிப்பாக வன்னி பிரதேச மக்கள் தொடர்பாக நாம் அடிக்கடி இந்தப் பத்திகளில் சுட்டிக்காட்டி வந்துள்ள ஒரு விடயம் பற்றி அவர் கூறுகையில்,

''விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தினாலோ, இராணுவத்தின் படை நடவடிக்கையினாலோ மக்கள் எதனால் பாதிக்கப்பட்டிருந்தாலும் போருடன் தொடர்புடைய துயரங்களுக்கும் அவற்றுக்கான அடிப்படைக் காரணங்களுக்கும் அரசு பொறுப்பேற்கிறது என்பதை குறிப்பாகப் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணர்த்தவேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களும் இந்த நாட்டின் மக்கள்தான். அவர்களுக்குரிய வாழ்வாதாரங்கள் துரித கதியில் மேற்கொள்ளப்பட வேண்டும்- போர் எந்த அளவில் துரிதகதியில் நடத்தப்பட்டதோ அதேயளவில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரமும் மீளெழுச்சி பெறவேண்டும். அவர்களின் அடிப்படை உரிமைகள் நிலை நாட்டப்படவேண்டும் என்பதையே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கிறார் என்று கொள்ளலாம்.

முன்னாள் ஐ.நா வுக்கான தூதுவர் பலிஹக்கார அரசியல்வாதியும் அல்ல அரசியல் நோக்கம் அவருக்கு இருப்பதாகவும் தெரியவில்லை. அப்படியிருந்திருப்பின், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் தொடர்பில் இவ்வளவு ஆழமாக அவர் சிந்தித்திருக்க முடியாது. போரின் போது மனித உரிமைகள் பெருமளவில் மீறப்பட்டிருப்பது பற்றி வெளிநாடுகளில்தான் அதிகளவில் பேசப்படுகின்றது. இலங்கையில் எதிர்க்கட்சியினரும் கூட மனித உரிமைகள் மீறப்பட்டமை குறித்து வாய் திறப்பதில்லை. அரசியல்வாதிகள் அனைவருக்குமே மக்களின் வாக்குகளிலேயே கண்- அவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகளிலேயே அவர்கள் பேசுவார்கள்.நாட்டில் மனித உரிமைகள் எந்தளவு சீரழிந்து போயுள்ளன என்பதை பலிஹக்கார உணர்ந்துள்ளார். சிறுபான்மை மக்கள் அதனால் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் அவருக்குத் தெரிந்திருக்கிறது. அதனால் அவர் ஆதங்கத்துடன்,

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் கடந்த காலங்களில் மேற் கொள்ளப்பட்ட அரசின் விசாரணைகள் எந்தவித நீதியையும் இதுவரை வழங்கவில்லையென சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் சுட்டிக்காட்டி வருகின்றன.

போரில் பாதிக்கப்பட்ட சமூகங்களில் குறிப்பாகச் சிறுபான்மை மக்களின் உண்மையான கவலைகளை மனிதநேய அடிப்படையிலான கொள்கைகளுடன் அரசு அணுகும் அளவுக்கு நாட்டில் மனித உரிமைகள் மேலோங்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

போர் குறித்தும் அதன் இறுதி நாள்களில் இடம்பெற்றதாகக் கருதப்படும் மனித உரிமை மீறல்கள், குற்றச்செயல்கள் தொடர் பாகவும் சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள சர்ச்சைகளை உத்தேசித்தே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உறுப்பினரான பலிஹக்கார இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருக் கிறார் என்பது வெளிப்படை.

அரசும் அதன் தலைவர்களும் அவர் கூறியுள்ள கருத்துக்களை ஆலோசனைக்கெடுத்து செயற்படுவார்கள் என்பதே எமது எதிர்பார்ப்பு. ஆனால் இம்மாதிரி நியாயபூர்வமான கருத்துக்களை விரும்பாதவர்களும் எதிர்ப்பவர்களும் என்ன செய்வார்கள் என்று கூறமுடியாது. இக்கருத்துக்களை வாபஸ் பெறும்படி கூறி தென்னிலங்கை அரசியல்வாதிகள் யாரும் உண்ணாவிரதத்தில் இறங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# தொழில் வழங்கும் பொறுப்பும் இனிமேல் பல்கலைக் கழகங்களுக்கு

கொழும்பு, பெப்.18

பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் சகல மாணவர்களும் உரிய தொழில் வாய்ப்பைப் பெறும் பொறுப்பை பல்கலைக் கழகங்கள் பொறுப்பேற்க வேண்டும். இவ்வாறு தெரிவிக்கும் சுற்று நிருபமொன்றை உயர் கல்வியமைச்சு சகல பல்கலைக் கழகங்களுக்கும் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

பல்கலைக்கழகங்களில் சித்தி பெற்று வெளியேறும் மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தருவது சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தருவது அந்தக் கல்லூரிகளின் பொறுப்பாகுமெனவும் இந்த சுற்று நிருபத்தில் வலியுறுத்தப்படும்.

இந்தச் சுற்று நிருபத்துக்கமைய பல்கலை மாணவர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்யும் பொறுப்பு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப் பட்டுள்ளது என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ண தெரிவித்தார்.

இந்த சுற்று நிருபம் அடுத்த வாரத்தில் சகல பல்கலைக்கழகங்களுக்கும் உயர் கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பப் படுமென அவர் மேலும் கூறினார்.

(ம-5)

# காணாமற் போன ஊடகவியலாளர் பிரகீத் தொடர்பில் ஐ.நாவுக்கு மனு

கொழும்பு, பெப்.18

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகே தொடர்பில், அவரது மனைவி சமர்ப்பித்த கடிதம் கிடைத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சபையின் பேச்சாளர் மார்ட்டின் நெசர்ஸ்கீ இதனை தெரிவித்துள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதி, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், கடிதம் தொடர்பில் மேலதிக பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் எந்த பகுதியிலும் ஓர் ஊடகவியலாளர் காணாமற்போனாலும், அது கண்டனத்துக்கு உரிய செயலே என அவர் தெரிவித்துள்ளார். (ம)

# நூலகக் கற்கைக்கு நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், பெப்.18

நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறி தரம் ஒன்றுக்கு விண்ணப் பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகத்தேர்வில் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்காதவர்களில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி அல்லது உயர் கல்வித் தகைமைகள் அல்லது க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நூலகம் ஒன்றில் மூன்று வருட தொழில் அனுப வம் உள்ளவர்களும் தோற்றலாம்.

தமிழ்மொழிமூலமான இக்கற்கை நெறிக்கான கட்டணம் ரூபா 10,000 எனவும் இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

(ம)

# கைகூப்பித் தொழுவார்களா?

இறைவணக்கம் என்ற நிகழ்வு இன்றைய விழாக்களில் 'ஒரு சம்பிரதாய பூர்வ நிகழ்வு' என்றாகி விட்டதோ? என எண்ணத் தோன்றுகின்றது. பாடசாலைகளிலும் மற்றும் சமூக விழாக்களிலும் இறை நம்பிக்கையை வலுப்படுத்தும் ஏற்பாடாக இந் நடைமுறை இடம்பெற்று வருகிறது.

பணிவின் அடையாளமாக வணக்கம் செலுத்தும் பாவனையைக் கருதலாம்.

''தலையே நீ வணங்காய் எனத் திரு அங்க மாலையில் பாடிய திருநாவுக்கரசர்

''கை கால் கூப்பித் தொழீர்'' எனப் பாடுவது இங்கு நோக்கத்தக்கது.

நெஞ்சார்ந்த வணக்கம் செலுத்தும் நிலையைப் பக்தர்கள் வெளிக்காட்டுவர். இதன் ஆணையாக தமது நெஞ்சில் கை கூப்பி வணக்கம் செலுத்தும் நிலையைப் பக்தர்கள் வெளிக்காட்டுவர்.

அரசியல் வாதிகளுக்கு இவ்வணக்க முறைமை பொருந்தாது. அதனால் அவர்கள் நெஞ்சில் கைவைத்து தமது மனச் சாட்சிக்கு விரோதமாக வணக்கம் செலுத்துவதில்லை.

தனக்கு மேலான சக்தியை நெஞ்சாரப் பணியும் செயற்பாடு சிறுவயது முதலே ஊட்டப்படவேண்டும். இதற்குப் பாடசாலையே பயில்களம்.

இறைவணக்கம் செலுத்தும் பாக்கள் பாடப்படும் போது அதிபர்,ஆசிரியர் ,மாணவர் உள்ளிட்ட யாவரும் நெஞ்சில் கை கூப்பி வணக்கம் செலுத்தும் முறைமையைக் கைக்கொள்ள வேண்டும். வெறுமனே மாணவர்களை மாத்திரம் கை கூப்பிக் கொள்ளுங்கள் என்று உறுக்குவதனாலோ பணிப்பதனாலோ இதய சுத்தியுடனான வழிபாடு இடம்பெறாது.

ஞானக்கதிர்

திருமுறைப் பாக்களைப் பாடும் போது நிகழ்வில் பங்கேற்கும் யாவரும் நெஞ்சில் கைகூப்பி வணக்கம் செலுத்தும் நிலை ஏற்படுத்தப்படவேண்டும்.

ஆலயங்களில் திருமுறைப்பாக்கள் பாடப்படும் நேரம் ஓர் ஓய்வு நேரமாகக் கருதப்படும் துன்பியல் நிலையையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். திராவிட கானத்துக்கு வழங்கும் மதிப்பாக -அதன் மகிமையைப் பெருமைப்படுத்துவதாக ஆலயப் பிரதம குரு உள்ளிட்ட யாவரும் சிரத்தையுடன் கை கூப்பிப் பணிய வேண்டும்.

பெரும்பாலான ஆலயங்களில் தேவாராதி கீதங்களைப் பாடும் காலம் குருக்களின் இன்ரேவலாகவும் (Interval) அடியவர்களின் கலகலப்பாகவும் மாறி விடுவதுண்டு.

இளைய சமூகத்தினரிடம் ஏற்படக் கூடிய விழிப்புணர்வும் ஏன்?எதற்கு? எப்படி?என்ற ஆராய்வுணர்வும் இவை யாவற்றையும் அர்த்தமுள்ளதாக்கும்.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை நெஞ்சாரப் பணியும் உன்னத நிலையை உணர்த்துவிக்கும்.

**ச.லலீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியகலாசாலை.**

# யாழ்.ஆஸ்பத்திரிக்குச் செல்லும் பார்வையாளர்கள் நெருக்கடியில்

யாழ்ப்பாணம்,பெப்.18

போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களை பார்வையிடச் செல்லும் மக்களுக்கு உரிய வசதிகள் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்பட்டது.

மின்சார நிலைய வீதியில் வைத்தியசாலை பின்பக்க நுழைவாயில் ஊடாகவே பொது மக்கள் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

மக்கள் மின்சார நிலைய வீதியில் உச்சி வெயிலில் கால் கடுக்க வரிசையில் நின்றே உள்ளே சென்று நோயாளர்களைப் பார்வையிட வேண்டிய நிலை உள்ளது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வயது முதிர்ந்தோர் முதல் சிறுவர் வரை அனைவருமே இவ்வாறு பெரும் சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

நிழற்குடை. வசதி கூடச் செய்து கொடுக்கப்படாத நிலையில் இந்த நோயாளர்களை பார்வையிடச் செல்லும் மக்கள் வெயில் காலங்களில் கால் கடுக்கவும், மழை பெய்யும் போது சிரமமும் அடைகின்றனர்.

அதனை விட இந்த வீதியோரங்களில் சிலர் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களையும் தரிக்க விட்டுச் செல்வதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

(ம-26)

# மருத்துவத் தேவைகளுக்கு கொடுப்பனவு பெறும் பயனாளிகள்

வடமராட்சி,ஜன.18

சமூக சேவைத் திணைக்களத்தின் ஊடாக 'யுனிசெப்' செயற்றிட்டத்தின் கீழ் மருத்துவத் தேவைக்கான கொடுப்பனவைப் பெற பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு-

சி.சக்திவேல்-(ஆலடிஒழுங்கை, வல்வெட்டி), ர.இராசேஸ்வரி-(கற்கோவளம் , பருத்தித்துறை), ர.ரகீசன் - (அல்வாய் வடக்கு), கு.கிருஷ்ணகுமார் - (திக்கம், அல்வாய் வடமேற்கு, பருத்தித்துறை), த.புஸ்பவதி - (கல்லூரி வீதி, பருத்தித்துறை), வ.உதயகுமாரி-(சக்கோட்டை, அல்வாய், வடமேற்கு), க.சற்குணலிங்கம் - (விஸ்வகுல ஒழுங்கை, புலோலி வடமேற்கு), வே.தெய்வேந்திரம் - (அல்வாய் மேற்கு).

இவர்கள் அனைவரும் பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலக சமூகசேவைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கேட்டுள்ளார்.

(ம-236)

# வெங்காயப்பூ விலையில் வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஜன.18

யாழ்.மாவட்டத்தில் உள்ள மரக்கறிச் சந்தைகளில் வெங்காயப் பூவின் விலை நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து வருகின்றது.

சுமார் ஒருவார காலத்துக்கு முன்னர் குடாநாட்டில் என்றுமில்லாத அளவுக்கு வெங்காயப் பூவின் விலை அதிகரித்து ஒரு கிலோ 200 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்தது.

தற்போது இதன் விலை நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து இப்போது ஒருகிலோ வெங்காயப் பூ 40 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (ம-236)

# அன்பளிப்பு

தென்மராட்சி,ஜன.18

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் பற்றாக் குறையாக காணப்பட்ட சிறு பிள்ளைகளுக்கான பரசிட்டமோல் மருந்தை வழங்கியிருந்தனர்.

அத்துடன் குழந்தைகள் விடுதியில் குழந்தைகளுடன் தங்கிருப்பவர்களுக்கென 15 பிளாஸ்ரிக் கதிரைகளையும் பிரதி சனிக்கிழமைகளில் நடத்தப்படும் நீரிழிவு நோய் கிளினிக்குகளுக்கு வரும் நோயாளர்களுக்கு காண்பிப்பதற்கான விழிப்புணர்வு இறு வெட்டுக்களையும் சங்கத்தினர் வழங்கியுள்ளனர். (ஒ-207)

## மக்களுக்கு ஆறுதல்...




பேருதவி: யாழ்நகர் பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள சிறுவருக்கான அபிவிருத்தி நிலையப் பணிமனையில் வைத்து போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் 30 பேருக்குத் தையல் இயந்திரங்கள் , சைக்கிள்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், கிருமிநாசினி தெளிக்கும் கருவிகள் என்பன வழங்கப்பட்டன.

கிராமிய பெண்கள் அமைப்பும், சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையமும் இணைந்து இவற்றை வழங்கின. இதற்கான நிதியுதவியை மலேசிய தமிழ் அமைப்பு மற்றும் நோர்வேயின் பெண்கள் அமைப்பு என்பன வழங்கியிருந்தன.

செல்வி தயானி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வி.கேசவனும் கௌரவ விருந்தினர்களாக சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், திட்டச் செயலாளர் து.தேவதாஸ் மற்றும் இணைப்புச் செயலாளர் த.பாலதயானந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம)

# வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் நீர் சுத்திகரிப்பு இயந்திரம்

யாழ்ப்பாணம்,பெப்.18

சர்வதேசகுடிதண்ணீர் அமைப்பினரால் நீர் சுத்திகரிக்கும் பிரமாண்டமான இயந்திரமொன்று யாழ்.குடாநாட்டில் முதன் முதலாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் அமைக்கப்பட்டு அண்மையில் மக்கள் பாவனைக்கென அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தென்.இந்தியத் திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் பேராயரும், யாழ்ப்பாணக்கல்லூரி ஆளுநர் சபைத் தலைவருமான பேரருட்திரு அறிவர்.டி.எஸ்.தியாகராஜாவும், சர்வதேச குடிதண்ணீர் அமைப்பின் தற்போதைய நிர்வாக இயக்குநர் அறிவர் ஜோசுவாவும் இவ்வமைப்பைச் சார்ந்த திருமதி.தக்ஷிரா ஜெயவிக்ரம, றிச்சாட் கோபிநாத் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.(ஒ)

# புற்றுநோயாளர்களுக்கு போசாக்குணவு வழங்கல்

சண்டிலிப்பாய்,ஜன.18

புற்று நோயினால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஷனால் போசாக்குணவு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் உள்ள புற்றுநோயாளர் சிகிச்சை விடுதியின் புற்றுநோய் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி என்.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உளவள ஆலோசகர் கே.வைத்தீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மானிப்பாய் தாவடி வீதியிலுள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியின் ஆதரவுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் சமிதி உறுப்பினர்கள்,அறநெறிப் பாடசாலை மாணவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-115)

# வாகன அனுமதிப் பத்திரங்களை பரிசீலிக்கும் பணிகள் மும்முரம்

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்.குடாநாட்டில் வாகனப் பரிசோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆண்டுக்கான வாகன அனுமதிப்பத்திரம், காப்புறுதி மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் போன்றவற்றைப் பரீசீலிக் கும் பணிகளை பொலிஸார் தீவிரப் படுத்தியுள்ளனர்.

இந்த அனுமதிப்பத்திரங்கள் இன்றி வாகனங்களைச் செலுத்துவோர் மீது பொலிஸார் தண்டப்பணம் அறவிட்டு அதற்கான சிட்டைகளையும் வழங்கி வருகின்றனர்.

இந்த ஆண்டுக்கான வாகன அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு கடந்த ஜனவரி மாதம் வரை கால அவகாசம் வழங்கப்பட்டது.

மோட்டார் சைக்கிள்களை வழிமறித்து அவற்றுக்கான ஆவணங்களை பரீசீலிக்கும் பணியில் பொலிஸார் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.(ம-26)

# மீளக்குடியமர முன்வராதோருக்கு இடம் பெயர்ந்தோர் நிவாரணம் நிறுத்தம்

சண்டிலிப்பாய்,பெப்.18

வலி.வடக்கில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட இடங்களில் மீள்குடியமர முன்வராத குடும்பங்களுக்கு இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் நிறுத்தப்பட இருப்பதாகப் பிரதேச செயலக வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து அகதிமுகாம்களிலும், நலன்புரி நிலையங்களிலும், உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வரும் குடும்பங்களை வலி.வடக்கில் கண்ணி வெடி அகற்றப்பட்ட இடங்களில் படிப்படியாகக் குடியமர்த்துவதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட இடங்களில் குடியமர விரும்பமில்லாத சிலர், வாழ்ந்த இங்களிலேயே தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றார்கள்.

சொந்த இடங்களில் மீள் குடியமர மறுக்கும் குடும்பங்கள் சாதாரண குடும்பங்களாகக் கணிக்கப்பட்டு இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணம் நிறுத்தப்படவிருக்கிறது.

மீள் குடியமர முன்வராத குடும்பங்கள் பற்றிய விவரங்களைக் கிராம உத்தியோகத்தர்கள் திரட்டி வருகின்றனர். (ம-115)

# காணாமற் போனவர்களை இறந்தவர்களாக பதிவு செய்யும் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது

## தேவையுடையோர் விண்ணபிக்கலாம் என்கிறார் மேலதிக பதிவாளர் நாயகம்

யாழ்ப்பாணம்,பெப்.18

காணாமற் போனவர்களை இறந்தவர்களாகப் பதியும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபம் பதிவாளர் நாயகத்தினால் சகல பிரதேச செயலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே தேவையுடையவர்கள் பிரதேச செயலகத்துக்குச் சென்று விண்ணப்பப் படிவத்தப் பெற்று விண்ணப்பித்துக் கொள்ளமுடியும்.

இவ்வாறு மேலதிக பதிவாளர் நாயகம் என்.சதாசிவ ஐயர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலதிக பதிவாளர் நாயகம் மேலும் தெரிவித்தவை வருமாறு-

காணாமற்போனவர்களை இறந்தவர்களாகப் பதிவு செய்யும் 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் மூன்று வருடங்களுக்கு நடைமுறையில் இருக்கும். இது தற்காலிக சட்டமாகும். இதன் பிரகாரம் காணாமல்போய் ஒரு வருடத்தின் பின்னர் பதிவை மேற்கொள்ள முடியும். சட்டத்தின் படி காணாமற்போனவரின் இறப்பைப் பதிவு செய்வதற்காக அவரது நெருங்கிய உறவினர் காணாமற்போன அல்லது இறுதியாகக் குடியிருந்த இடத்தின் பிரதேச செயலகம் ஊடாக விண்ணப்பிக்முடியும்.

விண்ணப்பிக்கவுள்ளவர்கள் சில ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

காணாமற்போனது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தால் அந்த முறைப்பாடு, காணாமல் போனவரின் பிறப்புச் சான்றிதழ் அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதி காணாமல்போனவருக்கும் விண்ணப்பிப்பவருக்கும் இடையிலுள்ள உறவை உறுதிப்படுத்தும் சான்று உள்ளிட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

சகல பிரதேச செயலகங்களுக்கும் சுற்று நிருபத்துடன் மாதிரி விண்ணப்பப் படிவங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரவித்தார். (ம-14)

# சிவநெறிப் புலவரின் முத்து விழா

யாழ்ப்பாணம்,பெப்.18

சிவநெறிப் புலவர் சண்முகலிங்கம் திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம் தம்பதியரின் முத்து விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்கு யாழ்.வண்ணார் பண்ணை நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சைத்திரு பெரியார் ஆ.சபாரத்தினம் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் குடாநாட்டு சைவ மூதறிஞர்களின் வாழ்த்துரைகளும் இடம் பெறும்.

(ம-313)

# விழிப்புக்குழுக்களில் செயற்பட கிராம சேவகர்கள் பின்னடிப்பு

கைதடி,பெப்.18

கைதடிப் பிரதேசத்தில் விழிப்புக் குழுக்களின் செயற்பாடுகள் மிகச் சிறப்பாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் கிராம சேவையாளர்கள் சிலரின் ஒத்துழைப்பு இன்மையால் விழிப்புக் குழுக்கள் செயலிழக்கும் அபாயம் தோன்றியுள்ளதாக பொதுமக்களால் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேசத்தில் உள்ள சன சமூக நிலையங்களின் பங்களிப்புடன் இராணுவத்தினரால் விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இரவு தொடக்கம் அதிகாலை வரையென குழுக்கள் பிரிக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது.

இதற்கு அரச உத்தியோகத்தர்கள், வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் வைத்தியர்கள் எனப்பலரும் ஒத்துழைப்பு நல்கின்றனர்.

அன்றாடத் கூலித்தொழிலுக்கு செல்லும் தொழிலாளர்களும் தொழில் முடிந்த கையுடன் தமது களைப்பையும் பாராது இரவில் விழித்து இருக்கின்றனர். இந்த நிலையில் கிராம சேவையாளர்களில் சிலர் பங்களிக்க பின்னடிப்பதுடன் அதிகாரப் போக்கை கடைப்பிடிப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதனால் பொதுமக்களில் பலர் தற்போது விழிப்புக் குழுக்களில் பங்கு கொள்ளாது பின்னடிப்பதுடன் இளைஞர்களும் அக்கறை இல்லாது உள்ளனர்.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து பிணக்கை உடன் தீர்த்துவைப்பதுடன் விழிப்புக் குழுக்கள் தொடர்ந்து செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்களாலும் பொது அமைப்புக்களாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-288)

## கௌரவம்...



அழைப்பு: வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இல்லமெய்வன்மைப் போட்டியில் மாணவர்களின் பான்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர்.

# பனை வளம் சார்ந்த கற்கை நெறி யாழ்.பல்கலையில் இடம்பெறவேண்டும்

## சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் பனைவளம் சார்ந்த கற்கை நெறி நடத்தப்படவேண்டும். அதன் மூலம் அந்த வளத்தைப் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பனைவளம் வடபகுதியின் தனித்துவமாக உள்ளது. அதன் மூலம் வடபகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளமுடியும் .

ஆனால் கடந்த யுத்த காலத்தின் போது ஆயிரக்கணக்கான பனை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பதிலாக பனம் விதை நடும் திட்டம் தற்போது நிறைவடைந்துள்ளது.

அவற்றை வளர்த்து எடுக்கும் பொறுப்பு துறைசார்ந்தவர்களுக்கும் பொதுமக்களுக்கும் உள்ளது.

அதேவேளை காலத்துக்கு ஏற்ப பனம் பொருள் உற்பத்தியும் நவீனமயப்படுத்தப்பட வேண்டும். அப்படியாயின் ஊவாப் பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்படுவது போன்று பனை வளம் சார்ந்த கற்கை நெறி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படவேண்டும்.

அதற்காக பல்கலைக்கழ கம் நடவடிக்கை எடுத்து பல் கலைக் கழகமானிய ஆணைக் குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இந்த விடயத்தில் பல்கலைக் கழக சமூகம் ஆர்வம் காட்டவேண்டும்.

பனை வளம் சார்ந்த கற்கை நெறி முன்னெடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் பனை வளம் மட்டுமல்ல தென்னை, கமுகு ஆகியவை தொடர்பாகவும் அந்தக் கற்கை நெறியில் உள்வாங்கப்படவேண்டும்.

அதன் மூலமே அவை தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். அவற்றின் அபிவிருத்தி குறித்து ஆராயப்படும். அந்த வளம் குறித்து அறிவுசார் பிரயோகம் இடம்பெறும்.

அது மட்டுமன்றி பனை, தென்னை வளம் சார்ந்த ஆர்வமும் அக்கறையும் பொதுமக்களிடையே ஏற்படும். ஒரு சமூகத்து மக்களால் மட்டுமன்றி ஏனையவர்களும் அந்த வளத்தின் மூலம் வருமானத்தை ஈட்டக்கூடிய நிலையும் ஏற்படும். மக்களிடையே இந்த வளம் சார் தொழிலுக்கு அங்கீகாரம் கிடைப்பதாக இருக்கும்.

எனவே நிறுவன மயப்படுத்தப்பட்ட அறிவுசார் துறை யாக இதனை அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தி னால் கற்கை நெறி நடத்தப் படுவது அவசியம் எனவும் சமூக ஆர்வலர்கள் மேலும் தெரிவித் துள்ளனர்.

(ம-14)

# 'புலர்ந்தது புதுவசந்தம்' கலாசார நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.18

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ''புலர்ந்தது புதுவசந்தம்'' கலாசார நிகழ்வு எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சி தொடர்பான கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமான செய்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பான ஊடகவியலாளர்களுக்கான ஒன்று கூடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ்.செம்மணி வீதியில் அமைந்துள்ள பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் இடம்பெறவுள்ளதாக பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் என். ஸ்ரீதேவி அறிவித்துள்ளார். (ம-313)

## நன்கொடை...



வட்டக்கச்சி மகாவித்தியாலய மாணவர்களுக்கு சுவிஸில் வாழும் சிவநிதி பன்னீர்செல்வத்தினால் 25 சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

# மீள் குடியேறியவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் உளநல செயற்பாட்டு நடவடிக்கைகள் விரைவில்

கிளிநொச்சி,பெப்.18

வ ட மாகாணத்தில் இடம் பெயர்ந்து மீள்குடியமர்ந்த மக்களுக்கு புனர்வாழ்வளிக்கும் விசேட திட்டத்தின் கீழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் விசேட உளநலச் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதுதொடர்பாக வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் கடந்தவாரம் நடைபெற்ற கலந்துரையாடலிலே பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப் பட்டது. இச் செயற்திட்டத்தில் பிரதானமாக கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டத்தில் 10 சமுதாய உதவித்திட்ட உதவித் தொண்டர்களும் மன்னார் மாவட்டத்தில் 8 பேரும், வவுனியா மாவட்டத்துக்கு 8 பேரும், யாழ். மாவட்டத்தில் 4 பேரும் சேர்த்து மொத்தமாக 40 சமுதாய உதவித்திட்ட உதவித் தொண்டர்கள் ஒன்பதுமாத காலப் பகுதிக்கு சேவை செய்ய நியமனம் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட தேவையுள்ள மக்களுக்கு வேள்ட்விஷன் நிறுவனமும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் உளநலப் பிரிவு ஆகியனவும் இணைந்து பயனுள்ள செயற்திட்டங்களைச் செயற்படுத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இந்த உளநலச் செயற்றிட்டத்துக்கு வசதியாக கிளிநொச்சி, மன்னார், முல்லைத் தீவு மாவட்டங்களுக்கு ஐந்து இருக்கைகளைக் கொண்ட புதிய ரக வாகனம் ஒன்றையும் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கலந்துரையாடலில் சிரேஷ்ட உளநல வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள் சிரேஷ்ட உளவியலாளர்கள் பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டும் கருத்துக்களைப் பரிமாறியுள்ளனர். (501)

# பச்சிலைப்பள்ளி பேரவை இலவச பயிற்சி முகாம்

பளை,பெப்.18

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் போரவையினர் இலவச தையல், கணினி, ஆங்கிலமொழி ஆகிய பயிற்சிகளை பேரவை அலுவலக கட்டடத்தில் ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்தப் பயிற்சி நெறிகளுக்கான விண்ணபபங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் இந்த விண்ணப்பத்தினைப் பளை கண்டி வீதியில் உள்ள பேரவை அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு பேரவைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்டவர்கள், பெற்றோரை அல்லது தாய் அல்லது தந்தையை இழந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், பாடசாலைக் கல்வியை தொடர முடியாமல் இடைநிறுத்தியவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (207)

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவழிக்கை

அக்கராயன்,பெப்.18

அக்கராயன் பகுதி பாடசாலைகளில்நிலவும் ஆசிரியர்கள் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்யும் பணியில் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம் என அக்கராயன் பகுதி பதில் கிராம அலுவலர் கு.துஸ்யந்தன் தெரிவித்தார்.

அக்கராயன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கல்வி அதிகாரிகள்-பெற்றோர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில், பாடசாலையில் நிலவும் ஆசிரியர்கள் பற்றாக்குறையினால் ஏற்படும் நெருக்கடிகள் தொடர்பாக நாங்கள் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம்.

ஆசிரியர்களை பணிக்கு நியமித்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ கல்வி அதிகாரிகள் முயற்சி செய்ய வேண்டும். கல்வி அதிகாரிகள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு நிறைவான ஒத்துழைப்புக்களை வழங்க தயாராகவுள்ளோம்.

ஆசிரியர் பற்றாக்குறையுள்ள பாடசாலை ஒன்றில் மாணவன் தனது முழுமையான கல்வியினை தொடரமுடியாதுள்ளது எனகவும் தெரிவித்தார். (ந-சி)

# மரண அறிவித்தல்

## சின்னவன் பாக்கியம்



பிளாக் வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னவன் பாக்கியம் கடந்த (15.02.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற சின்னவனின் அன்பு மனைவியும், புஸ்பராணி (சங்கானை), புலேந்திரராசா (சுவிஸ்), சந்திரவதனா (சங்கானை), மகேந்திரராசா (சங்கானை), தர்மராசா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை (19.02.2011) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

பிளாக் வீதி,
சங்கானை.

# அசுத்தமாகக் காணப்படும் மன்னார் மாவட்ட கிணறுகள்

மன்னார் மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் அனைத்துக் கிணறுகளும் அசுத்தமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு நிலத்தடி நீர் கலந்ததால் கிணற்று நீர் மாசடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. நானாட்டான், மடுக்கரை, தம்பனைக்குளம், சிலாவத்துறை போன்ற பகுதிகளில் உள்ள கிராமங்களிலேயே கூடுதலாக கிணற்று நீர் மாசடைந்ததாகத் தெரிவிக்கின்றனர். இதனால் இந்தப்பகுதி மக்கள் நந்நீரைப் பெறமுடியாமல் உள்ளதால் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் அந்தப் பகுதியில் உள்ள கிணறுகளைச் சுத்தம் செய்து தரும்படி கோரிக்கை விடுக்கின்றனர். விரைவில் இந்த நடவடிக்கையினை மேற்கொள்ளாது தாமதம் ஏற்படுமாயின் அந்தக் கிணற்று நீரினையே பயன்படுத்த வேண்டிவரும் என்றும் அந்தப் பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.


எமது சிகிச்சைகள்

புற்று நோய் தணிப்பு
தைராய்ட் பிரச்சினைகள்
ஈரல் கோளாறுகள்,
மஞ்சள் காமாலை,
மூட்டுவலி,முதுகுவலி,
ஒற்றைத் தலைவலி,
சுவாசப்பை கோளாறுகள்,
படுக்கைபுண் - நீரிழிவுப் புண்..
நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு நீக்குதல் பக்க விளைவுகள் இல்லை. சிக்கனமான மூலிகை மருத்துவம்

இனி இல்லை
நெஞ்சு வலி




இருதய நோயாளர் எதிர்காலத்தில் நெஞ்சு வலி இன்றி சுகமாக வாழலாம். எமது ஆயுர்வேத மருந்தினால் இரத்த ஓட்டம் சீர்பெரும் வலியிலிருந்து உடல் நலம் பெருவீர்கள்.

HOTLINE
0777 08310, 011 555 8442

A BOI APPROVED & ISO 9001-2008 OMS CERTIFIED COMPANY

FAIR PHARMA (PVT) LTD

Level5/ East Tower, 1 C, World Trade Centre, Col - 01
Phone - +94 11 5 517 897, 5 551 879, 5 558 442
Email - fairpharmacysrilanka@yahoo.com,
Web - fairpharmasrilanka.com

இலவச மருத்துவ ஆலோசனைகள்

| மருதிந்துறை | யாழ்பாணம் |
| --- | --- |
| 21.02.2011 | 22.02.2011 |
| றோயல் ஸ்டார் மெடிக்கல் சென்டர் செட்டி வீதி | கமலா டிஸ்பென்சரி 1207 K.K.S வீதி |



CSE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை

பங்குச் சந்தை முதலீடுகள் தொடர்பான கருத்தரங்கு

இடம் :
நெல்லை முருகன் திருமண மண்டபம்- நெல்லியடி

திகதி :
2011 பெப்ரவரி 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

நேரம் :
காலை 9 மணி தொடக்கம் பி.ப. 1 மணி வரை

வளவாளர்கள்:

★ நீண்டகால நிதித் திட்டமிடல்களின் முக்கியத்துவம்
பேராசிரியர் மா.நடராஜசுந்தரம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

★ பங்குச் சந்தைக்கான அறிமுகம்
திரு.மு.திலீபன்
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - யாழ்ப்பாணக் கிளை

★ பங்குச் சந்தை முதலீட்டு நடைமுறைகள்
திரு.பி.முகுந்தன்
கப்பிற்றல் அலயன்ஸ் செக்குரிடீஸ் - யாழ்ப்பாணக் கிளை

★நிதிக் கூற்றுக்களின் பகுப்பாய்வு
திரு.வே.ஆ.சுப்பிரமணியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

"புதிய முதலீட்டு வாய்ப்பு புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை"

மேலதிக தகவல்களுக்கு:
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
யாழ்ப்பாணக்கிளை
398/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 1455/ 0215672111

அனுமதி இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# அரசுடன் பேரம் பேசுவதன் மூலம் உரிமைகளை வென்றெடுக்க முடியும்

## வன்னி எம்.பி பாருக் தெரிவிப்பு

வடக்கில் அச்சமற்றநிலை தோற்றுவித்து இந்த மக்களுக்கான விமோசனத் திட்டங்களை முன்னெடுத்து வருவது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசேயென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாரூக் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் மூலமே இந்த மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொடுக்க முடியுமெனவும் கூறினார்.

முல்லைத்தீவு கலைமகள் பாடசாலைக் கட்டடத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:

கடந்த 30 வருடகால யுத்தத்தால், எமது வன்னி மாவட்டம் பெரிதும் இழப்புக்களைச் சந்தித்திருந்தது. அதிலிருந்து விடுபட்டு தற்போது அபிவிருத்தியின் வசந்தத்தை அனுபவிக்க ஆரம்பித்துள்ளது. இந்தத் தருணத்தில் தேர்தல் காலங்களில் மட்டும் மக்களது வாக்குகளை மையமாகக் கொண்டு செயற்படும் அரசியல்வாதிகளையும் கட்சிகளையும் குறித்து எமது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முதன்முறையாக அபிவிருத்திக் குழுக் கூட்டம் வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையில் நடைபெற்றது. அப்போது நாம் அவதானித்த விடயம்தான் இந்தப் பிரதேசத்தின் சகல துறைகளையும் அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டமை, பாதை, மின்சாரம், போக்குவரத்து, கல்விச் செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைத் துரிதமாக மேற்கொள்வதற்கான பணிப்புரை வழங்கப்பட்டது.இதனை நடைமுறைக்குக் கொண்டுவர ஆளும் கட்சியால் மட்டும்தான் முடியும். நாம் எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனின் இருக்கின்ற அரசுடன் பேரம் பேசுவதன் மூலம்தான் முடியும் என்ற நம்பிக்கை தற்போது முல்லைத்தீவு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது என்பதை அறியமுடிகின்றது. அதனால்தான் வெற்றிலைச் சின்னத்தில் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

கரைதுறைப்பற்று, ஒட்டு சுட்டான், புதுக்குடியிருப்பு, பாண்டியன்குளம் பிரதேசத்தில் ஆளும் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (313)

## மன்னார் குஞ்சன்குளம் தொங்குபாலம் பெரும் சேதம்

மன்னார்,பெப்.18

மன்னார் மாவட்டத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் சுற்றுலாத் தலங்களில் ஒன்றான குஞ்சன் குளம் கிராமம் அண்மையில் ஏற்பட்ட அடைமழை மற்றும் வெள்ள அனர்த்தம் காரணமாகப் பாதிப்படைந்துள்ளது.

குஞ்சன் குளம் தொங்கு பாலத்துக்கு மேலாக மூன்று அடி உயரத்தில் தண்ணீர் மேவிப் பாய்ந்ததால் இந்தப் பாலம் சேதமடைந்து காணப்படு வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது குஞ்சன்குளம் தொங்கு பாலத்தின் வழியாக ஒரே ஒருவர் மாத்திரமே ஒரு நேரத்தில் பயணம் செய்ய முடிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தாழ்நிலம் என்று கூறி வீட்டுத் திட்டத்துக்கு முழுக்கு

### அக்கராயன் மக்கள் விசனம்

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதில் அரச அதிகாரிகள் காட்டும் பாரபட்சம் அந்த மக்களை பெரும் அலைச்சலுக்குள்ளாக்கி இருக்கின்றது.

கிளிநொச்சி அக்கராயன் அணைக்கட்டு வீதியின் கிழக்குப் பகுதியில் வசிக்கும் குடும்பங்களுக்கு தாழ்நிலம் என்ற காரணம் கூறப்பட்டு வீட்டுத் திட்டம் கரைச்சி உதவி அரச அதிபர் பணிமனையினால் தடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம அலுவலர் அந்தப் பகுதி மக்களுக்கு வீட்டுத் திட்டத்துக்கு அனுமதியினை வழங்கியும் உதவி அரச அதிபர் பணிமனை தடுத்துள்ளமையால் மக்கள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

இதற்கிடையில் இந்தப் பகுதியில் 'நேப்' நிறுவனத்தின் வீட்டுத்திட்ட வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

'தாழ்நிலம்' என்ற காரணத்தினால் எமக்கான வீட்டுத் திட்டத்தினைத் தடுத்தால் பூர்வீகமாக வாழ்ந்த வீடுகள், தென்னை மரம் உட்பட பயன்தரும் மரங்களை என்ன செய்வது என்று இப்பகுதி மக்கள் கேட்கின்றனர்.

## மழலைகளுக்குச் சிறப்பு...



மதிப்பளிப்பு: கிளிநொச்சி கணேசபுரம் கங்கை முன்பள்ளியின் 2010 ஆம் ஆண்டுக்கான சிறுவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு கங்கை முன்பள்ளியில் அண்மையில் நடைபெற்றது. கலை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சுதர்ஜெனன் நிதர்சனா என்ற மாணவிக்கு கணேசபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கணக்காய்வாளர் இ.செல்வராசா சான்றிதழ் வழங்கி மதிப்பளிப் பதைக் காணலாம்.

## கிளி,கண்டாவளை பிரதேசத்தில் உணவுக்கான வேலைத்திட்டம்

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசதில் உணவுக்கான இலகு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

கண்டாவளை பிரதேசத்துக்கு உட்பட்ட ஊரியான் கிராம அலுவலர் பிரிவின் உணவுக்கான இலகு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 15 நாள்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த வேலைத் திட்டத்தில் மருதங்குளம் கிராமத்துக்கான வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கண்டாவளை கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கான வேலைத்திட்டத்தின் மூலம் பிரதேச செயலக வளாகம், பிரதான வீதி என்பன துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

இதேபோன்று கண்டாவளை பிரதேசத்தின் சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் உணவுக்கான இலகு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பொது இடங்கள், வீதிகள், மருத்துவமனைகள் என்பவற்றில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தாழ்நிலப் பகுதி மக்களுக்கான வீட்டுத்திட்டம் இடைநிறுத்தம்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரத்தினபுரம் கிராமத்தில் 88 குடும்பங்களுக்குத் தாழ்நிலம் என்ற பெயரில் வீடுகள் அமைத்துக் கொடுக்கும் பணிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

30 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் வசித்த இடங்களில் இருந்து தாழ்நிலம் என்ற பெயரில் வேறு இடங்களுக்கு செல்லுங்கள், வீடு அமைத்துத் தருகிறோம் என்று அரச அதிகாரிகள் தெரிவிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாழ்நிலம் என்ற பெயரில் வீடுகளை அமைத்துக் கொடுக்காது ஒதுக்குவது எந்த விதத்தில் நியாயமனது என்று அந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

## குஞ்சுக்குளம் கிராம மக்களை மீன்பிடிக்காமல் தடுக்கின்றனர்

மன்னார் மாவட்டம் மடு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் கிராமத்தில் உள்ள ஆற்றில் தொடர்ந்து மீன் பிடித்து வந்த அந்தக் கிராம மீனவர்களை வெளிமாவட்ட மீனவர்கள் மீன் பிடிக்க விடாமல் தடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போரினால் இடம்பெயர்ந்து கட்டம் கட்டமாக மீள் குடியேறிய அந்தப் பகுதி மக்கள் மீண்டும் ஆற்றில் மீன்பிடித்து தமது அன்றாட வாழ்வினை நகர்த்தி வருகின்ற நிலையில் இவ்வாறான வெளிமாவட்ட மீனவர்கள் அத்துமீறி நுழைந்து தமது ஆற்றில் மீன் பிடிப்பதால் தமது தொழிலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது ஆற்றில் மீன்கள் கூடுதலாகக் காணப்படுவதால் வலையினை வீசும்போது 1 கிலோ முதல் 3 கிலோ வரை மீன் பிடிக்கக்கூடிய நிலை இருந்தும் எமது கிராம ஆற்றில் வெளியார் வந்து அத்துமீறி மீன் பிடித்துச் செல்வதால் எமது மீன்பிடித் தொழிலினை முழுமையாக கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டவில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட்டு வெளி மாவட்டத்திலிருந்து வந்து அத்துமீறி மீன் பிடிக்கவிடாமல் எமது கிராம ஆற்றில் நாங்களே மீன் பிடிப்பதற்கு ஆவன செய்யும் படிகேட்டுள்ளனர்.

## கிளி.முருகானந்தாவுக்கு இரு இடங்கள்

ஹற்றன் நஷனல் வங்கி, மாவட்ட மட்டத்தில் நடத்திய போட்டிகளில் கிளிநொச்சி மாவட்ட மட்டத்தில் கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலயம் இரு இடங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

தரம் 9, 10, 11 இற்கு நடத்திய சிறுகதைப் போட்டியில் சுரேந்திரநாதன் சோபிகா 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளதோடு தரம் 6, 7, 8 இற்கு நடத்திய சித்திரப் போட்டியில் சுரேந்திரநாதன் நேசனா 4ஆம் இடத்தினையும் பெற்றுள்ளனர்.இவர்களுக்கான சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் தி.வரதன் தலைமையில் நடைபெற்றது. (450)

## கிளிநொச்சி முரசுமோட்டையில் அதிகரித்து வரும் திருட்டுக்கள்

கிளிநொச்சி,பெப்.18

கிளிநொச்சி முரசுமோட்டையில் வணிக நிலையம், அரிசி ஆலை என்பன நேற்று முன்தினம் இரவு உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி முரசு மோட்டை முருகானந்தா ஆரம்பப் பாடசாலைக்கு அருகில் உள்ள கணேஸ் என்பவரின் வணிக நிலையம் கடந்த 16ஆம் திகதி புதன்கிழமை இரவு உடைக்கப்பட்டு சிகரட், பால்மா வகைகள், மீன்ரின், தொலைபேசி அட்டைகள் எனப் பலபொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

இதேவேளை அருகில் உள்ள மாணிக்கவாசகர் என்பவரின் அரிசி ஆலையும் உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முரசுமோட்டை மருதங் குளம் பகுதியில்கடந்த வாரம் இரு வீடுகளில் தொடராக கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றமையும் கடந்த மாதம் இதேபகுதியில் வணிக நிலையம் ஒன்றை உடைத்து பெறுமதி வாய்ந்த பொருள்கள் களவாடப்பட்டமையாலும் இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பெரும் அச்சத்துடன் இரவைக் கழிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.இப் பகுதி கிராம அலுவலர்களின் உதவியுடன் விழிப்புக்குழுக்களை அமைப்பதன் மூலம் களவுகளை குறைக்க முடியும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (6)

# 2கிலோ போலி தங்க நாணயங்களைக் கொடுத்து 50 லட்சம் ரூபா மோசடி செய்த கும்பல் சிக்கியது

பதுளை,பெப்.18

பதுளை வர்த்தகர் ஒருவருக்கு இரண்டு கிலோ போலி தங்க நாணயங்களைக் கொடுத்துவிட்டு அவரிடமிருந்து ஐம்பது லட்சம் ரூபா பணத்தை மோசடியாகப் பெற்றனர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அநுராதபுரம் பொலிஸ் நிலைய விஷேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி நிமல் சாந்த தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஐந்து தங்க நாணயங்களை வழங்கி நம்பிக் கையை ஏற்படுத்திக் கொண்ட இந்தச் சந்தேகநபர்கள் பின்னர் அதே வகையானது எனக் குறிப்பிட்டு மேலும் 1,200 போலி தங்க நாணயங்களை வழங்கி ஐம்பது லட்சம் ரூபாவைப் பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாணயங்களை வாங்கிய வர்த்தகர் அவற்றை உருக்கியபோது அவை போலித் தங்க நாணயங்கள் என்பதை அறிந்து பதுளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதுபற்றி அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் நிலைய விஷேட குற்றத்தடுப்புப் பிரிவினருக்குத் தகவல் வழங்கப்பட்டது. துரிதமாகச் செயற்பட்ட பொலிஸார் வியாபாரிக்கு போலி தங்க நாணயங்கள் வழங்கப்பட்ட எப்பாவல கெலேதிவுள்வெள பகுதியில் வைத்து ஹாலிஎல மற்றும் பதுளையைச் சேர்ந்த மூவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

சம்பவத்துடன் மேலும் பலர் தொடர்புபட் டிருக்கலாம் எனக் கருதப்படுவதால் அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என விஷேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

# ஊவா மாவேலகம பகுதி மக்கள் மின்சார வசதிகோரி ஆர்ப்பாட்டம்

ஹல்துமுல்லை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஊவா மாவேலகம ஐஸ்பீலி கிராமப் பகுதிக்குக் கடந்த 20 வருடங்களாக மின்சார வசதி செய்துதரப்படாமைக்கு ஆட்சேபனை தெரிவித்து மேற்படி கிராம மக்கள் கடந்த சனிக்கிழமை மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்தக் கிராமத்தில் 40 இற்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. கடந்த பொதுத் தேர்தலின்போது கிராமத்துக்குப் பயணம் செய்த அரசியல்வாதிகள் அனைவரும் மின்சாரம் பெற்றுத் தருவார்கள் என உறுதியளித்தனர். அவை நிறைவேற்றப்படவில்லை எனப் போராட்டத்தில் ஈடுபட்ட கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர். அவர்கள் பல்வேறு கோஷங்கள் அடங்கிய பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

யானைத் தொல்லை அதிகரித்துள்ள இந்தக் கிராமத்தில் பல வீடுகள் யானைகளால் சேதமாக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் பிரதேசசபைத் தேர்தலுக்கு முன்னர் இந்தக் கிராமத்திற்கு மின்சார இணைப்பை வழங்க வேண்டும். அப்படி வழங்காத எவரும் தேர்தல் பிச்சை கேட்டு இங்கு வரக்கூடாது என்றும் கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர். மின்சாரவசதி இல்லாத காரணத்தால் பிள்ளைகளின் கல்வி நிலை குறித்தும் தாம் கவலை கொண்டுள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கண்டி வைத்தியசாலையில் ஈ.என்.ரி.சிகிச்சை ஸ்தம்பிதம்

கண்டி,பெப்.18

கண்டி வைத்தியசாலையின் காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவுகளின் (ENT) சிகிச்சை நடவடிக்கைகள் நோய்க் கிருமிகளின் தாக்கம் காரணமாகத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

சிகிச்சைப்பிரிவு மிகவும் அசுத்தமாக இருப்பதாலும் நோய்க் கிருமிகள் பெருகி இருப்பதாலும் விசேட வைத்திய நிபுணர்கள் சிகிச்சைகளை இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவசர நோயாளிகளுக்கு மட்டும் இங்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டு அவர்கள் சிகிச்சையின் பின் உடனடியாக கேகாலை, கொழும்பு, நாவலப்பிட்டி, மாத்தளை வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றனர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தநிலை பற்றி சுகாதார அமைச்சின் உயரதிகாரிகளுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது என காது, மூக்கு, தொண்டைப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# 11 பாடசாலைகளுக்கு அருகில் மாத்தளையில் மண் சரிவு அபாயம்

மாத்தளை,பெப்.18

மாத்தளை மாவட்டத்திலுள்ள சுமார் 11 பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் மண்சரிவு மற்றும் நிலம் தாழிறங்கல் ஏற்படும் சாத்தியக்கூறுகள் உள்ளன எனத் தேசிய கட்டுமான ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.

இதனால் குறிப்பிட்ட பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேசங்களை அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன என பூகற் பவியலாளர் எச்.எம். சீ.யு. மொரேமட தெரிவித்துள்ளார்.

மாத்தளை சிறிமாவோ பண்டாரநாயக்க இரண்டாம் தர பிரிவு ஆரம்பப் பாடசாலை, புஸ்வெல்ல மகாவித்தியாலயம், கம்மடுவ பாடசாலை, பம்பரகல வித்தியாலயம், வகிகல வித்தியாலயம், வலேவல பாடசாலை, மாத்தளை இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளே இவ்வாறு அறிவுறுத் தப்பட்ட பாடசாலைகள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(204)

# வெண்சந்தனம் கடத்தியவர் கைது

75 கிலோ வெண் சந்தனத்தைக் கடத்த முயன்ற நபர் ஒருவர் பதுளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை ரொக்ஹில் தோட்டத்திலுள்ள காளியம்மன் ஆலய புனித பூமியிலிருந்து திருடப்பட்ட இந்தச் சந்தனத்தை விற்பனைக்காக ஓட்டோவில் கொண்டு சென்றபோதே இவர் கைதானார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

29 வயதான சந்தேகநபர் பதுளை கலுகல்பிட்டிய பிரதேசவாசியாவார். பதுளை தலைமையகப் பொலிஸ் பிரதம பொறுப்பதிகாரி பண்டாரரத்நாயக்கவின் தலைமையில் சென்ற குழுவே இவரைக் கைது செய்துள்ளது.


சீர்த்த மகள் உஷாதேவி செழும்பொற் சோதித் திருவடி சேர்ந்த

# ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை அருள் மடியில்: 08.11.1950



தெய்வத் திருவடியில்: 01.03.2010

தேவபதமடைந்த

## திருமதி உஷாதேவி ஜெகநாதன்

சொர்க்கபுரி சேர்ந்த திதி:
அபரபக்கப் பிரதமை (19.02.2011)

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம், மனநிறைவு தந்து பற்பல
பேறுதனைப் பெற்றென்னை கண்ணிமைபோல் காத்துக் கைகோர்த்து துயர்
மகிழ்வில் கலந்தனை; ஐவர்தமை பெற்றுவந்து நலம்பேணிக் காத்தனை, அன்ப
தனைக் குழைத்தூட்டிப் பூவுலகில் உருப்படியாய் உலவ வைத்தனை, அம்மம்மா
அப்பம்மா என அழைத்த மழலைச் செல்வக் குரல்கள் எப்பொழுதும்
ஒலித்துக்கொண்டே இருக்கிறதே, புடம்போட்ட தங்கமெனத் திக்கெல்லாம் உம்
புன்னகை பூத்தமுகம், தேவதையாய் குலம்காக்க தேசம் சேர்த்தனை; பெற்றால்தான்
பிள்ளையா பெருவாழ்வில், மாமியென்றும் உமை எப்போதும் அழைக்காமல்
அம்மாவென்றே அழைத்த அந்த மருமக்கள் குரல்களும் கேக்கலையோ? ஆருயிரே
உன்னன்பு போதுமென்றிருந்தேன். ஏங்கி ஏங்கி வெதும்புகின்றேன். இது உமக்குத்
தெரியலையோ? வேகிறது நெஞ்சம் யாரிடம் சொல்லியழ?

என்றும் உன் நினைவில் - அன்புக்கினிய கணவர்

தாயன்புக்கீடாகத் தரணியில் ஏதும் உண்டோ, தாழாத சோகமெமைத் தழுவியும்
நிற்கிறதே. ஏனம்மா எமைவிட்டு நிலவாய் ஒளிர்ந்துவிட்டாய் எம்வீட்டு மல்லிகைப்பூ.
எமைவாழ வைத்துவிட்டு தான் தேய்ந்துபோன தங்கப்பிறை நிலவானதேன்;
என்றுமுங்களை நினைந்து நினைந்து நிதம் ஆறாய் பெருக்கெடுக்கிறதே எம் கண்ணீர்.

**நாளை (19.02.2011) சனிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

*பாடசாலை வீதி,*
*கெருடாவில்,*
*தொண்டமானாறு.*
*021 3214143*

அருமைமிகு மக்கள்,
அரிய மருமக்கள்,
பேர் விளங்கும் பேரர்கள்,
தாய்மாமன்.

(357)

# மூதூர்ப் பிரதேச சபை நிர்வாகத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றும்

## வேட்பாளர் திருச்செல்வம் உரை

திருகோணமலை,பெப்.18

மூதூர்ப் பிரதேச சபை நிர்வாகத்தை எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி கைப்பற்றுவதற்கான வாய்ப்புண்டு. தமிழ் வாக்காளர்கள் ஒரே அணியில் நின்று ''வீடு'' என்ற சின்னத்திற்கு வாக்களிப்பதன் மூலமே இதனை அடையமுடியும்

- இவ்வாறு மூதூர்ப் பிரதேச சபைக்கான தேர்தலில் தமிழரசுக் கட்சியின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் க.திருச்செல்வம் மூதூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மூதூர் அந்தோனியார் தேவாலய பங்குச் சபையின் செயலாளர் சுரேஷ் இந்தப் பிரசாரக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். அங்கு திருச்செல்வம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மூதூர்ப் பிரதேச மக்களுக்கு அரசு வழங்கிய நிவாரண உதவிகள் ஒழுங்காக அவர்களைச் சென்றடையவில்லை. இந்த விடயத்தில் அரசு தனது கடமையைச் செய்யத் தவறிவிட்டது.

எமது கைகளில் அதிகாரம் இல்லாததால்தான் இந்த நிலை மூதூர் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிலைத்து நிற்கக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றின் மூலமே விடிவு காண முடியும்.

அதற்கான வல்லமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உண்டென்பதை 2010 நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் அரசுக்கும், சர்வதேசத்திற்கும் திட்டவட்டமாக மக்கள் தெரிவித்துவிட்டனர். இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தீர்க்கமான நிலைப்பாட்டை எடுத்து முன்னோக்கிச் செல்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் ஒரு உந்துசக்தியாக அமையவேண்டும்.

இதனை ஒவ்வொரு தமிழனும் மனதில் நிறுத்தி தமது வாக்குரிமையை ஒரே அணியாக நின்று பயன்படுத்த வேண்டும் - என்றார்.

# வன்முறைகளில் ஈடுபட்டால் அது வேட்பாளர்களையும் பாதிக்கும்

அம்பாறை,பெப்.18

தேர்தல் நீதியானதும், நியாயமானதுமாக அமைய வேண்டுமெனில் அதன் பொறுப்பு அனைத்து வேட்பாளர்களுக்கும் உரியதாகும். வேட்பாளர்கள் கட்டுக்கோப்புடன் நடந்துகொள்வதன் மூலமே மக்களின் செல்வாக்கினைப் பெறலாம். மாறாக வன்முறைகளில் ஈடுபட்டால் அது தேர்தலையும், உங்களையும் பாதிக்கும் என சிரேஷ்ட அமைச்சர் பீ.தயாரத்ன தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான விசேட கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை சிரேஷ்ட அமைச்சர் பீ.தயாரட்னவின் அம்பாறை இல்லத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஒரு வேட்பாளன் மிகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற வேண் டும் என நினைக்காமல் கூடுதலான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதில் அக்கறையும், ஆர்வமும் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி நாட்டை அபிவிருத்தி செய்து வறுமையை ஒழிக்கும் திட்டத்திற்கு எடுக்கும் முயற்சிக்கு இந்தத்தேர்தலில் அனைத்து மக்களையும் வாக்களிக்க அனைத்து வேட்பாளர்களும் வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்ய வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறியாணி விஜேவிக்கிரம, ஜனாதிபதியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஏ.எம்.எம்.நௌஷாத் மற்றும் வேட்பாளர்களும் கலந்துகொண்டனர். (204)

# சூழலைப் பாதுகாக்கும் சவுக்கு மரங்கள் வெட்டப்படும் அபாயம்

மட்டக்களப்பு,பெப்.18


மண்ணரிப்பைத் தடுக்கும் வகையிலும் சூழலைப் பாதுகாக்கும் வகையிலும் இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் வகையிலும் வாகரை முதல் பொத்துவில் வரை நடப்பட்ட இரண்டு லட்சம் சவுக்கு மரங்கள் தற்போது இனந்தெரியாதோரால் நாளுக்குநாள் வெட்டப்பட்டுவருகின்றன.

ஓந்தாச்சி மடம், களுவாஞ்சிக்குடி, களுதாவளை, தேத்தாதீவு போன்ற இடங்களில் சீராகப் பராமரிக்கப்பட்டு வந்த இந்த மரங்கள் தற்போது நாளுக்கு நாள் இனந்தெரியாதோரால் வெட்டப்படுகின்றன.

இதைத் தடுக்க மண்முனை, தென்எருவில்பற்று பிரதேச செயலகமோ, மத்திய சூழல் அதி கார சபையோ, பொலிஸாரோ, பிரதேச சபையோ இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர்.

(204)

## பாதிக்கப்பட்டோருக்கு உதவி...



திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுவலு தேவையுடையோர்களுக்கு முச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.
சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட இந்தமுச்சக்கர வண்டிகளை கிழக்கு மாகாணசபை பிரதித் தவிசாளர் ஆரியவதி கலபதி, மாகாணசபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர் ஆகியோர் வழங்கி வைத்தனர்.
*(204)*

# பாலம் உடைந்ததால் போக்குவரத்து செய்யமுடியாத நிலை

மட்டக்களப்பு,பெப்.18

வாகரை கட்டுமுறிவு கதிரவெளி வீதியில்அமைந்துள்ள உப்புத் தண்ணீர் கட்டுப்பாலம் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் உடைந்துள்ளது.

இதனால், கட்டுமுறிவு, ஆண்டான் குளம், தோணிதாண்டமடு, மாணிக்கம், போன்ற கிராமங்களில் வசிக்கும் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாமல் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பகுதிகளில் பெரும்போக வேளாண்மையை மேற்கொண்ட பிரதேச விவசாயிகள் அறுவடைக்காக இயந்திர சாதனங்களையும் மற்றும் ஏனைய போக்குவரத்துச் சாதனங்களையும் இடம் நகர்த்த முடியாதுள்ளதுடன் நோயாளர்களுக்காக அம்புலன்ஸ் வாகனத்தையும் உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

மக்கள் இந்தப் பாலத்தை போக்குவரத்துச் செய்வதற்கு ஏற்ற வகையில் புனரமைப்பு செய்து தரும்படி சம் பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(204)

# காரைதீவு பள்ளிவாசல் பிரதிநிதிகளுடன் அமெரிக்கத் தூதரக அதிகாரி சந்திப்பு

மட்டக்களப்பு,பெப்.18

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திலுள்ள அரசியல் நடவடிக்கைக்குப் பொறுப்பான அதிகாரி திருமதி பத்மினிக்கும் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளன பிரமுகர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் புதன்கிழமை காலை காத்தான்குடியிலுள்ள சம்மேளன அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் சம்மேளனப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். தற்போதைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிலவரம் மற்றும் வெள்ள நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக திருமதி பதிமினி கேட்டறிந்து கொண்டார். மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமான இணையத்தின் மூலம் மாவட்டத்தில் பல்வேறுபட்ட தரப்புக்களையும் இவர் சந்தித்து வருகின்றார்.

(204)

# பிறந்தநாளையொட்டி கிண்ணியாவில் இரத்ததானம்

முஹம்மது நபியின் பிறந்த நாளையொட்டி நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரத்ததானம் கிண்ணியா மத்திய கல்லூரி மண்டபத்தில் காலை9.00மணி தொடக்கம் பிற்பகல்3.00 மணி வரை நடைபெற்றது.

கிண்ணியா தள வைத்தியசாலை இரத்த வங்கிக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி எப். ராஜியா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் 18 வயது தொடக்கம் 60 வயது வரையான ஆண்கள், பெண்கள் உட்படப் பலர் இரத்ததானங்களை செய்தமை குறிப்பிடத்தக்கது. (204)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இலங்கை வங்கி ஊழியரின் நிவாரணம்

திருகோணமலை,பெப்.18

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை வங்கி ஊழியர்கள் நிவாரணப் பொருள்களை வழங்கி வைத்தனர். தமது ஒரு நாள் ஊதியத்தில் இருந்து திரட்டப்பட்ட 13 மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்கள் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னறுவை, அநுராதபுரம், பதுளை ஆகிய மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிர்த்தனர்.

திருகோணமலை மாவட்டத்திற்கு 40 இலட்சம் பெறுமதியான பொருள்கள் 1,000 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. இவை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் கப்பல்துறை கிராமத்தில் 150 குடும்பங்களுக்கும், கடவெல பிரதேச செயலயாளர் பிரிவில் 400 குடும்பங்களுக்கும், மொரவேவ பிரதேச செயலாளர் பிரிவில் 200 குடும்பங்களுக் கும், கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் 150 குடும்பங்களுக்கும், தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவில் 100 குடும்பங்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கை வங்கியின் கிழக்கு மாகாணப் பொது முகாமையாளர் சமிந்த வெலகெதர, திருகோணமலை பிரதான கிளை முகாமையாளர் சரத்குமார் மற்றும் இலங்கை வங்கியாளர் சங்கத்தின் பிரதிநிதி அமிர்தலிங்கம், மற்றும் பிரதேச கிளை முகாமையாளர்கள், ஊழியர்கள் இணைந்து இப்பொருள்களை வழங்கி வைத்துள்ளனர். (204)

# வலது குறைந்தோர் பாடசாலைக்கு உதவி

மட்டக்களப்பு,பெப்.18


மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட திராய் மடு வலது குறைந்தோர் பாடசாலைக்கு மீள்குடியேற்ற அமைச்சு மூலம் உணவு மற்றும் உடைகள் வழங்கப்பட்டன.

மீள்குடியேற்ற அமைச்சின் இணைப்புச்செயலாளரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மாவட்ட மகளிர் அமைப்பாளருமான ருத்திரமலர் ஞானபாஸ்கரனினால் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட வலது குறைந்தோர் பாடசாலைகளுக்கு மீள்குடியேற்றப் பிரதியமைச்சரின் நேரடிக் கண்காணிப்பில் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(204)

## எண்களின் பாடல்



ஒன்றும் ஒன்றும் இரண்டடா
ஓடிவாயேன் திரண்டாட
இரண்டும் ஒன்றும் மூன்றடா
இருப்பேன் உன்னைப் போன்றடா
மூன்றும் ஒன்றும் நான்கடா
உலகின் திசைகள் நான்கடா
நான்கும் ஒன்றும் ஐந்தடா
நான் இருப்பேன் நயந்தடா
ஐந்தும் ஒன்றும் ஆறடா
நீ எந்த ஊரடா
ஆறும் ஒன்றும் ஏழடா
ஆறுமுகன் வேலடா
ஏழும் ஒன்றும் எட்டடா
எண்ணித் தாரேன் வட்டடா
எட்டும் ஒன்றும் ஒன்பதடா
உலகின் சக்திகள் ஒன்பதடா
ஒன்பதும் ஒன்றும் பத்தடா
அறிவே உனது சொத்தடா

கு. ருபிகா
தரம் 1
யாழ்.இ.ம. ஆரம்பப் பாசாலை.

## வண்ணக் கோலங்கள்...



திறமை:-சுரபி முன்பள்ளி மாணவர்களின் கலைவிழா நிகழ்வு கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றபோது சிறார்கள் அபிநயப் பாடல்களை இசைப்பதைக் காணலாம்.

## புராதன காலத்தில் சவர்க்காரம்

சவர்க்காரம் கி.மு 1000 ஆம் ஆண்டிலேயே முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. உரோமிலுள்ள 'சம்போ' மலையின் அடிவாரத்திலிருந்தே சவர்க்கார உற்பத்தி ஆரம்பமானாதாகவும் அதனாலேயே அதற்கு 'சோப்' எனும் பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

அக்காலப்பகுதியில் ஒரு நாள் 'சம்போ' மலையின் அடிவாரத்தில் ஓடும் ஆற்றில் சில பெண்கள் தமது ஆடைகளைக் கழுவிக்கொண்டு இருந்துள்ளனர். அந்த மலையின் ஓர் உயரமான இடத்தில் மிருகங்களைப் பலியிடும் வேலைகள் நடைபெற்றுள்ளன. அந்த இடத்திலிருந்து கரைந்துவரும் மண் உடைகளில் படும்போது அந்த உடைகள் ஆச்சரியப்படும் வகையில் சுத்தமாவதை அந்தப் பெண்கள் அவதானித்துள்ளனர். மிருகக் கொழுப்பானது மண்ணுடன் கலந்து ஆடையில் படும்போது அவை சுத்தமாவது இதிலிருந்து தெரியவந்துள்ளது. இதுவே சவர்க்கார உற்பத்திக்கு அடித்தளமாக அமைந்துள்ளதாகவும் தெரிகிறது.

படிப்படியாக மிருகக் கொழுப்பைக் காய்ச்சி அதனுடன் மரப்பிசினையும் கலந்து சவர்காரம் தயாரித்துள்ளனர். காலப்போக்கில் சவர்க்காரத்தின் கட்டித்தன்மைக்காக அந்தக்கலவையில் உப்பு நீரும் சேர்க்கப்பட்டது. தாவர, விலங்குக் கொழுப்பு எண்ணெய், பொட்டாசியம், சோடியம் கலந்து உப்பு வாசனைப் பொருள்களை நிறக்கலவைகளுக்காகச் சேர்த்து தற்போது பாவனையில் உள்ளன போன்ற சவர்க்காரங்கள் தயாரிக்கின்றனர்.

உடலில் தேய்த்துக் குளிக்கும் சவர்க்காரத்தில் பொட்டசியமும் உப்பும் துணி துவைக்க உபயோகிக்கும் சவர்க்காரத்தில் சோடியமும் உப்பும் சேர்க்கப்படுகின்றன.

வாணி.

## புரோகிதர்களுக்கு தெனாலி புகட்டிய பாடம்

### தெனாலிராமன் கதைகள்



மன்னர் கிருஷ்ண தேவராயரின் தாயாருக்குத் திதி வர இருந்தது. அரசர் முறைப்படி திதி செய்ய புரோகிதர்களை அழைத்து யோசனை கேட்டார். அவர் தாயார் சாவதற்கு முன் ஒரு மாம்பழம் வேண்டும் என்றார். அதை கொண்டு வந்து கொடுப்பதற்குள் அவர் உயிர் பிரிந்துவிட்டது. அதனால் அவரது ஆத்மா சாந்தியடைய மார்க்கம் கேட்டார்.

புரோகிரதர்களுக்கு பேராசை ஏற்பட்டது. அவர்கள் "பேரரசே அந்நாளில் நூற்றெட்டுப் புரோகிதர்களுக்கு நூற்றெட்டு வெள்ளித்தட்டுகளில் பொன்னால் செய்த மாங்கனிகளைத் தானமாகக் கொடுங்கள். அப்பொழுது தாயாரின் ஆத்மா சாந்தியடையும்" என்றனர்.

அரசர் ஒப்புக்கொண்டார். திதி நாளில் அவர்கள் கூறியவாறே பொன்னால் செய்த மாம்பழங்களை வெள்ளித் தட்டுகளில் வைத்து நூற்றெட்டுப் புரோகிதர்களுக்கு தானமாகக் கொடுத்தார். அவர்கள் பெரும் மகிழ்ச்சியுடன் சென்றனர்.

இதைக்கண்ட தெனாலி இராமனுக்கு வேதனையாக இருந்தது. இந்தப் புரோகிதர்கள் மாம்பழங்களை கேட்டிருக்கலாம். அதை விட்டுவிட்டு பொன்னால் செய்த மாம்பழங்களை வெள்ளித்தட்டில் வைத்துக் கேட்டார்களே! இவ்வளவு பேராசை அவர்களுக்கு கூடாது. எனவே அவர்களுக்குச் சரியான புத்தி புகட்ட வேண்டும் என்று எண்ணினான்.

ஒருநாள் இராமன் அந்த புரோகிதர்களைத் தன் தாயாருக்கு திதி கொடுக்க வருமாறு அழைத்தான். அவர்களும் ஏதாவது தானம் கிடைக்கும் என நம்பி அவன் வீட்டிற்கு வந்தனர். இராமன் அவர்களை வீட்டினுள் இருக்கச் செய்தான். நெருப்பில் இரும்புக் கம்பியை பழுக்க காய்ச்சி ஒவ்வொருவர் கையிலும் சூடு போட்டான் அவர்கள் துடித்தும் விடவில்லை.

மிகுந்த வேதனையடைந்த அவர்கள் மன்னரிடம் சென்று முறையிட்டனர். அரசருக்கு மகா கோபம் ஏற்பட்டது. உடனே இராமனை அழைத்து, "இராமா! ஏதுமறியாத புரோகிதர்களை துன்புறுத்துகிறாயே! இது நியாயமா?" என்றார்.

அதற்கு தெனாலி ராமன், "அரசே என் தாயார் காலமாகிவிட்டது தங்களுக்குத் தெரியும். அவர் இறப்பதற்கு முன் வலிப்பும், இழுப்பும் ஏற்பட்டது. அப்போது 'அடுப்பில் கம்பியைக் காய்ச்சி எனக்குச் சூடு போடு, வலிப்பு நின்று விடும்' என்றார். அவ்வாறு கம்பியைக் காய்ச்சி எடுத்துக்கொண்டு வருவதற்குள் இறந்துவிட்டார்கள். இவ்வளவு காலம் அவர்கள் ஆத்மா சாந்தி அடைய வழி தெரியாது விழித்துக் கொண்டிருந்தேன். தங்களின் தாயார் ஆத்மா சாந்தியடையப் புரோகிதர்கள் சொன்னபடி பொன்னால் செய்த மாம்பழங்களை வெள்ளித்தட்டில் வைத்துக் கொடுத்தீர்கள். அப்பொழுது தான் எனக்கும் வழி தெரிந்தது. எனது தாயார் கேட்டுக் கொண்டபடி இவர்களுக்கு சூடு போட்டேன்! இது தவறா? என்றான்.

இதைகேட்ட மன்னரும் அவையிலிருந்தவர்களும் சிரித்தனர்.

பேராசை மிகுந்த புரோகிதர்களுக்கு இந்தத் தண்டனை அளித்தது சரியே என்று அனைவரும் சந்தோசமுற்றனர்.

(முற்றும்)

## முன்பள்ளியின் அவசியம்



முன்பள்ளி எனப்படுகின்ற பாலர் கல்வியின் அவசியம் குறித்து பல்வேறு மட்டங்களில் பேசப்பட்டாலும் அவை முறை சார்ந்த அமைப்புகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுவது இல்லை.

பாடாசலைக்கு தரம் 01 இல் அனுமதி பெறும் பிள்ளைகளுக்கு முன்னோடித் திட்டமாக முன்பள்ளியில் வழங்கப்படுகின்ற கற்றல் நடவடிக்கைகள் அமைகின்றன. இதனால் முன்பள்ளியில் தரமான, சிறந்த கற்கை நெறிகள் வழங்கப்படவில்லை என்ற அப்பிள்ளையின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மழுங்கடிக்கப்பட்டுவிடும்.

நகரங்களில் மட்டும் முன்பள்ளிகள் இருந்த காலங்கள் மறைந்து ஒவ்வொரு கிராமங்களிலும் முன்பள்ளிகள் தோற்றம் பெற்றுள்ளன. இதற்குக் காரணம் சிறார்களின் கல்வியின் தேவையும் அதன் அவசியமும் முக்கியத்துவம் அடைந்தமை ஆகும்.

முன்பள்ளிகளின் சூழல் மகிழ்ச்சிகரமாகவும் அழகானவையாகவும் இருத்தல் அவசியம் ஆகும். இதனால் பிள்ளைகளின் மனதில் உடல் உளத்தாக்கங்கள் ஏற்படாமல் உற்சாகத்துடனும் விருப்புடனும் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் நான்கு வயதுக்கு மேற்பட்ட ஐந்து வயது வரையிலான சிறார்களுக்குப் பயிற்றப் பட்ட ஆசிரியரின் கண்காணிப் பிலும் வழி காட்டலிலும் பாடத்திட்டங்களை வழங்கல் வேண்டும் .

பாடசாலைக் கல்விக்கு அத்திவாரமாக அமைவது முன்பள்ளிக் கல்வியாகும். இவ்வாறு பல்வேறு கோணத்தில் முக்கியத்துவம் பெற்ற ஆரம்பப் பருவப் பிள்ளைகளுக்கான இக்கல்வியை முறையாக அமைத்துக்கொடுத்தல் அவசியமாகும். பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு ஏற்ற கல்விச்சூழலை வழங்கக் கூடிய முன்பள்ளி நிலையங்களைத் தெரிவுசெய்து அதற்கான வழிமுறைகளில் பிள்ளைகளின் கற்றலில் அக்கறை கொள்ளல் வேண்டும்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பார்கள். அதனால் உரிய வகையில் சிறந்த முன்பள்ளிகளினூடாகப் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு அத்திபாரம் போடுவது பெற்றோர்களின் கடமையாகும்.

ஜீவன், மானிப்பாய்.

# அதிகாரப் பரவலாக்கத்தின்போது கீழ் மட்டத்தின் கருத்தும் அவசியம்

## இந்திய பொது நிர்வாக நிலையப் பணிப்பாளர் தெரிவிப்பு

அதிகாரப் பரவலாக்கத்தின்போது அடிமட்டத்திலுள்ளவர்களின் கருத்துக்களும் பெற வேண்டும் - என இந்திய பொது நிர்வாக நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ராகேஷ் ஹுஜா தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு கற்கை நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பிலான தேசிய மன்றம் தம்புள்ளை, கன்டலம அமாயா லேக் ஹோட்டேலில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அதிகாரப் பரவலாக்கம் அவசியம் என்பதற்காக மேற்கொள்ளக்கூடாது. நோக்கங்களை அறிந்தே அதிகாரப் பரவலாக்கம் மேற்கொள்ளப்படும்.

இன்றைய காலகட்டத்திலுள்ள அரசியல்வாதிகள் சிறப்புரிமைகளையும் சலுகைகளையுமே எதிர்பார்க்கின்றார்கள். அவர்கள் மீதுள்ள பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள ஒரு போதும் தயாரில்லை.

அபிவிருத்தி தொடர்பான தீர்மானங்கள் அடிமட்டத்திலிருந்தே எடுக்க வேண்டும். ஆனால் இன்று அவ்வாறு நடப்பதில்லை.

தீர்மானங்கள் மத்திய அரசினால் தலைநகரிலிருந்து எடுக்கப்படுகின்றன. இந்தத் தீர்மானங்களை அடிமட்டத்திலுள்ள மக்கள் மத்தியில் அமுல்படுத்தத் தயாராகும்போது பல சிரமங்கள் எதிர் நோக்கப்படுகின்றன.

மத்திய அரசு, மாகாண அரசு மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் என்பனவற்றுக்கிடையில் நெருங்கிய உறவு பேணப்பட வேண்டும். இதனூடாக மக்களுக்கு நிறைய அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும்.

மத்திய அரசுகள் எப்போதும் தனக்கு கீழுள்ள அரசுகளைக் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றன - என்றார். (சி)

# பல்கலை அனுமதியில் ஆங்கிலப்பாடம்; அநீதியானது என்கிறது ஆசிரியர் சங்கம்

கொழும்பு, பெப்.18

பல்கலைக்கழகத்திற்குத் தகுதி பெறுவதற்கு ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைவது கட்டாயம் என்ற தீர்மானம் இலவசக் கல்வியைப் பெறுவதற்கான மாணவர்களின் உரிமைக்கு பெரிய சவாலாகும் - என இலங்கை ஆசிரியர்கள் சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பல பாடசாலைகளில் ஆங்கிலத்தைக் கற்பிப்பதில் பெரும் எண்ணிக்கையிலான பிரச்சினைகள் உள்ளன. இந்தநிலையில் இந்தத்தீர்மானம் மிகவும் பாரபட்சமான - மாணவர்களுக்கு அநீதியிழைக்கும் தீர்மானம் என நாம் நம்புகிறோம் - என மேற்படி சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

ஆங்கிலம் கற்பிப்பதற்கு வசதிகள் பற்றாக்குறையாக உள்ளதால் பல கிராமியப் பாடசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்பதை நிராகரிக்க முடியாது. எனினும், இந்தத் தீர்மானம் ஆயிரக்கணக்கான மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பை இழப்பதற்கு வழிவகுக்கும்.ஆங்கிலம் கற்பது மிக முக்கியமானது. ஆயினும் ஆங்கிலத்தில் திறமையில்லாததால் மாத்திரம் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பைத் தடுப்பது நியாயமற்றது - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பேஸ்புக் தில்லுமுல்லுகள்; முறைப்பாடுகள் பதிவு

'பேஸ்புக்' எனப்படும் முகப்புத்தக வலைத்தளத்தை பயன்படுத்தி பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட 400 இற்கும் அதிகமானவர்கள் குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என இலங்கை கணினி அவசர பிரசார மையம் தெரிவித்துள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அந்த மையத்தின் பாதுகாப்பு பொறியியல் பிரிவு பேச்சாளர் ரோஹண பல்லியகுரு தெரிவித்துள்ளார்.

இணையத்தளத்தின் ஊடக மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்கள் குறித்து எவரும் தம்மிடம் முறைபாடுகளைப் பதிவுசெய்ய முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நவம் மகா பெரஹரா...



கொழும்பு, கங்காராமை விகாரையின் நவம் மகா பெரஹரா நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெரஹெறாவின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டுள்ளார். (204)

# சேதமடைந்த வீதிகளைத் திருத்த 92 கோடி 70 லட்சம் தேவை

வடமத்திய மாகாணத்தில் ஏற்பட்ட அடைமழை மற்றும் வெள்ளப் பெருக்குக் காரணமாக சேதமடைந்த வீதிகளைப் புனரமைப்பதற்காக 92 கோடி 70 லட்சம் ரூபா செலவாகுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. வட மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரி செனரத் புஷ்பகுமார இதனைத் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் தற்பொழுது 400 கிலோ மீற்றர் வீதிகளே சிறந்த முறையிலுள்ளன. சேதமடைந்துள்ள வீதிகளின் புனரமைப்புப் பணிகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 2000 ஆம் ஆண்டு மிருசுவில் படுகொலைகள் சம்பவ இடத்தைப் பார்க்க நீதிபதிகள் தீர்மானம்

கொழும்பு, பெப்.18

11 வருடங்களுக்கு முன்பு யாழ். மிருசுவிலில் எட்டுப் பொது மக்கள் சுட்டுக் கொல்லப்பட்ட இடத்தை நேரில் பார்வையிடுவது என கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரடங்கிய ஆயம் கடந்த செவ்வாய்க்கிழமை ஏகமானதாகத் தீர்மானித்துள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டு டிசெம்பர் 19 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த நாளொன்றில் மிருசுவிலில் எட்டுப் பொது மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது முறைப்பாட்டாளரினதும், எதிர்த்தரப்பினரினதும் சம்மதத்துடன் குறிப்பிட்ட இடத்தை பார்வையிட நீதிபதிகள் தீர்மானித்துள்ளனர்.

இந்தவழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகளான திருமதி தீபாலி விஜேசுந்தர (தலைமை நீதிபதி), சுனில் ராஜபக்ஷ, பீ.பி.வராவெவ ஆகியோர் அடங்கிய விசேட ஆயத்தால் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

இந்தப் படுகொலையைச் செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சுனில் ரத்நாயக்க, சேனக முனசிங்க, எம்.ஜயரத்ன, புஷ்பசமன் குமார, காமினி முனசிங்க என்ற ஐந்து இராணுவச் சிப்பாய்களுக்கு எதிராக 17 குற்றச்சாட்டுகளுடன் சட்ட மா அதிபரால் இந்தவழக்கு தொடரப்பட்டிருந்தது.

வழக்கின் அடுத்த விசாரணை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (சி)

# மிளகாய் இடைத்தரகருக்கு இருபதாயிரம் ரூபா பணம்

ஒரு கிலோ பச்சை மிளகாய் 500 ரூபா என்ற வீதத்தில் 113 கிலோ பச்சை மிளகாயை விற்ற பணத்தில் இடைத் தரகர் 20,340 ரூபாவை தரகுப் பணமாக வாங்கிய சம்பவம் ஒன்று சாலியவெவ பிரதேசத்தில் நடந்துள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருபவை வருமாறு:-

சூரியவெவ பிரதேசத்திலுள்ள விவசாயி ஒருவர் 113 கிலோ பச்சை மிளகாயை கொழும்புக்கு அனுப்புவதற்காக வழக்கம் போலவே இந்த இடைத்தரகரிடம் கொடுத்துள்ளார். தற்போதைய விலை 500 ரூபா வீதம் விவசாயிக்கு 56ஆயிரத்து 500 ரூபா பணம் சேரவேண்டும்.

இடைத்தரகரோ மிளகாய் கிலோ ஒன்றுக்கு 300 ரூபா வீதம் கணக்கிட்டு அதிலும் போக்குவரத்து, சுமை கூலி போன்றவற்றைக் கழித்துக்கொண்டு விவசாயிக்கு 30 ஆயிரம் ரூபாவைக் கொடுத்துள்ளார்.

பச்சை மிளகாயின் தற்போதைய விலை பற்றி நன்கு அறிந்திருந்த விவசாயி கொழும்பு முதலாளியுடன் தொடர்பு கொண்டபோது,அவரது மிளகாய் கிலோவொன்று 500 ரூபாவுக்கு விலை போனமை தெரியவந்துள்ளது.

# வன்முறைகளால் மக்கள் மனதை வெல்ல முடியாது ஜனநாயகத்தின் மூலம் சாதித்துக் காட்டுவோம்

அரசியல் ரீதியாகத் தமக்கு ஏற்றவாறு மக்கள் மாறவேண்டுமென சில அரசியல் வாதிகள் விரும்புகின்றனர். அதை நிறைவேற்றிக் கொள்வதற்காக வன்முறைகளிலும், ஜனநாயக விரோத செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். ஆனாலும் அவர்களின் விருப்பம் நிறைவேறுவதில்லை. நாம் விரும்பியவாறு மக்களை மாற்ற நினைப்பது புத்திசாலித்தனமல்ல. மக்களுக்கேற்றவாறு தன்னை மாற்றிக்கொள்வதே நல்ல அரசியல்வாதியின் பண்பாகும் - என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அட்டாளைச்சேனை பிரதேச சபை முதன்மை வேட்பாளர் ஏ.எல்.எம். நஸீர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிரதேசஇளைஞர்களைத் தனது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் வானத்திலிருந்து குதித்தவனல்லன். ஏழ்மை குறித்தும், இளைஞர்களின் பிரச்சினை பற்றியும் நான் நன்கறிவேன். அவைகளை நானும் அனுபவித்திருக்கின்றேன். உள்ளூராட்சி மன்ற அதிகாரத்தினூடாக மக்களுக்கு என்ன செய்ய முடியுமே அதைச் செய்ய வேண்டும் எனும் ஆவலில் நான் உள்ளேன்.

உழைப்பதற்காக சிலர் அரசியலுக்கு வருகின்றனர். அதற்கு வேறு துறைகள் இருக்கின்றன. மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கி, அவர்களின் வாக்குகள் மூலம் அதிகாரத்தினைப் பெறும் ஒருவர் அந்த மக்களின் சேவகனாக மாறவேண்டுமே தவிர அதற்கு மாறாக நடந்துகொண்டு, மக்கள் நிந்தனைக்கு ஆளாகிவிடக்கூடாது.

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் மு.கா. பெரும்பான்மையாக இருக்கின்ற போதும், கடந்த காலங்களில் மு.காவைச் சேர்ந்தோர் தமது அரசியல் செயற்பாடுகளைச் சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத வன்முறைச் சூழ்நிலை இருந்தது. ஆனால், இன்று அந்த நிலைமையை நாம் இல்லாமலாக்கி இருக்கின்றோம். இறைவனின் உதவியுடனும், மக்களின் ஆதரவுடனும் நாம் இன்னும் பல வெற்றிகளைப் பெறுவோம்.

மேலும், வன்முறைகளை மேற்கொள்ளாமல் ஒரு தேர்தலை எவ்வாறு நடத்துவது என்பதை இந்த உள்ளூராட்சித் தேர்தலில் நாம் வெளிக்காட்ட வேண்டும். அதற்கு இளைஞர்களாகிய உங்களின் ஒத்துழைப்பு எனக்கு மிகவும் அவசியமாகும் - என்றார்.

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
தொல்லை கொடுத்த சிலரே தோள் கொடுக்க முன் வருவர். கொடுக்கல் வாங்கல்கள் சுமூகமாக நடக்கலாம். எந்த வேலையையும் சிறப்பாகச் செய்து பாராட்டுப் பெறுவீர்கள். பெண்கள் வீண் பிடிவாதங்களைத் தவிர்க்க வேண்டும். நன்றி மறந்த ஒருவரை நினைத்து மனவருத்தம் அடைவீர்கள்.

**இடபம்:**
உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு அதிகரிக்கும்.கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம்.

**மிதுனம்:**
குடும்பக் கவலைகள் நீங்கி மகிழ்ச்சி, உற்சாகம் அதிகரிக்கும் நாள். தொடங்கிய ஒரு வேலையை மற்றொரு வேலை காரணமாக இடையில் விட்டு விடலாம். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களைப் பெறும் வாய்ப்புகள் உருவாகும். நண்பர் ஒருவர் கேட்ட உதவியை செய்ய மனம் இல்லாமல் கையை விரிக்கலாம்.

**கடகம்:**
நினைத்ததை எப்படியாவது சாதிக்க வேண்டும் என்ற துடிப்போடு செயற்படும் நாள். செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிப்பதில் நாட்டம் செல்லும். புதிய முதலீடுகள் தொடர்பான ஆலோசனைகளில் ஈடுபடலாம். கடன் மிகுதி ஒன்றைத் திருப்பிக் கொடுப்பீர்கள்.

**சிங்கம்:**
அயலாரின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். மற்றவர்களுக்காக சில வேலைகளைச் செய்யலாம். குடும்ப உறுப்பினர்கள் உங்களைப் புரிந்து கொள்ளாமல் நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். மனைவி உடல் நலன் தொடர்பான வகையில் செலவுகள், சிரமங்களைச் சந்திக்கலாம். சிலரால் மனச்சங்கடங்களுக்கு ஆள்படலாம்.

**கன்னி:**
செல்வாக்கு அதிகரிக்கும் நாள். பழைய நண்பர் ஒருவர் மூலம் புதியவர்களின் நட்பு கிடைக்கும். அரசியல் தொடர்புடையவர்களை நம்பி இறங்கிய காரியங்கள் நல்ல விதமாக முடிவுக்கு வரலாம். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். உங்களுக்கு பிடித்தமான பொருள்களை சிலர் கொடுக்கலாம்.

**துலாம்:**
சோர்வு, சோம்பல் விலகி தெம்பு உற்சாகமாகச் செயற்படுவீர்கள். உறவினர்களுக்காக சில செலவுகளைச் செய்யலாம். வீடு மாற்றம் தொடர்பான சிந்தனைகள் மனதில் உதிக்கும் நாள். தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய பணவரவுகளைப் பெறலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்.

**விருச்சிகம்:**
பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கலாம். எந்தக் காரியத்திலும் தயக்கமில்லாமல் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். உங்களுக்கு வேண்டிய ஒருவரைப் பற்றி மற்றொருவர் முறைப்பாடு சொல்லலாம். தண்டச் செலவுகளுக்கு ஆள்படலாம். வெளியூர்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வரலாம். நட்பு வட்டம் விரிவடையும்.

**தனுசு:**
பணவிரயங்களால் திடீர் பற்றாக்குறையைச் சந்திக்கலாம். பெண்கள் குடும்பப் பெரியவர்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடலாம். கடுமையாகப் பாடுபட்ட ஒரு விடயத்திற்கு பலன் கிடைக்காமல் போகலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் இல்லாமல் ஏமாற்றம் அடையலாம்.

**மகரம்:**
பயணங்கள் மகிழ்ச்சி, சந்தோஷம் தருவதாக அமையலாம். யாருக்கும் பிணை கொடுக்க வேண்டாம். நண்பர்கள் மூலம் முக்கியமான வேலை ஒன்றை முடித்துக் கொள்வீர்கள். சக ஊழியர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மலைபோல வந்த பிரச்சினை ஒன்று பனி போல விலகி விடும். எந்தக் காரியமும் தாமதம் இல்லாமல் சுறுசுறுப்பாக முடியும்.

**கும்பம்:**
பல நாள்களாக வராமல் இருந்த கடன் மிகுதியைக் கேட்டு வாங்குவீர்கள். நீண்ட நாள் நண்பர்கள் சிலரைச் சந்திக்கலாம். எதிலும் நேர்மை, நாணயமாக நடந்து கொள்வீர்கள். இளைய உடன் பிறப்புகள் விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவருக்கு பதில் உதவி செய்ய நேரிடலாம்.

**மீனம்:**
திட்டமிட்ட வேலைகள் இழுபறிக்குப் பின்னர் முடிவுக்கு வரலாம். குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் கலகலப்பு குடிகொள்ளும். வியாபாரிகள் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் சிறு தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். எதிர்பாராமல் முக்கிய நபர் ஒருவரை பாதையில் சந்திக்கலாம்.

# இறுக்கமடையும் பாதுகாப்பு நடைமுறைகள்...

பதற்றத்துடன் சில மணி நேரம் உள்ளே இருந்து விட்டது சுவாசக் காற்று, வெளியே சோதனை செய்கிறார்கள் படைத் தரப்பினர் என்பதால்,

நெருக்குதலுக்குள் மீண்டு வந்த மக்கள் இடைவெளியில்லா காலப் பரப்பில் மீண்டும் நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்ற நிலைமை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. கூனிக்குறுகி அடிமைகளாக என்றைக்கும் இருக்கவேண்டும். கேள்வி கேட்க நாதியற்று ஒரு தமிழ்த் தலைவன் இல்லாமல் வெறுமையாக இருக்கின்ற தமிழ்ச் சமூகம் என்ன பாடுபடுகிறது. இலங்கையில் தம்மை அடிக்கடி அடையாளப்படுத்தும் ஓர் இனமாக தமிழர்கள் இருப்பது வேதனைக்குரியது.

மூன்று தசாப்த காலம் பெரும் துன்பங்களை அனுபவித்து வந்த மக்கள் மீண்டும் அந்தச் சூழலுக்குள் அகப்பட்டுக் கொண்டதாகப் படைத்தரப்பின் நிகழ்வுகள் அமைந்து இருக்கிறது.

பாதுகாப்பு என்ற ஒரு காரணம், எதனை செய்ய முற்படுகிறது. சுதந்திரமான ஒரு நாட்டில் பேச, எழுத உரிமை இருக்கிறது. பேச, எழுத சுதந்திரமில்லா எமது நாட்டில் வாய் மூடி, கண் மூடி, காது மூடி இருக்கும் நிலைமையே ஏற்பட்டிருக்கிறது. கண் தெரியாதவனுக்கு வழிகாட்டலாம், காது கேட்காதவனுக்கு சைகை மூலம் தெரிவிக்கலாம். வாய் பேசத் தெரியாதவனுக்கு சொல்லத் தேவையில்லை.

ஒரு பெரும்போர் ஓய்ந்து மீண்டு வந்த மக்களுக்கு என்னத்தை இந்த அரசு சொல்லப் போகிறது, செய்யப்போகிறது? விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின் போது இராணுவத்தின் பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு முகம் கொடுத்து வந்த யாழ். குடாநாட்டு மக்கள் புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவடைந்த நிலையில் மீண்டும் பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

வீதியில் இடைமறித்து சோதனை செய்வது தொடக்கம், வீடுகளுக்குள் புகுந்து குடும்பப் பதிவினை மேற்கொள்வது வரை படையினரின் செயற்பாடுகள் மக்களின் பாதுகாப்புக் காரணங்களுக்காக நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களின் பாதுகாப்புக் காரணமாக பல தடைவைகள் குடும்பப் பதிவுகளை மேற்கொண்டுள்ள படையினர் மீண்டும் இப்பதிவுகளை மேற்கொள்ளும்முயற்சியைக் கைவிடப்படவில்லை.

போர் நடைபெற்ற காலப்பகுதியில் பல இன்னல்களைச் சந்தித்த மக்கள், மீண்டும் படையினரின் சோதனை நடவடிக்கைகளால் கவலையடைந்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் களவுகள், கொலைகள் ஆயுதக் கும்பலினால் அண்மையில் நடைபெற்று வந்தமை காரணமாக இந்த நடவடிக்கைகளை ஓரங்கட்டவே படையினர் வீதிகளில் ரோந்து நடவடிக்கைகளையும், வாகனங்களில் செல்பவர்களை இடைமறித்து சோதனை செய்து அவர்களின் விவரங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளதாகப் படை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இலங்கையில் தமிழர் பகுதிகளில் இந்தச் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டே இருக்கும்.

இந்த நடவடிக்கைகளை இல்லாமல் செய்ய யாராலும் முடியாது என்பது தெட்டத் தெளிவாகியுள்ளது.

கோப்பாயில் படையினர் குடும்பங்களைப் புகைப்படம் எடுத்து வருகின்றனர். அந்தப் பகுதிக் கிராம சேவகர் ஊடாகச் செல்லும் படையினர் குடும்பப் பதிவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடவடிக்கையில் அப்பகுதி மக்கள் அச்சத்தில் காணப்படுகின்றார்கள். பாதுகாப்புக் காரணங்களுக்காகப் புகைப்படம் எடுப்பதாகப் படையினர் சொல்லலாம். ஆனால், புலிகளுக்கெதிரான போர் நடைபெற்ற காலப்பகுதியிலும் யாழ். குடாவில் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெற்றன. இடம்பெயர்ந்த மக்களின் விவரங்கள் முகாம்களில் பதியப்பட்ட பின்னரே மீள்குடியமர்த்தப்பட்டனர். மீண்டும் இப்பொழுது எதற்காக மறுபதிவுகள் மேற்கொள்ளப்படுகிறன என மக்கள் விவரம் தெரியாமல் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

யாழ். குடாவில் களவு, கொலைகளைக் கட்டுப்படுத்த அரசு பொலிஸாருக்குக் கட்டளை பிறப்பித்துள்ள நிலையில், படையினர்தான் இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். வீதிகளில் மறித்து படையினர் சோதனை செய்வதைப் பார்க்கின்ற போது ஆரம்பக் கட்டத்துக்கே மீண்டும் படையினர் சென்றுள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

குற்றவாளிகளைத் தேடுகின்றோம் என்ற போர்வையில் மீண்டும் குடாநாட்டில் படையினர் குடும்பங்களைப் புகைப்படம் எடுப்பதை உடன் நிறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. அவ்வாறு செய்வதற்குத் தமிழ்மக்கள் ஒன்றும் கிரிமினல்கள் அல்லர் என்றும் காட்டமாகத் தெரிவித்துள்ளது.



..!



யுத்தம் முடிவடைந்துவிட்டது. இனங்களுக் கிடையில் நல்லுறவை ஏற்படுத்தவென கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அமைதியை நீடிப்பதற்கு நடவடிக்கைள் எடுக்கப்படுவதாகவும் அரசு கூறி வரும் நிலையில் யாழ்ப்பாண மக்களை மிக மோசமான சூழலுக்குள் கொண்டு செல்லும் கைங்கரியங்கள் நடைபெறுகிறன. இவ்வாறு படையினர் பதிவு செய்வதைப் பார்க்கின்ற போது ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் குற்றவாளி களாக நோக்கும் தன்மையைக் காட்டுகிறது. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாவில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட கொள்ளை, கொலைகள் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட நபர்கள் கைது செய்யப்பட்டதாகவும் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஷத்துருசிங்க அண்மை யில் தெரிவித்தார். இவ்வாறு கைது செய்யப் பட்டவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி தண்டனை யைப் பெற்றுக்கொடுப்பது பாதுகாப்பை நிலை நிறுத்துபவர்களது கடமையாகும். எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளனர், எத்தனை பேருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளன என்பது வெளிப் படையாகப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத் தப்பட வேண்டும் என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டு மக்களுக்கான முழுமையான பாதுகாப்பினை வழங்குவதாக இருந்ததால் முதலில் குற்றவாளிகளுக்குத் தண்டனையை வழங்க வேண்டும். அப்பொழுதுதான் நாட்டில் குற்றங்களைச் செய்வதற்கு யாரும் முன்வரமாட் டார்கள். இதன் மூலம்தான் மக்களுக்குப் பாதுகாப்பினை வழங்க முடியும். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் பாதிக்கப்பட்ட ஏராளமான மக்கள் தமது பிரச்சினைகளைச் சொல்லி இருக்கிறார்கள்.



இவர்களின் பிரச்சினைகளுக்கு சூத்திரதாரிகளாக இருந்த நபர் களை, சொல்லி இருக்கின்ற ஆதாரங்களின் அடிப்படையில் பொருத்தமான நடவடிக்கைள் எடுக்கப்பட வேண்டும். இப்படி யாகக் குற்றவாளிகளைக் கூண் டில் ஏற்றும் போது குடாநாட்டில் களவு, கொலைகள் எல்லாம் மாயமாக மாறிவிடும் என்பது உண்மை.

ஆனால் அதனைக் கண்டும் காணாமல் விடுவதால் இந்த நாட் டில் மீண்டும் மிகப் பயங்கரமான சூழலினை மக்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் என்றால் அந்த மக்களுக்குப் பாதகமான நடவடிக்கைள் இருக்க முடியாது. சாதகமான நடவடிக்கைகளாக இருக்க வேண்டும்.

படையிரின் பாதுகாப்பு நட வடிக்கைகள் மக்களுக்குப் பாதக மான நடவடிக்கைகளாக அமைந் தால் இந்த நாட்டில் என்றைக்குமே அமைதியான சூழலினைக் காணமுடியாத நிலை ஏற்படும்.

யாழ். குடாநாட்டில் பொதுமக்களிடம் படை யினர் பணம் வசூலித்து குடும்பப் படங்களை எடுப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். கல்வியங்காடு, இருபாலை பகுதிகளைச் சேர்ந்த மக்களைப் படையினர் படம் பிடிக்க வருமாறு அந்தப் பகுதி கிராம அலுவலர் மூலம் உத்தரவிட்டிருந்தார் என்று இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் ஒரு தொகுதியினரைப் படம் எடுக்கும் பணிகள் அன்றைய தினமே மேற் கொள்ளப்பட்டதாகவும், இந்த விடயம் சம்பந்த மாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்ததாகவும் தெரி வித்தார்.

ஆனால் இக்குற்றச்சாட்டுக்கள் உண்மைத் தன்மை அற்றவை என்று இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பொலிஸ் சட்டத்தின் படி நாட்டில் ஒவ்வொரு குடிமகனும் பதிவு செய்து கொள்வது அவசியமாகும். யாழ்ப்பாணத்தில் மாத்திரம் அல்ல கம்பஹா போன்ற இடங்களிலும் இத்தகைய நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் மின்னியல் முறையிலான அடை யாளங் காணல் திட்டங்களும் நடைமுறைப்படுத் தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

**யாழ். குடாநாட்டில் தொடரும் பாதுகாப்புக் கெடுபிடிகளால் மக்கள் பலத்த நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். எதற்காக இவ்வாறன நடைமுறைகள் மீளவும் இடம்பெறுகின்றன என்ற கேள்வி இன்று மக்களிடையே பல்வேறு விதமான கோணங்களில் கேள்விகளை எழுப்பியுள்ளன. போர் முடிவுற்றுள்ள நிலையில் மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறு கின்றமை தமிழ் மக்களை சந்தேகக் கண்ணுடன் நோக்குகின்றார்களா? என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது.**

**–துன்னாலை செல்வம்**

# இளைஞர்களிடம் இல்லாத"மை"



இன்றைய இளைய தலைமுறை யினரிடம் இருக்கிற உன்னதமான ''மை'' திறமை. இல்லாத ''மை'' பொறுமை. காத்திருப்பது என்பதும் ஒரு கலைதான். நம்முடைய நேரம் வரும்வரை பொறுமையாக இருப்பது என்பது அவசியம். அதற்கு நம்மீது நமக்கு ஆளுமை வேண்டும்.

ஆறுமாதம் விளையும் அரிசியை மூன்று மாதங்களில் விளைவித்தது விஞ்ஞானம், ஆறு வருடத்தில் காய்க்கும் தென்னையை மூன்று வருடத்தில் காய்க்க வைத்தது விஞ்ஞானம். இந்தக் குறுகிய காலப் பயிர்களையும் அவசரகால விவசாயப் பயிர்களையும் உண்ணும் இளைய தலைமுறையினர் மிகுந்த அவசரத்தில் இருக்கின்றனர். பரபரப்பு... படபடப்பு... ஆத்திரம்... அவசரம்... இவை எதையுமே சாதிக்கப் போவதில்லை. கொழுத்த மீன் வரும்வரை காத்திருக்கும் வாசகம் இளைய தலைமுறையினருக்குப் புரியவேண்டும்.

பஸ்ஸுக்கோ, ரயிலுக்கோ, சாப்பிடவோ, திருமணத்திற்கோ இவர்கள் பொறுமையாக இருப்பது இல்லை.

எல்லாவற்றுக்கும் அவசரப்பட்டால் முதுமையும் முந்திவரும்; மரணமும் விரைவில் வரும். அவசரப்படாத நிதானம் பல ஆபத்துக்களிலிருந்து உங்களைப் பாதுகாக்கும். படபடக்காமல் பிரச்சினைகளைக் கையாண்டால் பல புதிய பிரச்சினைகள் தவிர்க்கப்படும். இது பழைய தலைமுறை யினரிடமிருந்து படிக்க வேண்டிய கட்டாய பாடம்.

இந்திய விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டமாக இருந்த காலம் அது. இக்காலத்தில் இந்திய விடுதலை வீரர்களையும் தலைவர்களையும் அரசு துல்லியமாக வேவு பார்த்துக் கொண்டிருந்தது. பாலகங்காதர திலகர் அப்போது விடுதலைப் போரின் பெருந்தளபதியாக இருந்தார். ஆறுமாத காலமாக அவர் வீட்டில் சமையல் வேலைபார்த்துக் கொண்டிருந்த சமையல்காரர் தான் வேலையிருந்து விலகப் போவதாக அறிவித்தார். திலகர் ''ஏன்''? என்றார். ''நீங்கள் தரும் சம்பளம் ஆறுரூபாய், அது எனக்குப் போதவில்லை'' என்றார் அவர்.

அதற்குத் திலகர் ''நான் தரும் சம்பளம் ஆறு ரூபாய், ஆனால் என் நடவடிக்கைகளை வேவு பார்ப்பதற்கு பிரிட்டிஷ்காரர் தரும் சம்பளம் இருபத்திநான்கு ரூபாய். ஆக முப்பது ரூபாய் சம்பளம் பெறுகிறாய். அப்படியிருந்துமா உனக்கு சம்பளம் போத வில்லை'' என்று சொல்லிவிட்டு சிரித்தார் திலகர். உண்மையில் அந்த சமையல்காரர் பிரிடிஷ் அரசு அனுப்பிய ஒற்றன் என்பது ஆறுமாதத்திற்கு முன்பே திலகருக்குத் தெரியும். ஆனால் தெரிந்ததைத் திலகர் காட்டிக் கொள்ளவில்லை. பிரிட்டிஷ் அரசு அந்த ஒற்றரை நம்பி ஏமாந்து போனது. அவர் ஒற்றர் என்பதால் திலகர் எச்சரிக்கையாக இருந்தார். இந்த நிதானம் பழைய தலைமுறையினர் பாராட்டத்தக்க பண்பு. இது இன்றைக்கு இருக்கிறதா?

இதற்குப் பஞ்சதந்திரக் கதைகளிலே அருமையான கதையொன்று,

ஒரு குட்டிக்குரங்கு படாதபாடுபட்டு ஒரு தோட்டம் செய்தது. செடிகள் வளர்ந்து மரமாகி பூத்துக் குலுங்கி காய்கள் கொட்டும்; ஆசை ஆசையாய் அள்ளித் தின்னலாம் என்று நினைத்தது. என்ன கொடுமை! விதைகள் எதுவுமே முளைக்கவில்லை. ஆசை நிராசையானது.

அது ஒரு நாள் வயதான மூத்த குரங்கிடம் போய் ஆலோசனை கேட்டது, விதைகள் எதுவுமே முளைக்கவில்லை என்று ஒப்பாரி வைத்தது. சமாதானப்படுத்திய மூத்தகுரங்கு ''விதை போட்டால் நீர் ஊற்றவேண்டும். நீ தண்ணீர் ஊற்றியிருக்க மாட்டாய்'' என்றது. அதற்குக் குட்டிக்குரங்கு ''நான் ஒரு விதைக்கு எட்டு வாளி நீர் தினமும் காலையும் மாலையும் ஊற்றுவேன் என்று குற்றச்சாட்டை மறுத்தது.

''அடடா...எட்டு வாளி நீர் விட்டால் விதை என்னவாகும். அழுகிப் போயிருக்கும்... அதுதான் முளைக்கவில்லை'' என்று தீர்ப்பு வழங்கியது மூத்த குரங்கு.


குட்டிக்குரங்கோ... ''ஒரு விதை கூட அழுகவில்லை'' என்று உறுதியாக உறுமியது. ''அதெப்படி உனக்குத் தெரியும்'' என்றது மூத்த குரங்கு. ''நான்தான் விதை முளைச்சிருக்கா என்று தினமும் எடுத்துப் பார்க்கிறேன்'' என்றது குட்டிக்குரங்கு.

எப்படி இருக்கிறது கதை? தினம் தினம் விதையை எடுத்துப் பார்த்தால் விதை எப்படி முளைக்கும்? அது அதற்கு என்று ஒருகாலம் இருக்கிறது. அந்தக் காலம் வரும் வரை காத்திருக்க வேண்டியது அவரவர் கடமை. அதற்குத் தேவை பொறுமை.

''பெறுத்தது போதும் பொங்கியெழு'' என்று கூறுகின்ற குட்டித்தலைவர்களின் வெட்டிப் பேச்சை நம்பி நாம் பொங்கிக் கொண்டே இருந்தால் வளர முடியுமா? திறமையோடு கூட்டுப் பொறுமையும் கலந்தால் இளைய தலைமுறையினருக்கு வெற்றி நிச்சயம்.

**சுகி.சிவம்.**

# உங்கள் புகைப்படத்தை மிகவும் அழகுபடுத்த வேண்டுமா?



தங்களது புகைப்படங்கள் மற்றவர்களை கவருவதாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் அனைவருக்கும் இருக்கும்.

ஆனால் ஒரு சில படங்கள் அழகு குறைவாக இருக்கும். அப்படிப்பட்ட படங்களை அழகுபடுத்த நாம் போட்டோசொப் போன்ற எதாவது ஒரு மென்பொருளை நாட வேண்டும். ஒரு சிலருக்கு போட்டோசொப் மென்பொருளில் எவ்வாறு பணி புரிவது என்பது தெரியாது.

அப்படிப்பட்டவர்களுக்கெனவே உள்ளதுதான் போட்டோசைன் என்ற மென்பொருள் ஆகும். இந்த மென்பொருள் பயன்படுத்துவதற்கு மிகவும் எளிமையானதாக இருக்கும். நம்முடைய நண்பர்களை செல்போன் மூலமாகப் படம் எடுத்து வைத்திருப்போம் பின்பகுதி (Background) மோசமான நிலையில் இருக்கும். அப்படிப்பட்ட புகைப்படங்களை இந்த மென்பொருளின் மூலமாக மெருகேற்ற முடியும்.

இந்த மென்பொருளை இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்ய வேண்டும். இந்த மென்பொருளானது இரண்டு விதமாக உள்ளது. ஒன்று மினி வெர்சனாகவும் மற்றொன்று முழுவதுமாகவும் உள்ளது. மினி வெர்சன் மட்டுமே இலவசமாகப் பயன்படுத்த முடியும்.

முழு போட்டோசைன் மென்பொருளை பணம் செலுத்தியே பெற வேண்டும். மினிவெர்சனில் வெறும் 237 டெம்ப்ளேட்கள் மட்டுமே உள்ளன. ஆனால் முழு போட்டோசைன் மென்பொருளில் 700 க்கும் மேற்பட்ட டெம்ப்ளேட்கள் உள்ளன.

இந்த மென்பொருளானது போட்டோக்களை அழகுபடுத்தப் பயன்படுகிறது. ஒன்றுக்கும் மேற்பட்ட புகைப்படங்களை ஒன்றிணைக்கவும் இந்த புகைப்படம் உதவுகிறது. நண்பர்களின் குழு புகைப் படத்தையும் இந்த மென்பொருள் மூலமாக உருவாக்க முடியும்.

# அமெரிக்க இராணுவத்தினரின் புதிய லேசர் தொழில்நுட்பம்

அமெரிக்க இராணுவத்தினரின் புதிய லேசர் தொழில்நுட்பத்தால் விண்ணில் பறந்து கொண்டிருக்கும் விமானத்தைத் தாக்க வரும் ஏவுகணையை விண்ணிலேயே தாக்கியழிக்கலாம்.

அந்த விமானத்தில் பணிபுரியும் பொறியியலாளரால், தாக்க வரும் ஏவுகணையின் தரவுகள் கணிக்கப்பட்டு விமானத்தில் பொருத்தப்பட்டிருக்கும் லேசர் கருவியினால் அலைகள் பாய்ச்சப்பட்டு அதைத் தகர்க்கலாம். இது தற்போதைய சர்வதேச நெருக்கடிக்குத் தீர்வாக அமையலாமென்றும் கூறப்படுகிறது.

# பறக்கும் வீடியோ கமரா



தொழில்நுட்பத்தின் வளர்ச்சி நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு செல்கின்ற இந்தக் காலகட்டத்தில், புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சீனாவைச் சேர்ந்த நபர் பறக்கும் வீடியோ கமரா ஒன்றை வடிவமைத்துள்ளார்.

இதன்மூலம் தனது நண்பனின் திருமண விழாவைப் படம் பிடித்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார். அந்தக் கமராவுக்கு என்று 'UFO' பெயர் சூட்டியுள்ளனர்.

தரையிறங்குவதற்குப் பொருத்தமாக நான்கு கால்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் எடை ஒரு கிலோ கிராம் ஆகும். இது பற்றி குறித்த நபர் தெரிவிக்கையில், ''இந்த கமரா மூலம் எந்தக்கோணத்தில் வைத்தும் வீடியோப் படம் பிடிக்க முடியும், எங்கும் இயக்கிச்செல்ல முடியும்.

ஆனால் இது wireless மூலம் இயங்குவதால் எப்போதும் கையில் ரிமோல்ட் கொன்ரோல் இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். இது தொழில்நுட்பத்தில் வியத்தகு ஒரு விடயம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சனியின் நிலாவில் ஐஸ்; நாசா கண்டுபிடிப்பு

சனி கிரகத்தின் சந்திரனான டைட்டனில் தண்ணீர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் தெரிகின்றன. அங்கு தண்ணீர் ஐஸ்கட்டியாக இருக்க வாய்ப்பு இருக்கிறது என்று நாசா விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

சூரிய குடும்பத்தில் வியாழனுக்கு அடுத்த பெரிய கோள் சனி. எடையில் பூமி போல 95 மடங்கும் அளவில் பூமி போல 760 மடங்கும் பெரியது. நமக்கு சனி கிரகத்துக்கு 62 சந்திரன்கள்.

சனிக் கிரகத்தின் தன்மை பற்றியும் அதன் துணைக் கோள்கள் (சந்திரன்) பற்றியும் ஆராய்ச்சி செய்வதற்காக காசினி ஹைகன்ஸ் விண்கலத்தை அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனம் (நாசா) கடந்த 1997ம் ஆண்டு விண்ணுக்கு அனுப்பியது.

7 ஆண்டு பயணத்துக்கு பிறகு சனி ஏரியாவை இது 2004ல் சென்றடைந்தது. பின்னர் அதில் இருந்து தனியே பிரிந்த ஹைகன்ஸ் விண்கலம், சனியின் மிகப்பெரிய நிலாவான டைட்டனில் 2005ல் தரையிறங்கியது.

காசினியும் ஹைகன்'ம் தங்கள் ஆராய்ச்சி வேலையைச் சிறப்பாகச் செய்து வருவதால் அவற்றின் பதவிக்காலம் தொடர்ந்து நீடிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சிக்கு காசினி ஈக்வினாக்ஸ் மிஷன் என்று பெயர் மட்டும் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

இரு விண்கலங்களும் 2017 வரை தொடர்ச்சியாக இயங்கும் என்று அறிவித்திருக்கிறது நாசா. இந்நிலையில், டைட்டனை சுற்றி வெண் மேகக் கூட்டங்கள் இருப்பது காசினி விண்கலத்தின் அகச்சிவப்பு ஸ்பெக்ரோமீட்டர் மூலம் தற்போது தெரியவந்துள்ளது.

இதுபற்றி நாசா விஞ்ஞானி ராபர்ட் சாமுவேல்சன் கூறியதாவது:

டைட்டனின் வளிமண்டலத்தில் மீத்தேன், ஈத்தேன் வாயுக்கள் அதிகம் இருக்கின்றன. அவைதான் வெண் மேகங்களை உருவாக்குவதாக ஏற்கனவே தெரியவந்தது. இவை பூமிக்கு மேல் நீராவியால் உருவாகும் மேகங்கள் போலவே இருக்கின்றன.

அந்த மேகம் ஆவியானதும் அதில் இருந்து ஹைட்ரோகார்பன்களும் இதர ஆர்கானிக் தனிமங்களும் தூசி போலத் தொடர்ச்சியாக டைட்டனில் படிகின்றன என்றும் தெரிகிறது.

இவ்வாறு வளிமண்டலத்தில் இருக்கும் மேகம் மற்றும் திவலைகளின் அளவு பற்றித் தெரிந்தால் அவை எதனால் ஆக்கப்பட்டது? டைட்டனில் தண்ணீர் இருப்பதற்கான சாத்தியக்கூறு இருக்கிறதா என்று கண்டுபிடித்துவிடலாம்.

ஒருவேளை, தண்ணீர் இருக்கும் பட்சத்தில், டைட்டனில் அது ஐஸ் பாறையாகத்தான் இருக்கும். இவ்வாறு ராபர்ட் கூறியுள்ளார்.

# இருமல் இருப்பதை தொலைபேசியின் மூலம் கண்டறியலாம்; ஆய்வாளர்களின் சாதனை



சளி அல்லது வரட்சி ஏற்படுவதைத் தொலைபேசி மூலம் கண்டறியும் மென்பொருள் கருவியை ஜேர்மனியைச் சேர்ந்த பிரான்கோபர் இன்ஸ்டிடியூட் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்தப் புதிய கருவி மூலம் ஒரு நபருக்கு ஏற்பட்டுள்ள இருமல் குறித்த விவரங்களை அறியலாம் எனக் கூறப்பட்டாலும், மருத்துவ சமூகத்தினர் இதன் சேவை குறித்து ஐயம் எழுப்பியுள்ளனர்.

ஜேர்மனியின் ஒல்டன்பர்க் நகரில் உள்ள ஆய்வாளர்கள் இக்கருவியைக் கண்டுபிடித்துள்ளனர். ஜேர்மனியில் முதல் தானியங்கி இருமல் கண்டறியும் சேவையாக இந்தப் புதுக் கண்டுபிடிப்பு உள்ளது. ஆய்வாளர் கோட் அவரது குழுவினரும் கடந்த 2 ஆண்டுகளாக மேற்கொண்ட ஆய்வைத் தொடர்ந்து இந்தப் புதிய மென்பொருள் கருவி உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்காக மக்கள் கூட்டம் நிறைந்த ஹம்பர்க் மற்றும் ஒல்டன்பர்க் வீதிகளில் சென்றவர்களின் மாதிரிகளைப் பதிவு செய்திருந்தார். இந்த புதிய மென்பொருள் கருவி மூலம் 80 சதவீத முடிவுகள் சரியானவையாக உள்ளன என்று கோட்ஸ் தெரிவித்தார். தினமும் 200 அழைப்புகள் வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பூமியைத் தாக்க காத்திருக்கும் சிறிய கோள்

''அப்போஃபிஸ்'' என்ற சிறிய கோளானது பூமியைத் தாக்க இருப்பதாக ரஷ்ய விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

இக் கோளானது எதிர்வரும் 2036 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி பூமியுடன் மோதலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர். சென் பீட்டர்ஸ் பேர்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளே இதனைக் கண்டறிந்துள்ளனர்.

இக் கோளானது 2029 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி சுமார் 37,000 முதல் 38,000 கிலோ மீற்றர் வேகத்தில் பூமியை நெருங்கும் எனவும், 2036 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி பூமியை மோதும் எனவும் பேராசிரியர் லியொனிட் சொலோகொவ் தெரிவித்தார்.

சிலவேளை மத்திய கிழக்கு, தென் அமெரிக்கா அல்லது ஆபிரிக்காவின் மேற்கு கரையோரப்பகுதியில் மோதலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இது பூமியோடு மோதினால் இதன் சக்தி வெளிப்பாடு சுமார் 100 அணுகுண்டுகளுக்குச் சமம் எனவும் நாசா தெரிவித்துள்ளது.

எனினும் இது 2036 ஆம் ஆண்டு மோதுவதற்கான வாய்ப்பு 45,000 இற்கு 1 என்ற நிகழ்தகவு எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனாலும் நாம் எதற்கும் தயாராக இருக்க வேண்டும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் அக்கோள் பூமியுடன் மோதுவதனைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

# இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயம்

(சென்றவாரத்தொடர்ச்சி)

இலங்கையில் காத்தல் கடவுளான விஷ்ணுவும் அழித்தல் கடவுளான சிவனும் ஒரே இடத்தில் இருந்து அருள்பாலிக்கும் அற்புதத் திருத்தலங்களில் ஒன்றாக இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயம் விளங்குகின்றது.

பளையைச் சேர்ந்த ஒருவருக்கு குழந்தைப் பாக்கியம் இல்லை. எம்பெருமானின் அடியாரும் சோதிடருமான ஒருவர் கூறிய ஆலோசனைப் பிரகாரம் அப்பெரியவர் ஆலயச் சுற்றாடலில் நாகதம்பிரான் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார். அதன்பயனாக அந்தப் பெரியவருக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைத்தது. அவரின் பிள்ளைகள் தற்போது வெளிநாடுகளில் வசித்து வருகின்றனர்.

காத்தல் கடவுளாம் கண்ணபிரான், சத்தியபாமா ருக்மணி தேவியுடன் வீற்றிருந்து அருளாட்சி செய்கின்றமையும் தனது இரு கரங்களிலும் சங்கு சக்கரத்தினை ஏந்தியவண்ணம் அருளாட்சி புரிகின்றமையும் குறிப்பிடத்தக்கன. இதற்கு எடுத்துக்காட்டாக ஆலய உற்சவ காலத்தில் தீர்த்தத் திருவிழாவுக்காக வடமராட்சி கிழக்கு ஆழியவளை ஊரெல்லை இந்து மகா சமுத்திரவாயிலுக்கு எழுந்தருளும் போது சக்கர ஆயுதமே கொண்டு செல்வர். எம்பெருமான் தன் தேவியருடன் மண்டபத்தில் ஆழியை நோக்கி வடக்குத் திசையாக வீற்றிருக்க சக்கராயுதம் சிவாச்சாரியார்களாலும் அடியார்களாலும் எடுத்துச் செல்லப்படும். திருவுளச் சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் ஆலய வாகனம் அலங்கரிக்கப்பட்டு அதன் மீது சக்கர ஆயுதம் எடுத்துச் செல்லப்பட்டுத் தீர்த்தம் நடு ஆழியிலே அற்புதமாக நடைபெறும்.

தீர்த்தமாடிய பின்னர் சக்கர ஆயுதம் தீர்த்த நிறைவுக் களிப்பில் ஆலயத்திற்கு எடுத்து வரப்பட்டு எம்பெருமானின் கரங்களில் வைத்து அபிஷேகம் செய்யப்படும். அபிஷேக ஆராதனைகள் அந்தண சிவாச்சாரியர்களால் நடத்தப்படும் போது அடியார்கள் தமது இஷ்ட நேர்த்திகளை நிறைவேற்றி அரோகரா! கண்ணா, கோவிந்தா, கோபாலா, நமோ நமோ நாராயணா என எம்பெருமானைத் துதிப்பார்கள். அபிஷேக ஆராதனைகள் முடிவுற்றதும் சுமார் பத்துப் பரப்பு மைதானத்தில் அமைக்கப்பட்ட விசேட கொட்டகைகளில் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். இதற்கென ஆழி தீர்த்தோற்சவக் குழுவென தனியான நிர்வாகக் குழு ஆலய அறங்காவலர் சபையினால் வருடாவருடம் அமைக்கப்படுவது வழக்கமாகும்.

தீர்த்தோற்சவத்திற்கு சக்கர ஆயுதம் சென்று திரும்பி ஆலய வாசலை அடைய எம்பெருமானின் அழகுக் கோலத்தைத் தரிசிக்க பௌர்ணமி நிலவும் தனது ஒளியினைப் பரப்பி ஆகாயத்தில் வந்து நிற்கும் காட்சி அற்புதமாக இருக்கும்.

ஆலய ஆழித் தீர்த்தம் நடைபெறும் தினத்தில் ஆழிக் கடலில் தொழில் புரியும் அடியார்களில் ஒருவருக்கு அல்லது இருவருக்குத் தன் ஆயுதங்களில் ஒன்றான சங்கினைக் கிடைக்கச் செய்து அற்புதம் நிகழ்த்துவார். இந்த அற்புதம் காலங்காலமாக நடைபெற்று வருவதாகவும் ஆழியில் சங்கினை எடுப்போர் அதனைப் புனிதமாக எடுத்து வந்து




ஆலயத்தில் கையளிப்பதாகவும் கூறப்படுகிறது. இவ் ஆலயப் பூஜைகளில் தொன்று தொட்டு சங்கு ஊதி ஒலி எழுப்பும் தொண்டு அடியார்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வருடாவருடம் ஆலயத்திற்குப் பெருமளவு சங்குகள் அடியார்களால் வழங்கப்பட்டு வருகிறன.

இந்த ஆலயம் சிவனையும் சக்தியையுமே கொண்ட விஷ்ணு ஆலயம் என்பதால் பூஜைகள் நிறைவுற்றதும் அர்ச்சகரால் விபூதி வழங்குவதற்கு ஒரு வகைச் சங்கினையே பயன்படுத்தும் வழமையும் தொன்று தொட்டு வருகிறது. இதற்குரிய சங்கும் வருடாவருடம் தீர்த்தோற்சவத்தின் பின் ஆழியிலே எம்பெருமானால் அருளப்பட்டதென எடுத்து வந்து ஆலயத்திற்கு வழங்குவார்கள். எம்பெருமானின் ஆல யத்துக்கு நேரே வடக்குத் திசை யில் ஒன்றரைக் கிலோ மீற்றர் தொலைவில் முகாவில் திரியாய்ப் பகுதியில் வீற்றிருக்கும் அன்னை திரியாய்அம்பாள் ஏரிக்கரையில் இருந்து அருளாட்சி புரிகின்றாள்.

(தொடரும்)

# இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்



(சென்றவாரத்தொடர்ச்சி)

வரணிப் பிரதேசத்தில் இடைக்குறிச்சிக் கிராமத்தின் மத்தியில் இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் அமைந்துள்ளது. இப்பாடசாலை வளர்ச்சிக்குப் பல்வேறுபட்டோர் உதவியுள்ளனர்.

இவர்களுள் முதன்மையானவர் இப்பாடசாலைக்கு அண்மையில் அமைந்திருக்கும் சேவலப்பிட்டி முருகன் ஆலய பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ இ.குகதாசசர்மா ஆவர். அவர் தனது வாழ்த்துச் செய்தியில் ''இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையின் சமய விழாக்களில் பிரதமகுருவாக இருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தாலும் நானும் எனது பிள்ளைகளும் இப்பாடசாலையில் கல்வி கற்கும் பாக்கியத்தைப் பெற்றதுடன், எனது பிள்ளைகள் மூவரும் உயர்நிலைக்குக் கொண்டு வர உதவியது இந்தப் பாடசாலைதான் எனப் பெருமையுடன் கூறியிருந்தமை பாடசாலையின் நற்பெயருக்குச் சான்று பகர்கின்றது. மேலும் இந்தப் பாடசாலையில் கல்விகற்று இன்று உயர் பதவியில் இருக்கும் யாழ். பல்கலைக்கழகத்தில் பொருளியல்துறை விரிவுரையாளராக விளங்கும் கரம்பைக் குறிச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட சி.உதயகுமார் தனது வாழ்த்துச் செய்தியில் ''சிலையில் எழுத்தாக எனது இதயத்தில் அறிவைப் பொறித்துவிட்ட என் அறிவுத் தாய்க்கு 75 வயதாகிவிட்டதா? ஈழம் உள்ள வரை என்தாய் இளமையோடு இருப்பாள். வருமிடர் யாவும் துடைத்து நிமிர்ந்து நிற்பாள், பூவசரசடி விநாயகர், சேவலப்பிட்டி முருகன் எனச் சிவ மைந்தர் இருவரும் அருகிருக்க என் அன்னைக்கு என்ன குறை?'' என வாழ்த்தி இருந்தார். மேலும் அம்மலருக்கு அப்போதைய தென்மராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளர் வ.செல்வராசா, முன்னாள் வரணி மகாவித்தியாலய அதிபர் சி. துரைராசா, யாழ். பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் வி.பரந்தாமன், யாழ். பல்கலைக்கழக ஆங்கிலமொழிப் பிரிவைச் சேர்ந்த எஸ். கதிர்காமநாதன், பாடசாலை அதிபர் சு.தர்மலிங்கம், அப்போதையை உபஅதிபர் சி.ஸ்ரீபால கிருஸ்ணபிள்ளை எனப் பலரும் இப்பவள விழா மலருக்கு ஆசியுரை வழங்கியிருந்தனர். இந்தப் பாடசாலையில் ஆசிரியர்களாகப் பதவி வகித்தவர்களின் விவரம் வருமாறு:

ஆரம்பத்தில் இப்பாடசாலை அதிபராக இருந்தவர் ஐ.முருகேசு ஆவார். பின்பு வரணி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட மு.வேலுப்பிள்ளை அதி பராகப் பதவி ஏற்று 20 ஆண்டுகள் பதவி யில் இருந்தார். வரணி வடக்கைச் சேர்ந்த சி.தங்கராசா, க.பொன்னுத்துரை, வ.நடராசா, வே.வீரகத்தி, வே.இராசரத்தினம், கு.சிவானந்தம், ந.நவரட்ணராசா, திருமதி த.பரமானந்தர், திருமதி ம.குமாரகுலசிங்கம் என்போர் அதிபர்களாகச் சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2002 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை தொடர்ந்து சு.தர்மலிங்கம் அதிபராக இருந்து பாடசாலை வளர்ச்சிக்கு அளப்பரிய சேவை செய்து வருகின்றார். 2005 ஆம் ஆண்டு அதிபர் சு. தர்மலிங்கத்தின் முயற்சியினால் 20' X 20' அளவுகொண்ட அதிபர் அலுவலகம் அமைக்கப்பட்டது. இப்பாடசாலையில் தற்சமயம் 117 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். உதவி ஆசிரியர்கள் 13 பேர் சேவையாற்றுகின்றனர். ஆசிரியர் சமூகத்தில் அதிபராக சு.தர்மலிங்கம் உப அதிபர், கி.தங்கேஸ்வரன், பொ.யோகராசா, த.மஞ்சூரன், திருமதி இ.நடராசா, திருமதி இ. கந்தசாமி, திருமதி ம.திருநந்தகுமார், செல்வி க.சரவணமுத்து, திருமதி த.இராசேந்திரன், திருமதி இ.கிருஸ்ணமூர்த்தி, திருமதி த.யோகநாதன், திருமதி ச.இராசயோகானந்தம், செல்வி சி.நவரட்ணராசா இங்கு கல்வி கற்பித்தல் செயற்பாடுகளில் சேவையாற்றுகின்றனர்.

விசேட பாடத்துறையில் ஆசிரிய நூலகராகத் திருமதி ம.திருநந்தகுமார் கடமைபுரிகின்றமை குறிப்பிடத்தக்கது. பாடசாலையில் ஒழுக்காற்றுக்குழு ஒன்றும் செயற்படுகின்றது. அதிபர் அ.தர்மலிங்கம் தலைமையில் உப அதிபர் கி.தங்கேஸ்வரன் திருமதி இ.கந்தசாமி, திருமதி இராசயோகானந்தம், திருமதி ம.திருநந்தகுமார் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

மாணவத் தலைவர்கள் விவரம் வருமாறு, சிரேஸ்ட மாணவத் தலைவர் செல்வன் கி.வாகீசன், சிரேஸ்ட மாணவத் தலைவி செல்வி ஞா.கார்த்திகா, மாணவத்தலைவர்கள் செல்வன் ஞா.பிரதாப், செல்வி ஞா.நிதர்சி, செல்வி தி.கவிப்பிரியா, செல்வி ஞா.சௌந்தர்யா, செல்வன் த.சதூர்சனன், செல்வன் பி.கிருஷாந், செல்வி நி.சனாதனி ஆகியோராவர். இங்கு வகுப்புக்கள் 11 ஆம் ஆண்டுவரை உள்ளன. இந்தப் பாடசாலைக்கு அதிபர் சி.தர்மலிங்கம் அவர்களின் முயற்சியினால் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் 75 ஆயிரம் ரூபாவுக்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள் பெறப்பட்டுள்ளன. மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மூலம் ரூபா 1 லட்சம் பெறப்பட்டு பாடசாலை மண்டபத்துக்குக் கூரை அமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலையில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவு ஒன்றும் செயற்படுகின்றது. கடந்த காலத்தில் செல்வச்சந்நிதி ஆலய மகோற்சவ காலத்தில் இப்பிரிவு சேவையாற்றியுள்ளது. இந்தப் பிரிவின் பொறுப்பாசிரியராக த.மஞ்சூரன் செயற்படுகின்றார். மேலும் இப்பாடசாலைக்குக் கடந்த காலத்தில் மாணவர்களின் கணினிச் செயற்பாடுகளின் நலன்கருதி இடைக்குறிச்சியைச் சேர்ந்த செல்வி ந.கிருபா கணினி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இப்பாடசாலைக்கு நிரந்தர விளையாட்டு மைதானம் இல்லை. வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் சேவலப்பிட்டி முருகன் ஆலய வீதியிலேயே நடத்தப்படுகின்றன. மேலதிக காணி வசதியுள்ள கொடையாளர்களிடம் இருந்து பொருத்தமான காணியொன்றை விளையாட்டு மைதானத்துக்கு வழங்கக் கொடை வள்ளல்களின் உதவியை

**அருவரன்**

பாடசாலைச் சமூகம் எதிர்பார்க்கிறது. ஆங்கிலம்,புவியியல், வரலாறு ஆகிய பாடங்களுக்கு ஆசிரியவளம் பற்றாக்குறையாக உள்ளதாகக் கூறப்படுகின்றது. வலயக்கல்வி அலுவலகம் இது சார்பில் உதவிட வேண்டும் எனக் கல்விச் சமூகம் எதிர்பார்க்கின்றது.

இந்தப் பாடசாலை வளர்ச்சிக்கு முன்னாள் அதிபர் சி.துரைராசா பல வழிகளிலும் பங்களிப்பு வழங்குவதாகப் பாடசாலை அதிபர் தெரிவிக்கின்றார். பாடசாலை வளாகத்தில் அவரின் முயற்சியினால் சர்வோதயாவின் அனுசரணையுடன் பாலர் பாடசாலை ஒன்றை நிறுவிப் பாலர் கல்விக்கு உதவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்படியாகப் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளில், கல்வி வளர்ச்சியில் முன்னின்று அதிபர் செயற்படுவது சிறப்பு அம்சமாகும். (முற்றும்)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## திருமதி
## சந்திரா சிவகுருநாதன்

(ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் - இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களம்- கொழும்பு, கச்சேரி- மன்னார், யாழ்ப்பாணம், பிரதேச செயலகம் - சாவகச்சேரி, யாழ்ப்பாணம்)

மண்ணில் மலராக:
21.12.1948

மனங்களில் நினைவாக:
19.01.2011



வாசத்தை மறைப்பதுண்டோ பூக்கள்- உம்
பாசத்தை மறைப்பதுண்டோ மக்கள்
நாசம் செய்தானோ காலன்- தாயே
நேசம் இழந்து தவிக்கின்றோமே....
தேசம் கடந்தென்றால் கண்டிருப்போம் ஓர் நாள்...!
யாசித்திருக்கின்றோம் உம் ஆத்ம சாந்திக்காய்...!!!

அனைவருக்கும் உற்ற உறவினளாக நண்பியாக நல்ல சகோதரியாக எமக்குத் தாயாக அன்பு மனைவியாக நல்ல வழிகாட்டியாக நாம் கண்கண்ட தெய்வமாக மேலாக எமக்கு எல்லாமாக விளங்கி எம்முடன் வாழ்ந்து இன்று தெய்வமாகிவிட்ட எம் அன்னையின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (18.02.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப்பெறாதவர்கள் இவ்வழைப்பினை தயைகூர்ந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

'குருஸ்தான்',
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(576087)

# இருளின் கதவுகளைத் திறந்தவன் 29



அமெரிக்க இராணுவ இரகசியங்களை அனுமதியின்றி வெளியிட்டு, நாட்டின் இறையாண்மைக்குக் குந்தகம் விளைவித்த குற்றச்சாட்டின் பெயரில் பிராட்லே ஒரு அதிகாலைப் பொழுதில் கைதுசெய்யப்பட்டார். எனினும் உறவாடுவதில் மிகவும் கெட்டித்தனம் மிக்கவராகக் கருதப்படும் பிராட்லே, கண்ணுக்குத் தெரியாத நண்பன் ஒருவனை நம்பி, தன் வாழ்வுக்கே உலைவைக்கக்கூடிய இரகசியத்தை ஏன் சொன்னார் என்பது மட்டும் எவருக்குமே இதுவரை புரியாத புதிராகவே இருக்கின்றது. ஏதோ ஒரு புளுகத்தில் பிராட்லே கொட்டிவிட்ட இரகசியங்களால் அவரது வாழ்வே நரகத்துக்குள் தள்ளப்பட்டுவிட்டது.

யூலியனுக்கு இதுவரையும் இரகசியங்களை நீதானே வழங்கினாய்? அவனுக்கு வேறென்ன இரகசியங்களைக் கொடுத்திருக்கிறாய்? யூலியனின் வற்புறுத்தலால்தானே அவனுக்கு இரகசியங்களை விற்றாய்? என்பன போன்ற கடுமையான- யூலியனையும், பிராட்லேயையும் மாட்டிவிடக் கூடிய- கேள்விக் கொக்கி கள் பிராட்லேயிடம் இடைவிடாது வீசப்பட்டன.

ஆனால் ஒருமுறை தவறிழைத்திருந்த பிராட்லே மறுபடியும் தவறிழைக்கும் முட்டாளல்லவே. தான் சிக்குப் பட்டாலும் பரவாயில்லை. யூலியனையா வது காப்பாற்ற அவன் முடிவெடுத்தான். எனக் கும் யூலியனுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. விக்கி லீக்ஸ் இணையத்தின் நிறுவுநர் என்பது மட்டுமே எனக்குத் தெரியும். அதைவிட வேறெந்தத் தனிப்பட்ட தொடர்புகளும் கிடை யாது. அத்தோடு நான் எனக்கு எதேச்சை யாகக் கிடைத்த சில தகவல்களையே விக்கிலீக்ஸுக்கு அனுப்பி வைத்தேன். எந்தவொரு இரகசியத்தையும் நான் திட்டமிட்டுத் திருடவில்லை. யூலி யனின் நிர்ப்பந்தத்தினால் நான் இரகசியங்களைத் திருடவில்லை.

**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

இதையே கிளிப்பிள்ளைபோல பிராட்லே திருப்பத் திருப்பச் சொல்லிக் கொண்டிருந்தான். விசாரித்தவர்களுக்கு நாக்குத் தொங்கியதுதான் மிச்சம்.

பிராட்லேயிடமிருந்து வேறெந்த இரகசியத்தையும் பிடுங்க முடியவில்லை.

சவூதியில் இருந்த பிராட்லே விசேட விமானம் மூலம் அமெரிக்காவின் வெர்ஜீனியாவில் உள்ள தனிமைச் சிறைக்குள் தள்ளப்பட்டான்.

எல்லாத் தண்டனைகளையும் விடவும் தனிமைச் சிறை என்பது கொடுமையான விடயம்.

நாள் ஒன்றுக்கு ஒரு மணித்தியாலம் மட்டுமே உணவுக்காகவும் மற்ற விஷயங்களுக்காவும் பிராட்லே மென்னிங் சிறை அதிகாரிகளைப் பார்க்க முடியும். மற்ற 23 மணித்தியாலங்களும் மிகக்குறுகலான அறையில் தனிமையில் கழிக்க வேண்டும்.

அவனுக்குப் படுப்பதற்குப் படுக்கையோ, தலையணையோ எதுவும் வழங்கப்படவில்லை. சிறையில் உடற்பயிற்சிகள் எதுவும் செய்யக் கூடாது என்றும் கட்டளை. வெளியாள்கள் யாரையும் சந்திக்க முடியாத, வெளியுலக நிகழ்வுகள் எதையும் அறிந்துகொள்ள முடியாத (தொலைக் காட்சி, பத்திரிகைகள் எதுவுமே கிடையாது) மிகக் கொடு மையான இந்தச் சூழலின் காரணமாக அவனது மனநிலை பாதிக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக் கின்றன.

ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் அமெரிக்காவில் கிடைக்கக் கூடிய பேச்சு, சுதந்திர உரிமைகளை இராணுவ அதிகாரி ஒருவர் கோர முடி யாது என்பதால் இனி அவரது வாழ்நாள் முழுவதும் சிறையில் கழிவதற்கான வாய்ப்புக்களே அதிகம்.

தன்னுடைய ஆயுள் முழுதும் வெளியுலகினைப் பற்றி எதுவுமே தெரியாமல், எவ்வித பொழுது போக்குமின்றி, பேச்சுத்துணைக்குக் கூட சக மனிதர்கள் இன்றி அடைபட்டுக் கிடக்கும் நரகம் பிராட்லேக்கு விதிக்கப்பட்டுள்ளது.

ஒளண்யன்

பிராட்லேயைக் கைது செய்தது அமெரிக்காவைப் பொறுத்தவரை விக்கிலீக்ஸுக்கு எதிரான அறிவிக்கப்படாத யுத்தத்தில் கிடைத்த மகத்தான வெற்றியாக இருந்தாலும் கூட, பிராட்லேயை வைத்து யூலியனைச் சிக்கவைக்கும் அதன் முயற்சிகள் ஏமாற்றத்திலேயே முடிவடைந்துள்ளன. அதேநேரம் யூலியனின் கோபத்தையும் பிராட் லேயின் கைது தூண்டிவிட்டது.

காட்டாறு மூர்க்கத்துடன் யூலியனின் கோபம் பாயத்தொடங்கியது. அதன் வேகத்தில் தேவையில்லாமல் யூலியனைச் சீண்டிவிட்டோமோ? என்று கூட அமெரிக்கா யோசிக்குமளவுக்கு அதிரடிகள் அடுக்கடுக்காக யூலியனால் அரங்கேற்றப்பட்டன.

(திரைகள் இன்னும் திறக்கும்)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17.04.1937

மறைவு
18.02.2010

**அமரர் மேரி இமக்குலேற் அருளானந்தம்**

எங்கள் உயிரோடு கலந்துவிட்ட நீங்கா நினைவலைகளில் உங்கள் ஆத்மா சாந்திக்கு பிராத்திக்கின்றோம்

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

115, பொன்னம்பலம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.


## விண்ணப்பம் கோரல்

வடக்கு மாகாண விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன கடற்றொழில் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களுக்கு விவசாய கால்நடை உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட விவசாய விஞ்ஞானத்தில் நான்கு வருடப் பட்டம் பெற்றிருத்தலுடன் 22 வயது தொடக்கம் 45 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல்வேண்டும். தகுதியுடையவர்கள், செயலாளர், விவசாய கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சு இல. 04, புறூடி வீதி அரியாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(-313)

## தையற் பயிற்சிக்கு பதிவு செய்யலாம்

தெல்லிப்பழை - மல்லாகம் லயன்ஸ் கழகத்தால் பெண்களுக்கான தையல் பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறிக்கான பதிவுகளை எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் துர்க்காபுரம், தெல்லிப்பழையில் உள்ள லயன்ஸ் கழக அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்ளவும். (ம-323)


## அறை வாடகைக்குத் தேவை

கொக்குவிலுக்கும் இணுவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் அரச நிறுவனத்தில் தொழில் புரிபவருக்கு அறை வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 0754354013

## 6 ஆம் ஆண்டு நிவனைஞ்சலி



வையத்துக்காக
22.11.1953

தெய்வத்துக்காக
23.02.2005

**திருமதி இராசகுமாரி கோவர்த்தனராஜா (ராதா)**

குடும்பத்தைச் சீராக்கி சிறப்பாக்கி வாழ்விருதிப் பயணத்தை மேற்கொண்டு வானுலகில் சிவனுடைய திருவடியில் சரணடைந்து வாழும் இராசகுமாரியே நின் நினைவலையில் மிதக்கின்றோம் நாம் நித்தம் நித்தம்

34/3, உடையார் லேன், கந்தர்மடம்.
குடும்பத்தினர்.

## 35ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**நடராசா இரங்கநாதன்**

கடந்த (15.01.2011) சனிக்கிழமை சிவபதம் அடைந்த குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (18.02.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

29/21, உடையார் ஒழுங்கை,
ஐயனார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
அன்பு மனைவி.



அரச ஊழியர்க்கான
சிங்கள வகுப்பு
MR.E.S PIYADASA S.L.T.S.I
(S.P.Trd.Sinhala)
Feb.20th ஆரம்பமாகிறது.
நேரடியாகச் சிங்களம் பேசவும் தேவைப்படுவோர்
The Express Institute
Irupalai, Kopay.
- அதிபர்

## வீடு விற்பனைக்கு உண்டு

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் நெல்லியடியில் பூர்த்தியாகாத மாடி வீடு விற்பனைக்குண்டு. சிலிங்கோ இன்சூரன்ஸ் அருகில்.
தொடர்பு: 021 2262066





இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670


ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப் பொருள்
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இலவசம்
அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலய வளவில் அமைந்துள்ள

## லூர்து அன்னை கெபியின் பவள விழா அழைப்பு

**20.02.2011**



புனித லூர்து அன்னையின் கெபியானது 75 ஆண்டுகளுக்கு முன்பு திரு.வ.இம்மானுவேல் (யாழ்.ஆயரின் தந்தை) என்பவரினால் அவரின் குடும்பத்திற்கு லூர்து மாதா செய்த நன்மைக்காக நன்றியாகக் கட்டப்பட்டதாகும். இப்பதிக்கு வருவோர் லூர்து அன்னையின் பரிந்துரையால் பல நன்மைகளை அருட் பொழிவுகளைப் பெற்றுள்ளனர்.

எனவே இறைவனுக்கு நன்றி. பலி ஒப்புக்கொடுக்க விழைகின்றோம் இப்பலிக்கு அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

வெள்ளிமாலை 5.30 மணிக்கு செபமாலை, திருப்பலி.
சனி மாலை 5.15 மணிக்கு செபமாலை, நற்கருணை வழிபாடு, திருப்பலி, திருச்சொரூப பவனி
ஞாயிறுகாலை 6.45 மணிக்கு யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களினால் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பங்குத் தந்தையும் பங்கு மக்களும், அனா லிராட்ஸ் தம்பு,
பொன்சின் தம்பு, ஊர்காவற்றுறை.



### லூர்து அன்னையின் அருட்காவலைப் பெற்ற காவலூர் மக்கள்

கடந்த 75 ஆண்டுகளாக காவலூர் அந்தோனியார் ஆலய வளவில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் லூர்து அன்னை கெபியின் பவள விழாவில் பங்குமக்களோடு இணைந்து இறைவனுக்கு நன்றிகூறி லூர்து அன்னையை வாழ்த்தி நிற்கின்றேன்.

லூர்து அன்னையின் பரிந்துரையால் எனது பெற்றோர், காவலூர் மக்கள், அயல் கிராமத்தவர்கள் பெற்ற நன்மைகள் அருள்வளங்கள் சொல்லிலடங்கா. எனவே இறைவனுக்கு நன்றி கூறி லூர்து அன்னைக்கு புகழ் மாலை சாற்றி நிற்கின்றேன். இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக'

பேரருட் திரு.இ.தோமஸ் சவுந்தரநாயகம் யாழ்.ஆயர், யாழ்ப்பாணம்.

## வில்லியம்ஸ் திருமணம் மே மாதம்

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ்- டயானா தம்பதியின் புதல்வர் வில்லியம்ஸ் எதிர்வரும் மே மாதத்தில் தனது காதலியை திருமணம் செய்யவுள்ளார். இந்நிலையில் டயானாவின் உடன்பிறந்த தம்பியான சார்ள்ஸ் ஸ்பென்சர் (வயது - 46) மூன்றவது தடவையாக திருமணம் முடிக்க உள்ளார். இவர் கனடாவிலுள்ள சமூகசேவை அமைப்பைச் சேர்ந்த காரேன் கோர்டான் என்பவரை திருமணம் செய்ய உள்ளார்.

இவர்களது திருமணம் எதிர் வரும் ஜூன் மாதம் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது. கோர்டான் ஏற்கனவே ஹொலி வுட் பட தயாரிப்பாளரைத் திருமணம் செய்து இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர்.

சார்ள்ஸ்ஸ்பென்சரும் ஏற்கனவே இரண்டு திருமணம் ஆகி முதல் மனைவி மூலம் நான்கு குழந்தைகளும், இரண்டாவது மனைவி மூலம் இரண்டு குழந்தைகளும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. சார்ள்ஸ் ஸ்பென்சர் பத்திரிகை ஆசிரியராகவும் நிருபராகவும் பணியாற்றி வருகிறார்.

## SPECIAL ENGLISH

### LONDON SPOKEN ENGLISH &GRAMMAR

- 100 மணித்தியாலங்களில் ஆங்கிலம் பேச - எழுத - வாசிக்க நவீன முறையில் ஆரம்பத்திலிருந்து இலகுவாக கற்கலாம்.
- அதிசிறந்த பல ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட பாடங்கள்
- உரையாடல் - நேர்முகப்பரீட்சை - பயிற்சிகள்.
- வெளிநாடுகளில் கல்வி கற்க - வேலை பார்க்க- சுற்றுலா செல்பவர்களை ஒரு மாதத்தில் தயார்ப்படுத்தல்.
- ஆசிரியர்கள் - N.G.O. உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு விசேட சனி- ஞாயிறு வகுப்புக்கள்.
- பயிற்சி முடிவில் " Diploma in English" சான்றிதழ்.
- ஆரம்பம் : 20.02.2011

**Course - co ordinator:Mr.A.RaJagopalan**

- தபால் மூலம் கல்வி ( **Corres pondence)**

வீட்டில் இருந்தவாறே 3 மாதத்தில் தபால் மூலம் ஆங்கிலம் பேச கற்கலாம். ஒவ்வொரு "போயா" விடுமுறையிலும் யாழில் 3 மணித்தியால இலவச கருத்தரங்கு.

- Skype English Classes / Skype Chatting

**SUCCESS GUARANTEED** முழு விவரங்களும் அறியநேரில் தொடர்பு கொள்ளலாம் (அல்லது) Phone 0773233999 (அல்லது) ரூபா 15/ முத்திரை ஒட்டிய உங்கள் சுய விலாசம் தெளிவாக எழுதிய நீள தபால் உறை உள்ளே வைத்து விண்ணப்பிக்கலாம்.

JAFFNA TECHNICAL INSTITUTE
No 46, Clock Tower Road ,Jaffna
(வெலிங்டன் சந்திக்கு வடக்கே - 50 யார்)

Sir pon Ramana Than, Road.
கலட்டிச் சந்திக்கு மேற்கு யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

### திருமதி பாலசிங்கம் கனகம்மா



புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் கனகம்மா நேற்று முன்தினம் 16.02.2011 புதன் கிழமை பிரான்சில் காலமானார்

அன்னார் காலஞ் சென்ற பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் இராதுரை (அராலி வடக்கு), புவனேஸ்வரி (ஜேர்மனி), நவரட்ணராசா (லண்டன்), உதயா (சுவிஸ்), யோகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பிரான்சில் வெள்ளிக் கிழமை தகனம் செய்யப்படும்.

தகவல்: பொ.இராசதுரை
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

நல்லூர்

## சரவணா ரெக்ஸ்

இன்னும் இரண்டு நாள்கள் மட்டுமே..!

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சாறிகள்
பஞ்சாபிகள், பஞ்சாபித் துணிகள்
எங்கும் காணாத வாங்காத விலையில்

### மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

**Special Offer**

இடம் : நல்லூர் (பூங்கனிச் சோலைக்கு முன்பாக)
காலம் : இன்று 16.02.2011- 20.02.2011 வரை
( 5நாள்கள் மட்டும்)
நேரம் : காலை 9.30 மணிமுதல் இரவு 8.30 மணிவரை

அலை அலையாக வாரீர் சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

வாடிக்கையாளர் நலன்கருதி பிரத்தியேகமான இடம்
கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், பஞ்சாபிகள்,
ஏராளம், ஏராளம் அள்ளி அள்ளி செல்லுங்கள்

## Saravana Tex

நல்லூர்
சரவணா ரெக்ஸ்
526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P:021 222 1723.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சந்திரகாந்தன் தவமணிதேவி



மலர்வு
13.03.1958

உதிர்வு
28.02.2010

ஓராண்டு ஓடி மறைந்திட்டாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும் மறைந்திடுமோ
புன்னகை சிந்தும் உங்கள் முகம் காண
நித்தம் நித்தம் ஏங்கித் தவிக்கிறோம்.

30/7, நாவலடிலேன்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# கிளர்ச்சியாளர்கள் மீது நடவடிக்கை: ஈரான் விடுத்துள்ள எச்சரிக்கை

தெஹ்ரான், பெப். 18

அரசுக்கு எதிராக மேலை நாடுகளின் தூண்டுதலின்பேரில் கிளர்ச்சியைத் தூண்டிவிடும் எதிர்ப்பாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என ஈரான் எச்சரித்துள்ளது.

இதனிடையே, கிளர்ச்சிக்குக் காரணமான தலைவர்களை தேசத்துரோகக் குற்றஞ்சாட்டி தூக்கிலிடவேண்டும் என்று ஈரான் எம்.பிக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆயினும் இந்த மிரட்டலுக்கு எல்லாம் அஞ்ச மாட்டோம் என கிளர்ந்தெழுந்துள்ள இரு தலைவர்களான மீர் உசைன் மெசாவி, மெஹ்தி கரெபி ஆகியோர் அரசுக்கு எதிராகப் புதிய பேரணி, ஆர்ப்பாட்டம் ஆகியவற்றை மேற்கொண்டனர்.

இந்த இரு தலைவர்களுமே ஜனாதிபதி முஹம்மத் அஹ்மதி நிஜாத் தலைமையிலான அரசில் முக்கிய பொறுப்பு வகித்தவர்கள்தான். தற்போது நிஜாத் தலைமை நீடிப்பதை இரு தலைவர்களும் விரும்பவில்லை. இதற்காக மக்களைத் திரட்டி அரசு எதிர்ப்புப் போராட்டத்தை நடத்துகின்றனர்.

திங்கட்கிழமை நடந்த அரசு எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது உயிரிழந்த மாணவர் ஒருவருக்கு அஞ்சலி செலுத்த பல்கலைக் கழகம் அருகே ஏராளமானோர் புதன்கிழமை திரண்டனர். அப்போது அரசு எதிர்ப்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் இடையே மோதல் மூண்டது.

கிளர்ச்சியை தூண்டி விடுவோருக்குத் எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திங்கட்கிழமை நடந்த போராட்டத்தின்போது கைதானவர்கள் பலர் உடனடியாக விடுதலை செய்யப்பட்டனர். மேலும் பலர் கைது செய்யப்பட உள்ளனர் என வும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

# அமெரிக்கத் தூதரக அதிகாரி மீது பாக். குற்றப்பத்திரிகை தாக்கல்

அமெரிக்கத் தூதரக அதிகாரி ரேமண்ட் டேவிஸ் மீதான சட்டப்பூர்வ குற்றப் பத்திரிகையை அரசுத் தரப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இதனால் இப்பிரச்சினையில் மேலும் இழுபறி நீடிக்கும் என்று தெரிகிறது. இதுகுறித்து மேல் முறையீடு செய்ய அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

பாகிஸ்தானியர்கள் இருவரை சுட்டுக் கொன்ற வழக்கில், அந்நாட்டுக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரி ரேமண்ட் டேவிஸ் கைதுசெய்யப்பட்டார். அவரை விடுவிக்கக் கோரி, அமெரிக்கா விடுத்த வேண்டுகோள்களையும் மிரட்டல்களையும் பாகிஸ்தான் கண்டுகொள்ளவில்லை.

லாகூர் மாவட்ட நீதிமன்றத்தில் டேவிஸ் மீதான சட்டபூர்வ குற்றப் பத்திரிகையை அரசுத் தரப்பு தாக்கல் செய்தது. தடயவியல் அறிக்கைகள், டேவிசின் வாக்குமூலம், பொலிஸாரின் விசாரணை அறிக்கை ஆகிய மூன்றின் அடிப்படையில், இந்த குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது என சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இதுபற்றி மேல் முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்யப் போகிறார் என அமெரிக்க வெளியுறவுச் செய்தித்தொடர்பாளர் பி.ஜே.குரோவுலி தெரிவித்தார்.

## நைஜீரியாவில் மதக் கலவரம்

ஜோஸ், பெப். 18

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பழங்குடி மதத்தினர் ஆகியோர் வசிக்கின்றனர். இவர்களில் கிறிஸ்தவர்கள் - முஸ்லிம்கள் இடையே அடிக்கடி மோதல் நடந்து வருகிறது.

நைஜீரியாவின் வடக்குப் பகுதியிலுள்ள ஜோஸ் நகரில் கிறிஸ்தவர்கள் - முஸ்லிம்கள் இடையே திடீர் மோதல் ஏற்பட்டது. இது பெரும் கலவரமாக வெடித்தது. இரு தரப்பினரும் பயங்கர ஆயுதங்களுடன் மோதிக் கொண்டனர். இதில் 11 பேர் பலியானார்கள்.

கலவரத்தை அடக்கச் சென்ற பொலிஸ்காரர் ஒருவரும் உயிரிழந்தார். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். கலவரத்தைத் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸார் நகரம் முழுவதும் ரோந்து சுற்றி வருகின்றனர். ஏராளமானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



லெபனானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய வெளியுறவுத்துறைத் தலைமை அதிகாரி கத்ரின் அஸ்டான(வலது) தலைநகர் பெய்ரூத்தில் பிரதமர் நஜிப்மி காதியை சந்தித்துப் பேசுகிறார்.

## மொசம்பிக்கில் 129 அகதிகளுடன் மூழ்கியது கப்பல்

மபுடோ, பெப். 18

ஆபிரிக்க நாடான சோமாலியா, எத்தியோப்பியா ஆகியவற்றைச் சேர்ந்த 129 அகதிகள் தென்னாபிரிக்காவில் குடியேறுவதற்காகக் கப்பலில் சென்றனர்.

மொசம்பிக் அருகே அந்தக் கப்பல் சென்றபோது கப்பலில் விரிசல் ஏற்பட்டு உடைந்தது. கப்பலுக்குள் தண்ணீர் புகுந்ததால் கப்பலும் கப்பலில் இருந்த அனைவரும் கடலில் மூழ்கினார்கள்.

இதைப் பார்த்த மீனவர்கள் அவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். அறுபதுக்கும் மேற்பட்டோரை அவர்கள் காப்பாற்றினார்கள். ஆனால் 50 பேர் கடலில் மூழ்கி இறந்துவிட்டனர். அவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது.

மீட்கப்பட்டோர் மொசம்பிக்கில் உள்ள பாதுகாப்பு மையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

# புகை பிடிக்கும் காட்சிகளை திரைப்படங்களில் குறைக்க உத்தரவு

பீஜிங், பெப். 18

"சீனதிரைப்படம், தொலைக் காட்சி நிகழ்ச்சி ஆகியவற்றின் தயாரிப்பாளர்கள், திரைப்படங்களில் புகைபிடிக்கும் காட்சிகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும்" என்று சீன அரசு உத்தரவிட்டுள்ளது.

உலகில், அதிகளவில் புகையிலைப் பொருள்களைப் பயன்படுத்தும் நாடு சீனா. இதனால், அங்கு ஆண்டுக்கு 10 இலட்சம் பேர் இறந்து போகின்றனர். அங்கு 30 சதவீத இளைஞர்கள் புகைபிடிக்கும் பழக்கத்துக்கு அடிமையாகியுள்ளனர்.

இதே வேகத்தில் போனால், 2030களில் ஆண்டுக்கு 35 இலட்சம் பேர் பலியாகக் கூடிய சூழல் உருவாகிவிடும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதனால், சீன கம்யூனிஸ்ட் அரசு, புகையிலை பயன்பாட்டைக் குறைக்கும் முயற்சியில் கடந்த 10 ஆண்டுகளாகத் தீவிரம் காட்டிவருகிறது. அதன் ஒரு பகுதியாக, விளையாட்டு நிகழ்ச்சிகளில் புகையிலை, புகைபிடித்தல் ஆகியவை தொடர்பான விளம்பரங்களுக்கு அங்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தேசிய திரைப்படம், தொலைக் காட்சி நிர்வாகம் ஆகியவை தன் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் புகையிலைப் பயன்பாடு, புகை பிடித்தல் ஆகியவை தொடர்பான காட்சிகளைக் குறைத்துக்கொள்ளும்படி, அவற்றின் தயாரிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

18 வயதுக்குக் குறைந்தவர்கள் புகைபிடிப்பது, சிகரெட் வாங்குவது, கதாபாத்திரங்கள் பொது இடங்களில் புகைபிடிப்பது ஆகிய காட்சிகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வாய்ப்பு உள்ள பட்சத்தில், நடிகர்கள், இயக்குநர்கள் படப்பிடிப்பு நடக்கும் இடத்தை விட்டுத் தள்ளிச் சென்று புகைபிடிக்க வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியிடம் 6 மாதங்களில் ஆட்சியை ஒப்படைப்போம்

## எகிப்திய இராணுவத் தளபதிகள் அறிவிப்பு

கெய்ரோ, பெப். 18

எகிப்தில் முபாரக் ஆட்சிக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்தது. இதன் காரணமாக ஜனாதிபதி முபாரக் நாட்டைவிட்டு ஓடி விட்டார். இராணுவத் தளபதிகள் ஆட்சியைக் கைப்பற்றி நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார்கள்.

முபாரக்குக்கு எதிராகப் போராட்டத்தை நடத்திய மக்கள் பிரதிநிதிகள் கெய்ரோ நகர சதுக்கங்களில் இருந்து வெளியேறாமல் முழு ஆட்சி மாற்றம் ஏற்படும்வரை தொடர்ந்து சதுக்கங்களில்தான் இருப்போம் என்று கூறி வருகிறார்கள்.

இதற்கிடையில் இராணுவத் தளபதிகளின் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், "தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியிடம் 6 மாதங்களுக்குள் ஆட்சியை ஒப்படைப்போம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் அமைதியாகவும், சுதந்திரமாகவும் நடைபெறும் என்றும், இராணுவத் தளபதிகள் ஆட்சியில் நீடிக்க மாட்டார்கள் என்றும், தற்போதைய நிலைமை இராணுவத்தின் மீது திணிக்கப்பட்டு உள்ளது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

# ஜப்பானில் மூன்று தடவைகள் பூகம்பம்

ஹொங்காங், பெப். 18

ஜப்பானில் செவ்வாய்க் கிழமை இரவு மூன்று தடவைகள் நிலநடுக்கம் ஏற்பட்டது. உயிரிழப்பு எதுவும் இல்லை. ஆழிப்பேரலை அச்சுறுத்தலும் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

இவை கடலுக்கு அடியில் ஏற்பட்டன. முதலில் ஏற்பட்ட பூகம்பம் ரிச்டர் அளவுகோலில் 5.4 புள்ளிகளாகப் பதிவானது. இது ஜப்பானின் ரியூகு தீவுகள் அருகே, இந்திய நேரப்படி செவ்வாய்க்கிழமை இரவு 7.42 மணியளவில் கடலுக்கு அடியில் 4.7 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டது.

இரண்டாவது நிலநடுக்கம், ஜப்பானில் மிகப்பெரிய தீவான ஹோன்ஷுவுக்கு அருகே நள்ளிரவு 12.31 மணிக்கு கடலுக்கு அடியில் 13.3 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.2 புள்ளிகளாக இருந்தது.


சில நிமிடங்களுக்குப் பின்னர், அதே பகுதியில், கடலுக்கு அடியில், 53.9 கிலோமீற்றர் ஆழத்தில் மூன்றாவது பூகம்பம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.1 புள்ளிகளாக இருந்தது.

இந்த பூகம்பங்களால் பொருள் சேதங்கள் எதுவும் ஏற்பட்டதாகத் தகவல் வெளிவரவில்லை.

உலகில் ஏற்படும் பூகம்பங்களில் 20 சதவீத பூகம்பங்கள் ஜப்பானில்தான் ஏற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த முப்பது ஆண்டுகளுக்குள் மிகப்பெரிய பூகம்பம் ஒன்று ஜப்பான் தலைநகர் டோக்கியோவைத் தாக்கக்கூடும் எனவிஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

# ஓராண்டு நினைவஞ்சலி




## அமரர் முதலி உதயகுமார்

(நாவற்காடு, வரணி)

ஒளி விளக்காய் நம் குடும்பத் தலைவனாகி
உம்மவர் உறவுகள் எம் அன்பை வென்றே
காத்திருக்க எமைவிட்டே லண்டன் சென்று
காலமெல்லாம் எமக்காக வாழ்ந்த சொத்தே
காத்திருந்தோம் உம் அருகில் நாம் வரவே
கேட்டதொரு பேரிடிதான் எங்கள் காதில்
உறைந்துபோனது எம் உள்ளம்
ஆற்றிடவும் வகையறியோம்
உம் அன்பிற்காய் ஏங்கி நிற்கின்றோம்.

நாவற்காடு,
வரணி.
0773695856

குடும்பத்தினர்.

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,பெப்.18

திருநெல்வேலி, பழங்கிணற்றடி ஸ்ரீவீர கத்தி விநாயகர் ஆலயத்தின் கொடியேற்ற வைபவம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11மணிக்கு நடைபெற்றது.

தொடர்ந்து 16நாள்கள் நடைபெறவுள்ள திருவிழாக்களில் சப்பறத் திருவிழா 2ஆம் திகதி புதன்கிழமையும், தேர்த்திருவிழா 3ஆம் திகதி வியாழக்கிழமையும், தீர்த்தத் திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமையும் இடம்பெறும்.

(ற-313)

* * *

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ விரகத்தி விநாயகர் ஆலயத்தின் சங்கடஹர சதுர்த்தி விரதம் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜையுடன் விநாயகப் பெருமானின் வீதியுலா இடம்பெறும். (ற)

* * *

பொலிகண்டி கந்தவனம் சமுத்திர தீர்த்தவாரியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 6மணிக்கு பொலிகண்டியில் குடிகொண்டுள்ள மூன்று கோயில்களின் மாசிமக தீர்த்தம் இடம்பெறும்.

கந்தவனம் கந்தநாதருடன் இடுப்பைமுலை சித்திவிநாயகர் கோயில், சச்சாயம் பதி வீரகத்தி விநாயகர் கோயில், மருதாம்புலம் பத்திரகாளி அம்பாள் கோயில் ஆகிய சுவாமிகளும் மாசி மக தீர்த்த மாடுவார்கள்.

(ற-236)

## விபத்தில் மாணவனுக்கு தலையில் காயம்

காங்கேசன்துறை வீதி மல்லாகத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் தலையில் படுகாயங்களுக்கு ஆளாகிய நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் முன்னால் வந்த வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்ட வேளையில் எதிரே சைக்கிளில் வந்த சிறுவனை மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

குறிப்பிட்ட விபத்தில் சைக்கிள் கடுமையாகச் சேதம் அடைந்துள்ளது. சம்பவ இடத்துக்கு விரைந்த தெல்லிப்பழைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-86)

## கல்விமாணி வகுப்புகள்

கல்விமாணி முதலாம்வருட மாணவர்களுக்கான வகுப்புகள் நாளை மறுதினம் ஞாயிறு காலை9.00மணிக்கு யாழ். மத்தியகல்லூரியில் நடைபெறும்.சகல விரிவுரையாளர்களையும், மாணவர்களையும் அன்றைய தினம் விரிவுரைகளில் பங்குகொள்ளுமாறு இணைப்பாளர் சி. தயாபரன் கேட்டுள்ளார். (ஒ)

# மரண அறிவித்தல்



## S.V.சந்திரசேகரம்

முன்னாள் துறைமுக அதிகார சபையின் சிரேஷ்ட அத்தியட்சகரும், பருத்தித்துறை நகரசபை 2ஆம் வட்டார அங்கத்தவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், பருத்தித்துறை, கல்லூரி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வருமான உயர் திரு. S.V. சந்திரசேகரம் அவர்கள் 16.02.2011 புதனன்று பருத்தித்துறையில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.
T.P:- 0714441751

தகவல்:
பாலசுந்தரம் - சிவாஜி (மருமகன்)
பிரதி ஆணையாளர் -
உள் நாட்டு இறைவரித் திணைக்களம்,
யாழ். பிராந்தியக் கிளை.

(108614)

ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 550
சீட்டிழுப்பு திகதி: 16.02.2011

வெற்றி எழுத்து: D
வெற்றி இலக்கங்கள்: 32 40 58 70

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ.16,494,612.00 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 09 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 212 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 427 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 10948 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6330 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 158082 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 25432 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,319,280.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 4607000, 2433631
இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.16,700,070.40

**The Open University of Sri Lanka**

Applications are called for
**B.Sc. Degree Programme**

**Entry Requirements:**
3 passes in A/L Science, in any number of sittings
Less than 3 passes: start from our Foundation Courses in Science

**Application forms:**
Available from : 08.02.2011 to 12.03.2011
Could be collected from: Open University of Sri Lanka – Jaffna Regional Centre, Browns Road, Kokuvil.

**Closing Date of Receiving applications:**
**12th of March 2011**

**Further details:**
**Coordinator,**
**Jaffna Regional Centre**
**Tel.021 222 3374**
**Email: adjaf@ou.ac.lk**

# மரண அறிவித்தல்

## திருமதி மகிழ்மலர் ஜெயரட்ணம்



உடுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகிழ்மலர் ஜெயரட்ணம் நேற்று (17.02.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் V.K ஜெயரட்ணம் (ஓய்வுபெற்ற C.T.B சாரதி) அவர்களின் அன்பு மனைவியும் ஜெயமோகன் (ஆசிரியர் - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) ஜெயபாஸ் கரன் (கணக்காளர்- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- வவுனியா வளாகம்), காலஞ்சென்ற செல்வி ஜெயந்தி (முன்னாள் உடுவில் மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயமலர், சித்திராதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான துரை (அதிபர்), சந்திரபூமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜோயல் ஜெயப்பிரகாஷ், காருண்யா, ஜெயசலோமி, கரீஷ்ராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (19.02.2011) சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமலிங்கம் வீதி, உடுவில்.
மோகன்-0779798073
பாஸ்கரன்-0779079428

தகவல்:
குடும்பத்தினர்.

# தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இன்று ஆர்ப்பாட்டம்

## திருமாவளவன் அறிவிப்பு

தமிழக மீனவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என, அக்கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,


தமிழிக மீனவர்களுக்கு எதிரான சிங்களவர்களின் கடுமையான நடவடிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

பாண்டியன், ஜெயக்குமார் படுகொலைகளைத் தொடர்ந்து தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனைவிட கண்டன ஆர்ப்பாட்டங்களும் சில இடங்களில் நடைபெற்றன.

இந்திய அரசும் உரிய நடவடிக்கை எடுப்பதாக வழக்கம் போல வாக்குறுதி அளித்தது.

இந்நிலையில் மீண்டும் திடீரென கடந்த 15ஆம் திகதி 18 இழுவைப் படகுகளுடன் 112 தமிழக மீனவர்களை சிங்கள வெறியர்கள் கடத்திச் சென்றுள்ளனர். அத்துடன், மறுநாளே 27 மீனவர்கள் சிங்களக்



கடற்படையினரால் கடத்தப்பட்டு, அனைவரும் பொய் வழக்குகளில் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் ஆளும் கட்சியான தி.மு.க நாடு தழுவிய அளவில் உடனடிப் போராட்டத்தில்ஈடுபட்டும் இந்திய பிரதமர் மன்மோகன்சிங், கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறியும் உள்ளார்.

ஆனால் இவற்றையெல்லாம் ஒருபொருட்டாக மதிக்காமல் அனைவரையும் சிறைப்படுத்தியுள்ளது சிங்கள அரசு. தமிழ் நாட்டு மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் உறுதிமிக்க நடவடிக்கை எடுக்க இந்திய அரசு எத்தகைய முனைப்பும் காட்டவில்லை என்கிற நிலையே இதற்குக் காரணமாக உள்ளது.

கடந்த 1983லிருந்து இது நாள் வரையில் தமிழ்நாட்டு மீனவர்கள் கடத்தப்படுவதும், சுட்டுக் கொல்லப்படுவதும் தொடர் கதையாகவே நீடித்து வருகிறது.

இந்திய அரசின் மெத்தனப் போக்கும், தமிழின விரோத நிலைப்பாடுமே சிங்களவர்களை இத்தகைய செயல்களில் தொடர்ந்து ஈடுபட ஊக்கப்படுத்துவதாக அமைந்துள்ளன.

எனவே இந்திய அரசு தமது தமிழின விரோதப் போக்கைக் கைவிட்டு சிறைப்படுத்தப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மீட்பதற்கும் இத்தகைய போக்குகள் தொடராமல் தடுப்பதற் கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் வற்புறுத்துகிறோம்.

தமிழர்களுக்கு எதிராகத் தமிழர்களைத் திருப்பிவிடும் சதி முயற்சியில் சிங்களவர்கள் ஈடுபடுவதற்கான செயல் திட்டங்களை வகுத்து வருகின்றனர் என்கிற தவல்களை உறுதிப்படுத்தப்படுவதாகவும் தற்போதைய நிகழ்வுகள் அமைந்துள்ளன என்பது மிகுந்த அதிர்ச்சியைத் தருகிறது.

சிங்களவர்களின் இத்தகைய முயற்சிகளுக்கு இடங்கொடுக்காமல் தமிழினம் ஒன்றுபட்டுப் போராட வேண்டும் என்பதை தமிழக மற்றும் ஈழத் தமிழர்கள் உணர்ந்திட வேண்டும் என இந்த நேரத்தில் விடுதலைச் சிறுத்தைகள் சுட்டிக் காட்டுகிறது.

சிறைப்படுத்தப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் அனைவரையும் உடனடியாக விடுவிப்பதற்கு இந்திய அரசு அதிதீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி இன்று முற்பகல் 10 மணியளவில் சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று திருமாவளவன் கூறியுள்ளார்.

# திருவனந்தபுரத்தில் பாடசாலை வான் ஆற்றில் கவிழ்ந்து 6 பேர் பலி

திருவனந்தபுரத்தில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்று நேற்றுக் காலை ஆற்றில் கவிழ்ந்தது. இதில் 5 குழந்தைகள் உட்பட 6 பேர் பலியானார்கள்.

திருவனந்தபுரம் சாக்கை கரிக்கம் சாமுண்டி கோவில் அருகே அந்தப் பகுதியைச் சேர்ந்த 12 குழந்தைகளை ஏற்றிக்கொண்டு மேற்படி வான் ஆற்றங்கரை ஓரமாகச் சென்ற வேளை எதிரே வந்த ஒரு வாகனம், வான் மீது மோதி யது.

இதில் வான் நிலை தடுமாறி ஆற்றுக்குள் கவிழ்ந்தது. இதனால் வானில் இருந்த குழந்தைகள் பயத்தில் அலறினார்கள். அருகிலுள்ளவர்கள் அங்கு திரண்டு அவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

அதற்குள் தண்ணீரில் மூழ்கி 5 குழந்தைகளும், குழந்தைகளை அழைத்துச் சென்ற பணிப்பெண் ஒருவரும் பலியானார்கள்.

ஏனைய குழந்தைகள் மீட்கப்பட்டு திருவனந்தபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

# இலங்கை தேசியக் கொடியை எரித்த 25 பேர் பொலிஸாரால் கைது

## மதுரையில் பரபரப்பு

மதுரையில் இலங்கை அரசின் தேசிய கொடியை எரித்த 25 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாகையில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற 106 மீனவர்களை சிறைப்பிடித்து வைத்துள்ள இலங்கை கடற்படை, நேற்று மீண்டும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கோட்டைப் பட்டினத்தைச் சேர்ந்த 24 மீனவர்களையும் சிறைப்பிடித்துள்ளது.

மேலும் கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவர் மீது பெற்ரோல் குண்டு வீசியும் இலங்கைக் கடற்படை தாக்கியுள்ளது.

இதில் அவர் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்படுவதைக் கண்டித்து, மதுரையில் இந்திய இளைஞர் பேரவை சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்திய இளைஞர் பேரவை மாவட்டத் தலைவர் ராஜன், மாவட்டச் செயலாளர் மணிமுத்து தலைமையில் 25 பேர் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கையின் தேசியக் கொடியை எரித்தனர்.

இலங்கை அரசின் தேசிய கொடியை எரித்ததற்காகப் போராட்டத்தில் ஈடுபட்ட 25 பேர் மீதும், மதுரை திடீர் நகர் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து அவர்களைக் கைது செய்தனர். மதுரையில் நேற்றுக் காலை நடந்த இந்தப் போராட்டத்தால் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன், சிறிது நேரம் பதற்றமாகவும் காணப்பட்டது.

## விடுதலைக்காக...



எழுச்சிப்போர்: தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் நடுக்கடலில் வைத்து கைது செய்து சித்திரவதை செய்வதை கண்டித்தும் அவர்களை உடனே விடுதலை செய்ய வலியுறுத்தியும் சென்னையில் இளைஞர் காங்கிரஸார் நேற்று திடீர் மறியல் போராட்டம் நடத்தினர். இதன்போது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவியை ஊர்வலமாக எடுத்துச் சென்று தீயிட்டு எரிக்கின்றனர்.

# தமிழக மீனவர்களை விடுவிக்காவிட்டால் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவோம்

## பா.ஜ.க. மூத்த தலைவர் சுஷ்மா சுவராஜ் எச்சரிக்கை

இலங்கையில் சிறை வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 106 பேரை விடுவிக்கவில்லை என்றால், போராட்டத்தைத் தீவிரப்படுத்துவோம் என, பா.ஜ.க மூத்த தலைவர் சுஷ்மா சுவராஜ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற 106 மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டு உள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து, பா.ஜனதா



கட்சி சார்பில் டில்லியில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பு நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், பா.ஜனதா மூத்த தலைவருமான சுஷ்மா சுவராஜ், இந்த ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் உட்பட அதிகளவான தொண்டர்கள் கலந்துகொண்டனர்.

இலங்கை அரசைக் கண்டித்தும், சிறை வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோஷங்களை எழுப்பினார்கள்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு, சுஷ்மா சுவராஜ் ஏற்கனவே கடும் கண்டனம் தெரிவித்து இருந்தார். அப்போது செய்தியாளர்களிடம் பேசிய சுஷ்மா சுவராஜ்,

இலங்கைப் படையினரால் இந்திய மீனவர்கள் துன்புறுத்தப்படுவது இரு நாடுகளுக்கு இடையே உள்ள நல்லுறவைப் பாதிக்கும். இலங்கையில் அமைதியும், வளமும் பெருக வேண்டும் என்றுதான் நாங்கள் விரும்புகிறோம். ஆனால் இதுபோன்ற நிகழ்வுகள், இருநாட்டு உறவிலும் பதற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

சிறை வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால், எங்கள் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவோம். இந்திய மீனவர்களுக்கு எதிரான கொடுமையை பா.ஜனதாவோ, இந்திய அரசோ பொறுத்துக்கொள்ளாது என்றார்.

# விழிநீர் சொரிய 31 ஆம் நாள் நினைவுகளோடு...



மடி தவழ
16 * 05 * 1991

மண் தவழ
19 * 01 * 2011

கருவறைக்குள் கற்பனை - நீ
கண்ணுக்குள் கருமணி - நீ
மழலைக்கு மகத்துவம் - நீ
பண்பிலே சிகரம் - நீ
அன்புக்கோர் அடையாளம் - நீ
உறவுகளின் துடிப்பு - நீ
மனதிலே மகிழ்ச்சி - நீ
நினைவுகளில் நிலைத்தவள் - நீ
எங்கள் செல்ல சுரேந்தி - நீ
நிற்காமல் சென்றதேனோ?

## செல்வி தங்கராசா சுரேந்தினி

கடந்த 19.01.2011 அன்று சிவபதமடைந்த எமது அன்புச்செல்வத்தின் பிரிவுத்துயரைப் பகிர்ந்துகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (18.02.2011) மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

**மீளாத்துயருடன் குடும்பத்தினர்.**

தங்கராசா சுதன் (அண்ணா),
சுதன் தச்சுத் தொழிலகம்,
சங்கானை மேற்கு, சங்கானை.
T.P: 077-6594625

# கழகங்களுக்கு இடையேயான கிரிக்கெட்; குப்பிளான் விக்னேஸ்வரா சம்பியன்

வலி.வடக்கு, பெப்.18

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இணுவில் கலை ஒளி விளையாட்டுக் கழகமும் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய கலை ஒளி விளையாட்டுக்கழகம் பத்து ஓவர்கள் நிறைவில் 05 விக்கெட்டுக்களை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. அரவிந்தன் 19, ஜீவன் 16 ஓட்டங்களைப் பெற்றார்கள்.

குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தனுஷன் 02 ஓவர்கள் பந்துவீசி 10 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் மோகனரூபன் 02 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும் கைப்பற்றினார்கள்.

64 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் 09 ஓவர்கள் நிறைவில் 05 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

றஜீவ் ஆட்டமிழக்காது 30, கீர்த்தி 10 ஓட்டங்களைப் பெற்றனர். கலை ஒளி விளையாட்டுக் கழகத்ததைச் சேர்ந்த பதிதர்ஷன் 2 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும் சுஜீவன், அரவிந்தன், கோகுலன் தலா 2 ஓவர்கள் பந்து வீசி முறையே 9,17,18 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

போட்டியின் ஆட்டநாயகனாக குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த றஜீவ் தெரிவு செய்யப்பட்டார். (ம-86)



அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டிக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் பிரதேச இணக்கசபைத் தவிசாளர் இ. மயில்வாகனம் வெற்றி பெற்ற மாணவர் ஒருவருக்கு வெற்றிக் கிண்ணம் வழங்குகிறார். (236)

## எல்லே, வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை

தென்மராட்சி,பெப்.18

தென்மராட்சிப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான ஆண்களுக்கான எல்லே போட்டியும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

எல்லே மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்திலும் வலைபந்தாட்ட போட்டிகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மைதானத்திலும் இடம் பெறவுள்ளதாகப் பிரதேச விளை யாட்டு உத்தியோகத்தர் யே. சக்தி வேல் அறிவித்துள்ளார்.(ம-207)

# பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி, பெப். 18

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப்போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 1 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் வேள்ட் விஷன் நிறுவன நிர்வாக வள இணைப்பாளர் திலகநாயகம் போல் பிரியவத்சயனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) த. சிவகுமாரும் கலந்து கொள்வர். (313-121-207)

* * *

மட்டுவில் வடக்கு அ.தக பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். அதிபர் ச. கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக டாக்டர் திருமதி லியோன் புஷ்பராணி கலந்து கொள்வார். (த-207)

* * *

வடமராட்சி, பெப்.18

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ச. செல்வச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த-236)

* * *

வடமராட்சி,பெப்.18

அல்லாரை நலன்புரி நிலையத்தில் இயங்கிவரும் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் எஸ். செல்லக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ம-236)

* * *

வடமராட்சி, பெப்.18

மாமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்குபாடசாலை மைதானத்தில் அதிபர் க.சந்திரமோகன் தலைமையில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக மருதங்கேணி உதவி அரச அதிபர் ந. திருலிங்கநாதன் கலந்துகொள்வார். (ம-236)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
05.08.1956

மறைவு:
05.01.2011

### ஸ்ரீமான் தம்பிமுத்து சண்முகநாதன்

*(கிளை முகாமையாளர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்)*

மின்னாமல், முழங்காமல் இடியொன்று வீழ்ந்ததுவே
எப்படி ஐயா பொறுப்போம் உங்கள் - திடீர் மறைவை
ஊரெல்லாம் உங்களை தயாளன்
என போற்றி நிற்க
ஏன் ஐயா எம்மை பாதி வழியில்-
பரிதவிக்க விட்டுவிட்டுச் சென்றீர்கள்

*தாமோதரம்பிள்ளை வீதி,
சப்பச்சிமாவடி,
சாவகச்சேரி, தொ.பே: 021 4910744*

என்றும் தங்கள் பாசம் மறவா:
மனைவி, மகள், மகன்,
மருமகன், பேரன்- சுயன்

## 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை



துணுக்காய் கல்வி வலயத்தின்
முகாமைத்துவ பிரதிக்கல்விப்
பணிப்பாளர்
திரு.கு. விஜயபாலா
அவர்களின் தந்தை

**அமரர் வல்லிபுரம் குமாரசாமி**

அவர்கள் 18.01. 2011 அன்று இறைபதமெய்தி இன்று அன்னாரது 31ஆம் நாள் நினைவு தினம் இடம் பெறும். இவ்வேளையில் இவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி!! சாந்தி!! சாந்தி!!

ஊழியர் நலன்புரிசங்கம்,
வலயக் கல்வி அலுவலகம்,
துணுக்காய்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
11.01.1976

இறப்பு:
28.02.2010

திதி: பௌர்ணமி

**சின்னராசா ஸ்ரீ சங்கர்**
**(சங்கர்)**

*ஆண்டு ஒன்று ஆனதையா
நீர் எம்மைவிட்டு
விண்ணுலகு சென்று
ஆனால் உம்முடைய நினைவு-எம்மை
வாட்டுகிறது தினமும்
உம்மை நாம் இனி எப்போது
காண்போம் ஐயா சங்கர்
உமது நினைவுதான் எமக்கு நிஜம்
உமது ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்*

33, செல்லர் வீதி, நல்லூர்.

சின்னராசா
குடும்பத்தினர்

## இன்று நடைபெறும் ஆட்டங்கள்

வலி வடக்கு, பெப்.18

யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைத்தலைமையகமும் பருத்தித்துறை யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்குகளும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியை நடத்திவருகின்றன.

இதில் இன்று பிற்பகல் 4 மணிக்கு கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

வடமராட்சி நவசக்தி விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்ப்பாணம் ஸென் றொக்ஸ் விளையாட்டுக் கழகம்.

வடமராட்சி சிவானந்தா விளையாட்டுக்கழகம் எதிர் யாழ்ப்பாணம் உரும்பிராய் சென் மைக்கல் விளையாட்டுக் கழகம். (ம-86)

## கண்ணீர் அஞ்சலி



**சோதிநாதன் சிவசுந்தரம் B.A.**
(ஓய்வுபெற்ற அதிபர்)

கடந்த (13.02.2011) அன்று லண்டனில் இறைவனடி சேர்ந்த எமது பாடசாலையின் நலன் விரும்பி அமரர் சோதிநாதன் சிவசுந்தரம் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

* அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.
* பழைய மாணவர் சங்கம்
* பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

யாழ்/ அரியாலை
ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை. (487)

Student Visa
**SPOT ADMISSION**
(Feb 19th, 20th) முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்

மூன்று வாரத்தில் UK செல்லலாம்

**Student/ Visit & Migration**
UK/ Canada/ Australia/ Netherland/ New Zealand/ Malaysia/ Ireand Reject/ Refusal Visa க்கள் பரிசீலனை செய்து தரப்படும்.

* புதிய வீசா விதிகளுக்கமைய Visa Process மிக திறமையாக செய்து தரப்படும்.
* 15வருட அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் மூலம் ஆவணங்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.
* அங்கீகாரம் பெற்ற College/ University அனுமதி.

ADMISSION INTAKE 2011 FEB/MAR
O/L A/L OFFER LETTER WITHIN 3 DAYS
MIN QUALITION O/L

Foundation Degree/ Language Courses (English) Second Degree Holders No Need IELTS Free IELTS Classess

**Australia Migration** Business & Skill
*Engineers * Accountants *IT Degree holders

EUROPEAN TECHNOLOGY & BUSINESS COLLEGE
No.22A, Frankfort Place, Bambalapitiya, Colombo- 04, Sri Lanka.
Tel: 011 2508443/ Mob: 0777849853.
Web: www.etbclanka.com/ E-mail: etbc@etbclanka.com
Jaffna Branch- 82/12A Chetty Street, Nallur.
Tel: 0777849853/ 0774454646.

## ஓராண்டு நினைவு முகம்



அனலைதீவு தெற்கு, புளியந்தீவு
அமரர்
**ஸ்ரீமதி ருக்மணி அம்மா (தங்கம்) நடராஜக்குருக்கள்**
திதி: மாசிமாத அமரபக்க பிரதமை

தோற்றம்
12★12★1927

மறைவு
01★03★2010

பெறவரிய மக்களென நாங்கள் வந்தே
பிரியமுடன் அரவணைத்து எமைக் காத்து
திறலாய் பணியாற்றி எம் குடும்பத்துக்குத்
திசைகாட்டியாகவே திகழ்ந்திருந்து
அறமெலாம் ஒருருவிலடைந்தோ மென்று
அனைவருமே ஆனந்தமுற்ற வேளை
உறவதனை உரிமைதனை எமக்களித்து
உலகாண்டாள் திருவடிக்கே ஏகினீரே!

இல.02, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்,
0214922729,
0718220920.

சிவஸ்ரீ ந.தாமோதரக்குருக்கள்
குடும்பத்தினர்.

**SAN INTERNATIONAL Pvt (Ltd)**

* UK. India போன்ற நாடுகளுக்கான Student Visa ஒழுங்குகள்
* UKBA Highly trusted colleges இல் உடனடி அனுமதிகள் ( March, April Intake)
* அனைத்து நாடுகளுக்குமான விசா Filing ஒழுங்குகளுடன் Airticket Booking அனைத்து நாடுகளுக்கும் செய்து கொடுக்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு :-San International
69, Arasady Rd
யாழ்ப்பாணம்.

021-222-3440
077-4745642
(Strictly on Appointment)

## இணையத்தில் முருகானந்தா ம.வி.

கிளிநொச்சி, பெப்.18

முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயத்துக்கென தனியான இணையத்தளம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலை தொடர்பான விடயங்களை www.MuruganandhaMv.sch.lk என்னும் முகவரியில் பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## முழு நிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப்.18

மாதாந்த முழுநிலா நாள் கருத்தரங்கு நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு குப்பிளான் வீரமனை கன்னிமார் கௌரியம்பாள் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சோ. பரமநாதன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் 'பூஜ்ஜியம்' என்ற தலைப்பில் இக் கருத்துரையை எஸ். கேதீஸ்வரன் வழங்குவார். (ஒ-10)

## நாளாந்தம் பாம்புக்கடிக்கு இலக்காகும் மக்கள்

தென்மராட்சி, பெப்.18

தென்மராட்சி பிரதேசத்தில் நெல் அறுவடை ஆரம்பித்துள்ளதை அடுத்து தினமும் வயல்களில் வேலைசெய்பவர்கள் பாம்புகளினால் கடியுண்டு வருகின்றனர்.

விஷப்பாம்புகளால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டுவரப்படுவோர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர்.

நேற்று வரணி - இயற்றாலைப் பகுதியில் பாம்பினால் கடியுண்ட நிலையில் இராசரத்தினம் கார்த்தீபன் (வயது-21) என்பவருக்கும் மட்டுவில் வடக்குப்பகுதியில் பாம்பினால் கடியுண்ட வன்னியசிங்கம் செல்வக்குமரன் (வயது -18) என்பவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (ஒ-207)

## புத்தூரில் பால் சேகரிப்பு நிலையம்

பருத்தித்துறை வீதியில் புத்தூர்ச் சந்திக்கு அருகில் பால்சேகரிப்பு நிலையம் ஒன்று தொழிற்படத் தொடங்கியுள்ளது.

இதன் மூலம் இப் பிரதேச மற்றும் அயல்பிரதேச மக்களின் விலங்கு வேளாண்மை முயற்சிகள் சுறுசுறுப்படையத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக பட்டி மாடுகள் போன்றவற்றை இதுவரை மண் வளமாக்கல் மற்றும் இறைச்சி போன்றவற்றிற்குப் பயன்படுத்தியவர் களில் பலர் தற்போது இவற்றிலிருந்தும் பாலை சேகரிக்கத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு சேகரிக்கப்படும் பால் உரிய முறையில் பாதுகாக்கப்பட்டு தென்னிலங்கைப் பகுதிக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. (ஒ-72)

**PERSONAL CLASS**
364, Stanly Rd, Jaffna. (Near DMI)
BA Part I
Revision & Paper
Tamil - K.தர்மராஜா
Pol. Sci - புவனதாஸ்
Hin. Cul -சத்தியதாசன்
Drama - சிவன்ரூபன்
Philosophy - சிவா
ENGLISH 9-11/11-1
ஆரம்பம்நாளை:-9.am

**LAPTOP FOR SALE**
T.P : 021-222 4459, 0774192275
PROLiNK Brand New Glee SW9 Intel Processor 2.40GHz, Core i3, 320GB HDD, 2GB DDR III Ram, 16:9 LED Screen, VGA1GB, Modem, Ethernet Wire & Wirless, DVD Writer, Mic, Card Reader, Wide&Silence Keyboard, 5Hours Battery Backup, Multi-Gesture Touch, அனைத்தும் Rs.72000
Free : Laptop Woofer & Optical Mouse

**விற்பனைக்கு**
53 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய Toyota Lite Ace.Lite blue 2nd Owner உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0750467628, 021 3214308

**விற்பனைக்கு**
பாவித்த வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 32, பிரப்பங்குளம் றோட்,
வண்ணார்பண்ணை. 0757052686

## சேவை நலன் பாராட்டு



பகுதித்தலைவர்
**திருமதி கலாவதி நடேலோகசிங்கம்**
(SOCIAL Trid. S.L.T.S -1)
07.01.1975 - 01.03.1982
கிறேக் (Craig) G.T.M பாடசாலை பண்டாரவளை
02.03.1982 - 22.01.1984
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கோப்பாய்
23.01.1984 - 17.02.2011
யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி

வண்ணை வைத்தீஸ்வரன் புகழோங்கும்
சூழலில் பிறந்து கவின் கலைகள் பல கற்று
சமூகவியல் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்று
மகத்தான ஆசிரியப் பணியில்
அர்ப்பண சிந்தையுடன் அயராது உழைத்து
மகளிர் நலனோம்பி மாணவ சமூகத்தை உயரவைத்து
யாழ். இந்து மகளிர் கல்லூரியில் உன்னதமாய்
உயர்வு பெற்று
கற்றோரும் மற்றோரும் போற்றும் வண்ணம்
பகுதித் தலைவராய் பணிகள் பல புரிந்து
அகவை அறுபதில் கால் பதித்து
இளைப்பாறும் இவ்வேளை
நலம் பல பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.
யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் இராயப்பு இராசு

தோற்றம்
11 ★ 09 ★ 1944

மறைவு
18 ★ 02 ★ 2011



ஐயா; ஆண்டொன்று ஆனதைய்யா,
அன்பான உன் திருமுகம் பார்த்து,
கனிவான உன் வாய்மொழி கேட்டு,
கலங்கி அழுது, கண்ணீர் சிந்துகின்றோம்.
நொந்து புலம்பி, வேதனைப் படுகின்றோம்,
நினைக்கும் நேரத்தில் நெருஞ்சி முள்ளொன்று,
நெஞ்சைக்குத்தி ரணப்படுத்துகிறதே,
வள்ளுவர் புரத்திலே வந்துதித்த வள்ளலே,
ஊர்த் தலைவனாய், உயிர் காக்கும் தோழனாய்,
பண்பான மனிதனாய், பாசமான தகப்பனாய்,
பிரகாசித்த அன்பு தீபமே,
அற்புதமான உன் அன்பினால்,
அளவிட முடியாத உன் தியாகத்தால்,
உயரிய உன் உத்தம குணங்களால்,
உயர்ந்த மனிதராய் ஒவ்வொரு,
உள்ளங்களிலும் உறைப்பட்டாய்,
நினைத்துப் பார்த்து நெகிழ்கின்றோம்...
இத்தனை உத்தமரா... எம்மைப்
பெற்றெடுத்த தந்தையென்று,
பெற்ற தாயிழந்து பரிதவித்து நின்ற,
பத்துப் பிள்ளைகளையும், பாசமாய் அரவணைத்து,
பாரபட்சமின்றி பரிவு காட்டிய உன்,
பரிசுத்த மனசிற்குப் பரிசாக என்ன தருவோம்
எங்கள், பாசமான ஐயாவே!
தியாக மனதிற்கோர் தேசிய விருதென்றால்,
திட்டவட்டமாய் அது நீதானென்று,
தெரிந்துரைக்கும் எந்த தேச சபையும்,
நாட்டுப்பிரச்சினை நேரமெல்லாம்,
எதையுமே நினையாது,
பிள்ளைகள் மட்டுமே பிரதானமென்று,
ஊருராய் ஓடி, உயிர் காத்த உனக்கு...
கூறைக்கும், வித்தியாசம் அதிகமில்லை,
வன்னி மண்ணின், வேகாத வெயிலில் நீ...
வெறுங்காலுடன் நடந்து சென்று,
வேர்வை சிந்தி, வருந்தியுழைத்து,
அமுதுடன் அறிவும் ஊட்டிய வேளைகளை,
வெந்து போன உடல் கூட மறவாது ஐயா!
அன்னையாய், தந்தையாய், அத்தனை
குழந்தைகளையும் அரவணைத்து,
ஊர் போற்றும் உத்தம குணங்களையும்,
உயரிய கல்வியையும் ஊட்டி வளர்த்த,
உன் சித்தம் நிறைந்த சீரிய, அன்பிற்கு,
சத்தியமாய் எதுவுமே சமானமில்லை,
ஐயா! எங்கள் அன்பான ஐயா!
உயிர் பிரிந்த பின்னாலும்,
உடலிழந்து உருமாறிப் போனாலும்,
உன்னிலிருந்து உருவான,
உயிரணு ஒவ்வொன்றும்,
ஊழ் ஊழிக்காலமளவும்,
உன்னையே நினைத்து உருகி நிற்கும்,
உன் தயவை வேண்டி நிற்கின்றோம்.

இன்று (18.02.2011) வெள்ளிக்கிழமை காலை ஆறு மணிக்கு குளமங்கால் சவேரியார் கோயில், யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயம், நாவாந்துறை பரலோக மாதா ஆகிய இடங்களில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

உங்கள் நினைவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

இணுவில் மேற்கு,
இணுவில். (474)

## இறுதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். இந்தக் குற்றச்செயல்கள் விசாரிக்கும் வகையிலான சர்வதேச கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக இலங்கை ஆராய வேண்டும்.

- இவ்வாறு பெண்கள் பாரபட்சமாக நடத்தப் படுவதை இல்லாதொழிப்பதற்கான ஐ.நா. சபையின் குழு இலங்கையை வலியுறுத்தியுள்ளது.

ஐ.நாவின் மனித உரிமை ஆணையகம் முன்மொழிந்திருப்பதைப் போல போரின் இறுதி நாள்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மற்றும் பெண்கள் உரிமை மீறல்களை முறையாக விசாரிக்கும் வகையிலான அனைத்துலகக் கட்டமைப்பை உருவாக்கு வது தொடர்பாக ஆராயுமாறு இந்தக் குழு இலங்கையிடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

போரின் இறுதி நாள்களில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாலியல்சார் வன்முறைகள் தொடர்பாக ஆவணமொன்றையும் இந்தக் குழு சமர்ப்பித்திருந்தது.

குறிப்பிட்ட இந்த ஆவணத்தில் குற்றமிழைத்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கான புதிய சட்ட முறைமைகள் கைக்கொள்ளப்பட வேண்டும் என இந்தக் குழு வலியுறுத்தியுள்ளது.

மோதல்களில் பாலியல்சார் வன்முறைகள் ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை மனித உரிமைகள் மற்றும் பெண்கள் உரிமைகளுக்கு எதிரான ஒரு குற்றமாகக் கருதுமாறு ஐ.நாவிடம் இந்தக் குழு கோரியுள்ளது.

பாலியல்சார் வன்முறைகளை ஒரு குற்றமாகக் கருத்திலெடுக்க மறுப்பது பாலின் அடிப்படையிலான பாரபட்சம் என வாதாடும் ஐ.நாவின் இந்தக் குழு, தற்போதைய நடைமுறையை மாற்றும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் கோரியுள்ளது. (சி)

# இலங்கை மீது போர்குற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்க ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையை சர்வதேச சமூகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இக்கடிதம் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரிட்டிஷ் பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரிக்கக் சுதந்திரமான சர்வதேச விசாரணை ஒன்று அவசியம்.

இலங்கையின் கடந்த 25 வருடகால உள்நாட்டு யுத்தத்தின்போது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் சுதந்திரமான சர்வதேச விசாரணை ஒன்றை மேற்கொள்ள தாங்கள் தங்களது எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்தி வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரியே இக்கடிதத்தை எழுதுகின்றோம்.

அமெரிக்காவின் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஏற்கனவே இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சருக்கு அவ்வாறான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரி கடிதம் எழுதியுள்ளதை தாங்கள் அறிந்திருப்பீர்கள். அதனைப் பலப்படுத்தும் வகையில் பிரிட்டிஷ் அரசும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம்.

போரின்போது இலங்கையின் மனித உரிமைகள் குறித்து ஐரோப்பிய மனித உரிமை ஆணையம் 2009 ஒக்ரோபரில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. பொலிஸாராலும், அரசில் உள்ள பொறுப்பு வாய்ந்த நபர்களாலும், பாதுகாப்புப் படையினராலும் மேற்கொள்ளப்பட்ட சட்டத்துக்குப் புறம்பான படுகொலைகள் அதி உச்சத்திலிருந்ததை அந்த அறிக்கை சுட்டிக்காட்டியது.

அரசியல் படுகொலைகள் உட்பட சட்டத்துக்குப் புறம்பான படுகொலைகள் பரந்தளவில் நடைபெற்றதை அது எடுத்துக் கூறியது. அது அரசியல், குடியியல் உரிமைகள் ஆகியவற்றை ஒடுக்கியது. படையினரால் திட்டமிடப்பட்ட சட்டத்திற்குப் புறம்பான படுகொலைகள் அரசுடன் தொடர்புடைய இராணுவத் துணைக் குழுக்கள், பொலிஸார் ஆகியோரால் மேற்கொள்ளப்படும் படுகொலைகள் குறித்தும் அது வெளிப்படுத்தியது.

அதே மாதத்தில் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சும் ஓர் அறிக்கையை வெளியிட்டது. அதில் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டியிருந்த ஏராளமான குற்றங்கள் பட்டியலிடப்பட்டிருந்தன.

பொதுமக்கள் மீதும், மனித உரிமை அமைப்புக்களின் நிறுவனங்கள் மீதும் மேற்கொள்ளப் பட்ட திட்டமிடப்பட்ட குண்டுத் தாக் குதல்கள், குழந்தைப் போராளிகளைப் பயன்படுத்துதல், ஆயுதந் தாங்காத பொதுமக்களையும் முன்னாள் போராளி களையும் சட்டத்துக்குப் புறம்பாகத் தடுத்து வைத்தல், துஷ்பிரயோகம் செய்தல், கைது செய்யப்பட்டவர்கள் அல்லது சரணடைந்தவர்களைப் படுகொலை செய்தல், தனிப்பட்ட காணாமல் போதல்கள் ஆகியவை குறித்தும் அது அறிக்கையிட்டிருந்தது.

ஆகவே போரின் இறுதிக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்து போதுமான அளவு ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது குறித்த விசாரணைகள் சுதந்திரமாக மேற்கொள்ளப்படும் என நாங்கள் நம்புகிறோம்.

உலகம் முழுவதும் உள்ள எமது நண்பர்கள் நம்புவது போலவே சுதந்திரமான விசாரணை ஒன்றுதான் நம்பிக்கையையும், நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இலங்கையின் மனித உரிமை துஷ்பிரயோகம் குறித்த கடந்தகால விசாரணைகள் வெற்றியளிக்கவில்லை; நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை. இதனால்தான் உலகம் முழுவதுமுள்ள அமைப்புகள் சர்வதேச விசாரணையை வேண்டி நிற்கின்றன.

உள்நாட்டில் விசாரணை நீதியான முறையில் நடத்தப்படாதபோது - அரசியல் வலு நியாயமானதாக இல்லாத போது குற்றஞ்சாட்டப்பட்ட விடயங்கள் குறித்து விசாரிக்க சர்வதேச விசாரணை ஒன்று அவசியம். அவை இல்லாதபோது உள்நாட்டு மோதல்களுக்கு இலங்கையின் மாதிரியை ஏனைய நாடுகளும் பின்பற்ற முனையும் என சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமைகள் குறித்து விசாரிக்கவும், காணாமல் போனவர்கள் குறித்து விசாரிக்கவும் என 1991இலிருந்து ஏற்கெனவே இவ்வாறான ஒன்பது விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. அரசின் தலையீடு, தாமதமான விசாரணை, நற்பெயரை இழந்தமை ஆகிய பல்வேறு காரணங்களால் ஆணைக்குழு உறுப்பினர்கள் பலர் தாமாகவே பதவி விலகினர் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையின் விசாரணைக்குழு ஏற்புடையதல்ல என்று மூத்தோர் அவையைச் சேர்ந்த டெஸ்மன்ட் டுட்டுவும், லக்தார் பிரகிமியும் தெரிவித்துள்ளனர். அதன் காரணமாக சர்வதேச விசாரணை ஒன்று அவசியம் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

காங்கிரஸ் உறுப்பினர்கள் இது தொடர்பில் இராஜாங்கத் திணைக்களத்துக்கு எழுதியுள்ளமை சர்வதேச சமூகத்தின் விருப்பத்தை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. அதுதான் பிரிட்டனினதும் பெரும் ஈடுபாடாக இருக்க முடியும். நீண்டகால இனப்பிரச்சினைக்கும் ஒரு நிரந்தரத் தீர்வைத் தரக்கூடியதாக இருக்கும்.

எவ்வாறாயினும் முழு உண்மைகளையும் தெரிந்தும் புரிந்தும் கொண்டாலே சமாதானத்தை எட்டலாம் என நாம் நம்புகிறோம்.

இத்தகைய காரணங்கள் பலவற்றாலும் பாரபட்சமற்ற முறையிலும் ஆரோக்கியமான வகையிலும் சுதந்திரமான சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்பட்டு அதன் ஊடாக போரின்போது என்ன நடைபெற்றது என்ற முழு உண்மையும் வெளிக்கொணரப்பட வேண்டும்.

அதுதான் இலங்கையின் நிரந்தரமான சமாதானத்துக்கு ஆதரவாக அமையும். எனவே அவ்வாறான விசாரணை ஒன்றுக்கு பிரிட்டன் ஆதரவு அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடிதத்தில் 41 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒப்பமிட்டுள்ளனர்.(த-சி)

**Doctor on Call** Home Visiting Service

வைத்தியரை அழையுங்கள்

நீங்கள் : MBBS Doctors on your service

அடிக்கடி வைத்திய உதவி தேவைப்படும் நபராயின்,

வைத்திய சாலை செல்ல முடியாத நோயாளியாயின்,



வைத்தியரை உங்கள் வீட்டிற்கே அழைத்திடலாம்

வைத்திய உதவி உங்கள் ஒரு அழைப்பில் 0777302882

முக்கிய குறிப்பு. முற்பதிவு செய்வதன் மூலம் முன்னுரிமை.**

இது ஒரு அவசர சேவை அல்ல.நோயாளியின் அமைவிட தூர எல்லை, சேவை நேரம் என்பனவற்றின் அடிப்பண்டயில் கட்டணம் தீர்மானிக்கப்படும். இச்சேவையை வழங்குவதும் மறுப்பதும் எமது நிறுவனத்தின் உரிமையாகும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

### வைரமுத்து சரஸ்வதி



தோற்றம்
05.07.1922

மறைவு
19.01.2011

கடந்த 19.01.2011 அன்று அன்னார் இறைபதமடைந்த செய்திகேட்டு ஓடிவந்து உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தபால் மூலமும் தொலைபேசியூடாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (18.02.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது வீட்டில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்வதுடன் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கேணியடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

மகன், குடும்பத்தினர்
மற்றும் சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை ராஜேந்திரம்



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் 4 1/9, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணையை நிரந்திர வதி விடமாகவும் கொண்ட செல்லத்துரை ராஜேந்திரம் நேற்று(17.02.2011) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் செல்வநாயகியின் அன்பு மகனும் அன்னலட்சுமியின் (பிறஸ் அன்ரி) அன்புக் கணவரும் டர்ஜினி (கலைப் பிரிவு, பெரியபுலம் மகாவித்தியாலயம்), கஸ்தனி (உயிரியல் பிரிவு, வேம்படி மகளிர் கல்லூரி), நிருத்தனி (இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தெய்வேந்திரம், பாக்கியநாதன், நாகபூஷணி, காலஞ்சென்ற பத்மநாதனின் சகோதரரும் சறோஜினிதேவி, தனலட்சுமி, திருமகள், பரமேஸ்வரன் (சிறி முருகன் களஞ்சியம், யாழ்ப்பாணம்), கேதீஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2011) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க.பரமேஸ்வரன்
(மைத்துனர் -சிறிமுருகன் களஞ்சியம்,
யாழ்ப்பாணம்)

## மரண அறிவித்தல்

### பாலராமப்பிள்ளை புவனேஸ்ரி (பூமணி)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவரும் தற்போது நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலராமப்பிள்ளை புவனேஸ்வரி நேற்று (17.02.2011) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - பாக்கியம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற பாலராமப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி, செல்லத்துரை, செல்லமணி, வேதமணி, தணிகாசலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுரேந்திரன் (கனடா), காலஞ்சென்ற புலேந்திரன் மற்றும் இந்திராவதி, கஜேந்திரன், சத்தியவதி, யோகேந்திரன் (கனடா), பிருந்தாவதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் சேலி (கனடா), வணகேஸ்வரி (கனடா), நடராஜா (ஓய்வுபெற்ற சாரதி - RDA, வனிக்கா மெடிக்கல்), சந்திரபாலிகை, கதிர்காமர் (ஊழியர், யாழ். மாநகர சபை), சங்கீதா(கனடா), சிவா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் சிரோமினி (கனடா), ஜெரி (கனடா), ஜெரோ (கனடா), ரூபன் (கனடா), கோகுலன் (உத்தியோகத்தர்- RDA), விதுஷா, சர்மிளா - ராஜ்குமார் (டோகா), மிராஜ்ஜினி, தவச்செல்வன் (சுவிஸ்), அச்சுதன், (மாணவன், யாழ். மருத்துவபீடம்), பிரகலாதன் (மாணவன், J.H.C), சங்கீதா, சயந்தா, விஷ்ணு (கனடா), தட்ஷாயினி (கனடா), தாரணி (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2011) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணியளிவில் செம்மணி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

64, யமுனா வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன் தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களி லும் வானம் தெளிவாகக் காணப்படுவதுடன் பகல் நேர வெப்பநிலை அதிகரித் துக் காணப்படும்.

# சக்தி மிக்க அரசை உருவாக்க அனைவரும் அணி திரளுங்கள்



## காரைநகரில் கரு ஜெயசூரிய அழைப்பு

காரைநகர், பெப்.18

ஐக்கிய தேசியக் கட்சி நாட்டில் புரையோடிப் போய் இருந்த இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அனைத்து இன மக்களுடனும் இணைந்து செயற்பட்டது. தொடர்ந்தும் நல்ல தீர்வினைப் பெற்றுக் கொள்ள சக்தி மிக்க அரசு ஒன்றினை உருவாக்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் அணி திரள்வோம்.

மேற்கண்டவாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கரு ஜெயசூரிய.

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள மகேஸ்வரன் தர்மசுரபி மண்டபத்தில் பெண்களுக்கான தையல் பயிற்சி நெறியை நேற்று சனிக்கிழமை ஆரம்பித்து வைத்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய.

இந்த நிகழ்வில் பண்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஊடாக கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பாலர் பாடசாலைகளுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் இல்லத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்று நேற்று இடம்பெற்றது. இதில் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, கட்சியின் பொருளாளர் டி.எம். சுவாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் யாழ். மாவட்ட உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். இங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய மேலும் தெரிவித்தவை வருமாறு:

நடைபெறவுள்ள உள்ள தேர்தல் ஒரு குட்டி அரசை உருவாக்கும் தேர்தலாகும். இதனை அடுத்து மாகாண சபை, நாடாளுமன்றம் என எமது கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தும்.

நாடு சுதந்திரம் அடைய முன்னர் பிறந்தவன் நான். அன்றைய காலங்களில் இலங்கை அணியில் தமிழர்களும் விளையாடினார்கள். இரத்தம் வழங்கும் போது இது சிங்களவருடையது அல்லது தமிழருடையது எனப் பார்ப்பதில்லை. நாம் அனைவரும் ஒரே இரத்தம்தான்.

நாம் சக்தி மிக்க அரசு ஒன்றினை உருவாக்க வேண்டும். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

நாளையும் நாளைமறுதினமும் மன்னார், வவுனியா மாவட்டங்களில் பிரசாரப் பணிகளை முன்னெடுக்க உள்ளோம். கட்சித் தலைவர் எதிர்வரும் நாள்களில் யாழ்.மாவட்டத்துக்கு விஜயம் செய்ய உள்ளார்.


யுத்தத்தில் தமிழ் மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்ட போதெல்லாம் குரல் கொடுத்தவர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன. அப்போதெல்லாம் அவர் புலி முத்திரை குத்தப்பட்டார். அவ்வாறிருந்தும் தமிழ் மக்களுக்காகப் பாடுபட்டு வந்தார்.

அமரர் மகேஸ்வரன் யாழ். மாவட்ட மக்களுக்கு ஆற்றிய சேவைகளைக் கண்கூடாகக் கண்டவன் நான். அதேபோன்று அவருடைய பாதையில் விஜயகலா மகேஸ்வரனும் சேவைகளைத் தொடர்கின்றார். மிகக் குறுகிய காலத்தில் யாழ்.மாவட்டத்தில் துடிப்பு மிக்க இளைஞர்களைத் தேர்தலில் களமிறக்கி உள்ளார். இவர்கள் அனைவரும் யாழ்.மாவட்ட மக்களுக்குச் சேவை செய்யக் கூடியவர்கள் - என்றார். (த-250-86)

## பிரிட்டனில் தொழில் புரிய செல்வோருக்கு கட்டுப்பாடு

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைத் தவிர்ந்த ஏனைய நாடுகளில் இருந்து உழைக்க வருவோரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் வகையில் பிரிட்டிஷ் அரசு தொழில் விசாக்களை வழங்கும் நடைமுறையில் சில மாற்றங்களைக் கொண்டுவர உள்ளது.

இதன்படி, தொழில் வழங்குநர் அனுசரணைச் சான்றிதழை பிரிட்டிஷ் எல்லைக் காப்பு படையினரிடம் இருந்து பெற்றுக்கொண்ட பின்னரே வெளிநாடுகளில் இருந்து தொழில்களுக்குப் பணியாளர்களை அழைத்துவர முடியும். பிரிட்டிஷ் தொழில் விசாக்கள் வழங்கும் நடைமுறையில் மேற்கண்ட மாற்றங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



காரைநகர் வேதரடைப்பு பாலர் பாடசாலைக்கான விளையாட்டு உபகரணங் களை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பிரதித் தலைவர் கரு ஜயசூரிய நாடாளுமன்ற உறுப்பினர்களான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் இணைந்து மாணவர்களிடம் கையளிக்கின்றனர். (த 250)

# 26 இந்திய மீனவர்களுக்கும் மார்ச் 1 வரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம், பெப்.18

மாதகல் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது மாதகல் மீனவர்களால் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் 26 பேரையும் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு மாதகல் கடற்பரப்பில் வைத்து அந்தப் பகுதி மீனவர்களால் பிடிக்கப்பட்ட 26 இந்திய மீனவர்களும் இளவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இளவாலைப் பொலிஸார் அவர்களை நேற்று மல்லாகம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்தனர். இவர்களை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இந்திய மீனவர்களில் சிலர் காயமடைந்திருந்தமையால் அவர்களைச் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

முன்னதாகப் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் அனைவரும் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போது இவர்களில் ஒருவரது உடம்பிலும் தலையிலும் கையிலும் எரிகாயங்கள் காணப்பட்டன. பெற்றோல் கானைக் கொளுத்தி தம்மீது இலங்கை மீனவர்கள் எறிந்ததாகவும் அதனால் தான் எரிகாயத்துக்கு உள்ளானதாகவும் அந்த இந்திய மீனவர் தெரிவித்தார்.

இதனைத் தவிர போத்தல்களால் வெட்டப்பட்டமைக்கான காயங்கள், அடிகாயங்கள் என்பனவும் மேலும் இந்திய மீனவர்களின் உடம்பில் காணப்பட்டன.

இதேவேளை, குறித்த இந்திய மீனவர்கள் 26 பேருக்கும் நேற்றுக்காலை உணவு வழங்கப்பட்ட பின்னர் மாலை வைத்தியசாலையில் பரிசோதனை செய்யும்வரை உணவு கிடைக்கவில்லை என அவர்கள் தெரிவித்தனர். தமக்கு இந்தியத் தூதரகத்தினால் உணவு வழங்கப்படவுள்ளதாகவும் இந்திய மீனவர்கள் தெரிவித்தனர். (த-15)

## புகைப்படக் கலைஞர்களுக்கான பயிற்சிமுகாம் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், பெப்.18

மிஷன் டி விஷன் நிறுவனத்தினரால் புகைப்படக் கலைஞர்களுக்கென யாழ்ப்பாணம் நல்லூர் சொர்ணாம்பிகை மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த டிஜிற்றல் புகைப்படப் பயிற்சிமுகாம் தவிர்க்க முடியாத காரணங்களால் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதே மண்டபத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் என ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

# நிகழ்வுகள்

### அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.18

சுதுமலை தெற்கு முதியோர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை சுதுமலை மத்தி சனசமூக நிலையத்தில் கிராம உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வலி.தென் மேற்குப் பிரதேச செயலர், சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-313,115)

### ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்ப்பாணம், தீவகம், தென்மராட்சி வலயங்களைச் சேர்ந்த க.பொ.த உயர்தரத்துக்கு தமிழ் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் முற்பகல் 10மணி தொடக்கம் பிற்பகல் 5மணிவரையும் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ற-313,15)

### கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்.மாவட்டச் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் கல்விக்கருத்தரங்கு நாளை சனிக்கிழமை சங்கானைப் பிரந்தியத்தில் நடைபெறவுள்ளது.

'பொருளாளர் பயிற்சி' எனும் தலைப்பில் நடைபெறவிருக்கும் இக் கல்விக் கருத்தரங்கில் அனைத்து கூட்டுறவு உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ற-311)

# நாளாந்தம் லொறிகளில் ஏற்றப்படும் சிமெந்துத் தொழிற்சாலை இரும்புகள்

யாழ்ப்பாணம், பெப்.18

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் உள்ள பெருந்தொகையான இரும்புகள் தினமும் கனரக வாகனங்களில் ஏற்றப்பட்டு அங்கிருந்து அகற்றப்பட்டு வருவதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் மூலம் தெரிய வருகின்றது.

கடந்த ஒருமாத காலமாக ''இந்தக் கைங்கரியம்'' நடைபெற்று வருகின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை கடந்த 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் இயங்கவில்லை. அதனைத் தொடர்ந்து அந்தக் காலப் பகுதியில் சிமெந்து நிறுவனத்துக்கு உரித்தான சுமார் 250 ஏக்கர் நிலப்பகுதியை இராணுவத்தினர் தம்வசப்படுத்தி முகாமிட்டிருந்தனர்.

தற்போது அந்த வளாகத்திலிருந்து இராணுவத்தினர் படிப்படியாக வெளியேறி வருகின்றனர். இந்த நிலையிலேயே சிமெந்துத் தொழிற்சாலையின் இரும்புகளை அகற்றும்பணி முழுவீச்சில் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒரே சமயத்தில் நான்கு அல்லது ஐந்து கனரக லொறிகளில் அங்கிருந்து இரும்புகள் ஏற்றப்படுகின்றன என்றும் தொழிற்சாலை வளாகத்தில் வைத்து இரும்பு உபகரணங்கள் வெட்டப்பட்டு அவற்றின் நிறை அளவிடப்பட்டே லொறிகளில் ஏற்றப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது. தென்னிலங்கையைச் சேர்ந்த வியாபாரி ஒருவருக்கே அவை விற்கப்படுவதாக அறியவந்தது.

தனியார் எவரும் இரும்புகளை எடுத்துச் செல்வதாயின் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டும் என்ற மிக இறுக்கமான நடைமுறை உள்ள போதிலும் சிமெந்துத் தொழிற்சாலையில் உள்ள இரும்புகள் மிகவும் சுலபமாக யாழ்ப்பாணத்துக்கு வெளியே எடுத்துச் செல்லப்படுவதாகக் கூறப்படுகின்றது. (ஒ-14)

# கடற்றொழில் அமைச்சரை யாழ்.மீனவர்கள் சந்திப்பர்

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனரத்னவைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இதற்கான அனுமதி மற்றும் ஒழுங்குகளை செய்து தருமாறு கோரி யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம், யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆர்.ரவீந்திரனுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். கடந்த 14ஆம் திகதி திங்கட்கிழமை இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் வடபகுதிக் கடலில் அத்துமீறி நுழைந்து தடைசெய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதுடன் இங்குள்ள மீனவர்களின் வலைகளையும் அறுத்துச் சேதப்படுத்தியுள்ளனர். இந்திய மீனவர்களின் இந்தச் செயற்பாடுகளை உடன் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தவே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகச் சமாசத் தலைவர் தெரிவித்தார். (த-14)

# ஐ.தே.க. பிரசாரக்குழு இன்று வன்னி செல்கிறது

யாழ்ப்பாணம், பெப்.18

உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதற்காக ஐ.தே.கவின் பிரதித்தலைவர் கரு ஜயசூரிய தலைமையிலான குழுவினர் இன்று வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட ஐ.தே.க.வின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான டி.எம்.சுவாமிநாதன், திருமதி விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட குழுவினர் இன்று வன்னிக்கு விஜயம் செய்கின்றனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களுக்குச் செல்லும் இந்தக் குழுவினர் அந்த மாவட்டங்களில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களையும் பொதுமக்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

கடந்தவாரம் வரை பெய்த கடும் மழை காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களையும் இவர்கள் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். (த-86)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள்; சுமுகமான தீர்வைப் பெற்றுத் தருக

இலங்கை, இந்திய அரசுகள், மீனவச் சங்கங்களுடன் பேச்சுகள் நடத்தி இந்திய மீனவர்களில் அத்துமீறல்களுக்கு சுமுகமான தீர்வை விரைவாகப் பெற்றுத்தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் யாழ். மாவட்டத்தில் உள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஒருமனதாக கோரிக்கை விடுத்துள்ளன.

இந்திய மீனவர்களில் அத்துமீறல் தொடர்பாக ஆராய்ந்து தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று மாலை 5 மணியளவில் பருத்தித்துறை புனித தோமையர் ஆலய முன்றிலில் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் அ. எமிலியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்துகொண்டார்.

இலங்கை கடல் எல்லையில் கடற்படையினரும், இந்தியக் கடல் எல்லையில் இந்திய கரையோரப் பாதுகாப்புப் படையும் இருதரப்பு மீனவர்களும் எல்லை தாண்டாமல் பாதுகாக்க வேண்டும். இழுவைப்படகுகள் மூலம் மடிபோட்டு மீன்பிடித்தல் நிறுத்தப்படவேண்டும். எமது கடல்வளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பன போன்ற அம்சங்களை கூட்டத்தில் கலந்துகொண்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகள் வலியுறுத்தி விளக்கமளித்தனர். அத்துடன் இருதரப்பு அரசுகள், மீனவர் சங்கப்பிரதிநிதிகளுடன் பேசி இந்திய மீனவர்கள் கடல் எல்லையைத் தாண்டாமல் இருக்க பேச்சுக்கள் மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் எனவும் எடுத்துக் கூறினார்கள்.

இதனையடுத்து இரு தரப்பு அரசுகள், மீனவர்சங்கங்களுடன் பேசி சுமுகமான தீர்வை காண விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உறுதி அளித்தார். (ஒ-319-236)

25 ஆவது ஆண்டு நிறைவு விழா

உதயன்

திகதி : ஞாயிறு 20.02.2011
நேரம் : மாலை 4 மணி
இடம் : வீரசிங்கம் மண்டபம்

நிகழ்ச்சி நிரல்

4.00 பி.ப - மங்கள விளக்கேற்றல்
4.05 பி.ப - மங்கள இசை
நல்லூர் பாலமுருகன் குழுவினர்
4.25 பி.ப - வரவேற்பு நடனம்-
இராமநாதன் கல்லூரி மாணவிகள்
4.40 பி.ப - திரு.ஈ.சரவணபவன்
முகாமைத்துவ பணிப்பாளர்.
4.45 பி.ப - பேச்சு திரு.அ.குமாரவேல்
5.00 பி.ப - பரிசளிப்பும் கௌரவித்தலும்
மலர் வெளியீடும்
5.45 பி.ப - நடனம்- திருமதி சாந்தினி
சிவநேசனின் மாணவிகள்
6.15 பி.ப - பேச்சு- பிரதமவிருந்தினர்
6.30 பி.ப - நன்றியுரை
6.40 பி.ப - மெல்லிசை
யாழ்.ரமணனின் ராஜன்ஸ்
இசைக்குழுவினர்
8.30 பி.ப - நிறைவு

பிரதம விருந்தினர்:
திரு.மு.திருநாவுக்கரசு
(ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி)

கௌரவ விருந்தினர்கள்:
திருமதி இமெல்டா சுகுமார்
(யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர்)
மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க
(கட்டளைத்தளபதி யாழ்.மாவட்டம்)
திரு.காமினி சில்வா
(சிரேஷ்ட பிரதி பொலீஸ்மா அதிபர், வடமாகாணம்)

சிறப்பு விருந்தினர் :
01. 'நல்லைக் குருமணி'
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள் - நல்லை ஆதீனம்.
02. மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை - யாழ். ஆயர்.
03. மௌலவி எம்.ஐ.மஹ்மூத்
முஹமதியா ஜும்மா மஸ்ஜித்

அனைவரையும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்

## இந்திய மீனவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆஜர்படுத்தப்பட்டபோது இம் மீனவர்களை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

இந்திய மீனவர்கள் தொடர்ந்து சிறைப்பிடிக்கப்படுவதைக் கண்டித்து சென்னை, திருமங்கலத்தில் இளைஞர் காங்கிரஸ் கட்சியினர் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கலெக்டர் நகரில் நடைபெற்ற இந்த வீதி மறியல் போராட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவி எரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அத்துடன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மற்றுமொரு கொடும்பாவியை முகப்பேர் மேற்கு, அம்பத்தூர் பகுதி இளைஞர் காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஊர்வலமாக எடுத்துச்சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மீனவர் கைதை கண்டித்து இந்திய இளைஞர் பேரவை சார்பில் மதுரையில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது எனத் தமிழகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கை அரசின் தேசியக் கொடி எரிக் கப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாகை காரைக்காலில் மீனவர்கள் 2ஆவது நாளாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாகை தாலுகா மீனவர்கள் சுமார் 10 ஆயிரம் பேர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதேபோன்று காரைக் காலிலும் ஆயிரக்கணக்கான மீனவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர் எனவும், இலங்கை மீனவர் மற்றும் கடற்படையினரின் அடாவடித்தனத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அந்த மீனவர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-சி)

PHYSICS By. M. KARUNANITHY
2013 A/L அளவீடுகள் English Medium
தமிழ்மொழி மூலம் Wed-4.00, Thu-5.00
ஆரம்பம் : 19.02.2011 Sat.
Sat-Sun 3.00
NEW EDUCATION WORLD, ஆனைப்பந்தி.
20YEARS PASTPAPER
பெற்றுக்கொள்ளலாம். (English Medium) அலகுரீதியாக

S.L.E.S. விசேட கருத்தரங்கு
மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கான விடய ஆய்வு
ஏ. மகேந்திரன் (முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளர், SPMP செயற்திட்ட முகாமையாளர்)
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். போதனா வைத்தியசாலை எதிரே)
சனி - ஞாயிறு 02 - 05 மணிவரை.

யாழ்.மண்ணில்... திண்டுக்கல் ஐ.லியோனியின்
நகைச்சுவைப் பட்டிமன்றம்



17.02.2011
யாழ்.வீரசிங்கம் மண்டபம்
மாலை 3 மணி
அச்சுவேலி இராஜ மாணிக்கம் கல்யாண மண்டபம்
மாலை 6.30 மணி
18.02.2011
வடமராட்சி நெல்லியடி
ம.மகா வித்தியாலயம்
மாலை. 5 மணி
ரிக்கெற் 200/-, 300/-, 500/-, மாணவர்களுக்கு 100/-
ரிக்கெற் மண்டப வாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.



பொருளியற் கல்லூரியின் வாழ்த்துக்கள்

பிரபல ஆசிரியர் திரு. சுதன் B.A (Hons, History Spl.) P.G.D.E அவர்களின் உருவாக்கத்தில் தமிழ் மொழியிலே மாணவர்களுக்கு முதல்த் தடவையாக இலங்கை வரலாறு (1000 வினா - விடைகள்) என்னும் நூலை நேற்றைய தினம் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி ப.புஸ்பரட்ணம் அவர்களால் வெளியிட்டு வைத்ததையிட்டு வாழ்த்துக்கள் தெரிவிப்பதோடு எங்கள் மதிப்பிற்குரிய சுதன் ஆசிரியர் அவர்கள் மேன்மேலும் இவ்வாறான பல ஆக்கங்களை வெளியிட்டு உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள்
பொருளியற் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/576108)

## நீதிமன்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுப்பதற்கு வசதியாகப் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கு இரு தரப்பினரும் தயாராகி வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

வடக்குக் கடற்பரப்பில் தடைசெய்யப்பட்டுள்ள இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி இந்திய மீனவர்கள் நூற்றுக் கணக்கில் வந்து தொழிலில் ஈடுபடுவதால், அந்தப் பகுதியில் மீன் வளங்களும் பவளப் பாறைகள் போன்ற கடல் வளக் கட்டமைப்புகளும் சிதைவடைவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதனால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டுவந்த வடபகுதி மீனவர்களே இந்திய மீனவர்களைப் பிடித்து அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளதாகவும், இந்திய மீனவர்கள் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பெருந்தொகையான இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் வந்து செல்வதைக் காட்டும் செய்மதிப்படங்கள் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் மீன்பிடித்துறை அமைச்சர் கூறுகிறார்.

இதேவேளை, இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டுக்கள் பற்றிய விசாரணைகள் எந்த மட்டத்தில் இருக்கின்றன என்று கேட்டதற்கு பதிலளித்த அமைச்சர்.

கடலில் நடந்த சம்பவமொன்று தொடர்பில், விசாரணை நடத்தி இலகுவாக கண்டறிய முடியாது என்று கூறினார். (த-10)

## இந்திய மீனவரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தெரி வித்தார்.

இன்று (நேற்று) இலங்கை யில் விடுமுறை நாள் என்பதால் நீதிமன்றங்கள் மூடப்பட்டுள்ளன.

நாளை (இன்று) வெள்ளிக்கிழமை நீதிமன்றங்கள் மீளத் திறக்கப்படும் போது 136 மீனவர்களையும் விடுதலை செய்ய இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாடு நேற்றுக்காலை பத்தரமுல்ல, பெலவத்தையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

தமிழ்நாட்டில் தேர்தல் அண்மித்துள்ள இச்சந்தர்ப்பத்தில் ஆளும் தி.மு.க. அப்பாவி மீனவர்களைப் பயன்படுத்தி அரசியல் லாபம் பெற முயற்சிக்கின்றது. இலங்கை அரசு இந்தியாவுடன் வளைந்து கொடுக்கும் போக்கைக் கடைப்பிடிக்காமல் மீனவர் பிரச்சினைக்கு நிலையான தீர்வைக் காண முயற்சிக்க வேண்டும்.

மீனவர் விவகாரத்தில் இலங்கை அரசு அவ்வப்போது சில இணக்கப்பாடுகளை மேற்கொண்டபோதும் அது நிரந்தரத் தீர்வாக அமையவில்லை. இலங்கை மீனவர் இந்தியக் கடற்பரப்புக்குள் அத்தமீறி நுழைவதும், இந்திய மீனவர்கள் இலங்கை கடற் பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடிப்பதும் தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்து மீறி நுழைந்து மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்களை இலங்கை மீனவர்கள் சுற்றிவளைத்துப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அரசு நடவடிக்கை எடுக்காத நிலையிலேயே அவர்கள் இதைச் செய்துள்ளனர்.

மீனவர் கைது காரணமாக தமிழ்நாட்டில் போராட்டங்கள் வெடித்துள்ளன. இந்திய மீனவர் இருவர் கொல்லப்பட்டதன் காரண மாகவே சென்னையிலுள்ள மகாபோதி மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இவற்றைக் கருத்தில்கொண்டு இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண இலங்கை அரசு இந்திய அரசுடன் பேச்சு நடத்தவேண்டும்.

எமது அரசு மீனவர்களையும் ஏமாற்றியது. எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப் பட்டபோதும், மீனவர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படும் என அறிவித்தபோதும், வழங்குவதாக உறுதியளித்த மானியம் வருடங்கள் பல கடந்த நிலையிலும் மீனவர்களுக்கு இன்று வரை அரசால் வழங்கப்பட வில்லை.

இந்த நிலையில் இலங்கை மீனவர்கள் பலர் சோமாலிய கடற்கொள்ளையர்களால் சிறைப் பிடிக்கப்பட்டுள் ளனர். சிலர் கொள்ளையர்களால் சுட்டுக் கொல்ல ப்பட்டுள்ளனர். இவை குறித்தும் அரசு பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை -என்றார். (த-சி)

## இந்திய மீனவர்கள் விவகா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காக தாம் வருந்துவதாகவும் என்னிடம் தெரிவித்திருந்தனர்.

* தமிழக மீனவ உறவுகள் விடுவிக்கப்பட்டு அவர்களை வீடு திரும்ப அனுமதிப்பதற்கான முயற்சிகளில் நான் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றேன். எனது முயற்சிகள் வெற்றியளிக்கும் என்றும் நம்புகின்றேன்.

* கடல் எல்லைகளை தாண்டும் தவறான செயல்களை முழுமையாகத் தடுத்து நிறுத்துவதன் ஊடாக தமிழக மற்றும் இலங்கை மீனவ மக்களுக்கு இடையிலான தகராறுகளையும் தடுத்து நிறுத்தி நீடித்த நேச உறவுகளை வளர்க்கவும் முடியும் என நான் நம்பு கின்றேன். இதற்கு தங்களின் ஒத்துழைப்பும் கட்டாய தேவையாகும்.

* இரு தரப்பு மீனவ மக்களிடையேயும் நிரந்தரமான நேச உறவுகளை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட நேரடியாகவே உங்கள் பிரதிநிதி ஒருவர் இங்கு அனுப்பி வைக்கப்படுவது வரவேற்கத்தக்க விடயமாகும்.

* தங்களின் பிரதிநிதியாக ஒருவர் இங்கு வரும்போது இரு தரப்பு மீனவ மக்களும் பகைமை மறந்து பரஸ்பரம் புரிந்துணர்வோடு செயற்படுவதற்கான சூழல் ஒன்றை உருவாக்கும் இணக் கப்பேச்சுக்களுக்கான ஏற்பாட் டாளராக நான் செயற்படுவேன் என்றும் உறுதியுடன் உங்களிடம் தெரிவிக்க விரும்புகின்றேன் - என்றுள்ளது. (ஒ)

## மரண அறிவித்தல்கள்

### ஐயாத்துரை வள்ளிநாயகி



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை வள்ளிநாயகி நேற்று (17.02.2011) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், கனகலிங்கம், பத்மநாதன் மற்றும் ராஜேஸ்ரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மதனரூபி, தேவராணி, நகுலானந்தன் (சுவிஸ்), காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் கிரிதரன் (கனடா), காலஞ்சென்ற கிருசா, சியாமளா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் விஜயபாலன் (லண்டன்), நாகநந்தினி (சுவிஸ்), தேவறஜனி (கனடா), செல்வக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் ஜெயபாணு (தொழில்நுட்பவியலாளர்- கைதடி, சித்த மருத்துவக் கல்லூரி), ஜெயமதனா (லண்டன்), ஜெயமலர், அனுஷன் (உதவி முகாமையாளர்- ஜனசக்தி காப்புறுதி), அனுஷியா, அனிதா (கனடா), வாமணன் (மாணவன், யா/ இந்துக் கல்லூரி), விதூர்ஜன் (மாணவன், யா/ இணுவில் இந் துக் கல்லூரி), நிரூபன், நிதூர்ஜன், நிவேதன் (சுவிஸ்), நேசராஜ், துவாரகா, திணேஷ்ராஜ், சுஜிதா (கனடா), செந்தமிழ்மாறன், தமிழரசி, செந்தாளன், தமிழினி (ஜேர்மனி), குகானந்தன் (முகாமையாளர்- நல்லூர் ப.நோ. கூ. சங்கம்), சிறிதரன் (லண்டன்), சொரூபன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஐதுர்சஜனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு,
இணுவில். (489)

தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னத்தம்பி - சின்னம்மா



வேலணையைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னம்மா நேற்று (17.02.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, தங்கம்மா, பூரணம், நாகேந்திரம் ஆகியோரின் சகோதரியும் மரியபவளம், இராசதுரை, கமலாதேவி, பரமேஸ்வரி காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் மல்லிகாதேவி, தங்கவேல் ஆகியோரின் பாசமிகு தாயும் காலசென்ற சரவணமுத்து மற்றும் மகாலட்சுமி, சுப்பிரமணியம், முருகையா, துளசிமலர் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் ஸ்ரீரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியும் சறோஜாதேவி, சசிகலாதேவி, சர்மலாதேவி, நடேசலிங்கம், பவளராஜ், கருணாவதி, சுந்தரலிங்கம், கஜேந்தினிதேவி, ரகுணாதேவி, ஜெயகாந்தன், ஜெயதர்ஜினி, ஜெயசுதர்சன், ஜெயசுதர்ஜினி, ஜெயகங்காஜினி, குமுதா, சுபாஸ், சுரேஸ், சுபாஜினி, சுதர்சினி, சுகந்தினி, தயாநந்தினி, துதீஸ்கரன், சுகந்தினி, பிரசாந்தினி, கிருஸ்ணானந்தி, கிரிசாந்தி, திவ்யா, திவ்யன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கயல்விழி, மயூரன், நிதர்சன், நிறோஜன், நிலுஜா, பிரசாந்தன், பிரதீபன், யதுர்ஷன், ஜனோஜன், வினோஜன், அனோஜன், அபிஷன், ஸானுஜன், தாரூகா, நிவேதா, மதுஷன், மதுஷா, பவிஷா, விதுஷன், நிதர்சன், வம்சிகா, லதுஷன், பைரவி, சுயன் ஆகியோரின் பூட்டியும் திபிஷனின் கொப்பாட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2011) வெள்ளிக்கிழமை ந.ப 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு, முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவசக்தி கோயிலடி, அச்சுவேலி
தெற்கு, அச்சுவேலி. (சி/576112)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.